Magenta 150 lpi at 75 degrees
Black 150 lpi at 45 degrees
www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමී
Puthiya Poomi

சுற்று 15 செப்ரெம்பர் 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 117







## வன்னிப் பேரவலம்

- இரண்டு லட்சம் மக்கள் கடுமையான பாதிப்பு
- வெளியேறுதல் முடிவு சுதந்திரமானதாக இருக்கவேண்டும் மக்கள் மனிதக் கேடயமாகப்படக்கூடாது.
- நிவாரணப் பணிகளுக்கு ஐ.நா நிறுவனம் உட்பட ஏனைய தொண்டர் அமைப்புகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- அரசாங்கம் போதிய உணவும் மருந்துகளும் அனுப்பி வைக்க வேண்டும்.
- யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளால் பேரவலத்திற்குள்ளாகியிருக்கும் வன்னிப் பிரதேச மக்கள் அங்கிருந்து வெளியேறுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரமுடையவர்களாவர் என்பது ஏற்கப்பட வேண்டும். வெளியேறுவதாயின் தாக்குதல், பாதுகாப்பு கெடுபிடிகள் போன்றவற்றுக்குள்ளாக்கப்படாமல் சுதந்திரமாக அவர்கள் விரும்பும் இடங்களுக்கு சென்று வாழ அனுமதிக்கப்பட வேண்டும். எந்தவொரு தரப்பினாலும் அம்மக்கள் மனிதக் கேடயமாகப் பாவிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அத்துடன் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குரிய நிவாரணங்களையும் உதவிகளையும் வழங்கும் நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஈடுபட ஐ.நா சபையின் முகவர் நிறுவனங்களும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் அனுமதிக்கப்பட வேண்டும். அதே வேளை அரசாங்கம் வன்னி மக்களுக்கான உணவு வகைகளையும் நிவாரண உதவிகளையும் தாமதம் இன்றி வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தையின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே சமாதானமான ஐக்கிய இலங்கையை கட்டி வளர்ப்பதற்குள்ள சரியான தெரிவாகும்.

யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன் அவர்களின் வாழ்வதற்கான அடிப்படை ஆதாரங்களும் உறுதி செய்யப்பட வேண்டும். தற்போதைய இராணுவ தாக்குதல் நடவடிக்கைகள் பெரும் எண்ணிக்கையானவர்களைப் பலிகொடுப்பதாகவோ பலியெடுப்பதாகவோ அமைந்துவிடக்கூடாது. கடந்த 30 வருடங்களாகப் பாதுகாப்பற்று அகதிகளாக அலைந்து திரியும் மக்களை நிரந்தரமான அகதிகளாகவும் அடிமைகளாகவும் ஆக்கும் நிலைமை ஏற்படுவிடக்கூடாது.

அரசாங்கப் படைகளின் இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள குறிப்பாக வன்னிப்பகுதியிலுள்ள மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக பாரிய பாதிப்புகளுக்குள்ளாகி வருகின்றனர். தற்போது உக்கிரமடைந்துள்ள இராணுவ நடவடிக்கைகளினால் மக்களை அங்கிருந்து வெளியேறி வவுனியா மாவட்டத்திற்கு வரும்படி அரசாங்கப் பாதுகாப்பு படையினர் கேட்டுள்ளனர். அங்கிருந்து வெளியேற வேண்டாம் என்றும் இறுதிப் போராட்டத்திற்கு தயாராகும்படியும் மக்களை த.வி.பு. இயக்கம் கேட்டுள்ளது.

தாக்குதல்களால் மரணங்கள் படுகாயங்கள் மரண அச்சம் இடப்பெயர்வு சுகாதார வசதியீனம், உணவின்மை தங்குமிடவசதியின்மை போன்றவற்றால் வன்னியில் மனிதப் பேரவலம் ஏற்பட்டுள்ளது. ஐ.நா முகவர், நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் அப்பிரதேசங்களில் சுதந்திரமாக இயங்க முடியவில்லை.

இரண்டு லட்சம் வரையான மக்கள் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் இன்றி இருக்கின்றனர். அவர்களது நாளாந்த வாழ்க்கை எவ்விதத்திலும் நிச்சயமானதாக இல்லை. தொண்டர் நிறுவனங்கள் அங்கு இயங்கக் கூடியதாக இல்லை. அவற்றின் இயக்கங்கள் முடக்கப்பட்டுள்ளன. அங்கு என்ன நடக்கின்றன என்பதை அறிய முடியாதவாறு ஊடகங்களோ தொண்டர் நிறுவனங்களோ அங்கு செல்ல முடியவில்லை.

3ம் பக்கம்

## மன்மோகன் சிங் அரசாங்கம்
## இந்திய மக்களுக்குத் துரோகம்
### அணுசக்தி ஒப்பந்தம் அடிமை சாசனம்



இந்தியப் பிரதமர் அன்றும் இன்றும் அமெரிக்க அடிமை விசுவாசி. உலகமயமாதலின் கீழான நிகழ்ச்சி நிரலை இந்தியாவில் முன்னெடுப்பதில் வெள்ளை மாளிகையின் விசுவாசமான கூட்டாளி. உலக மக்களால் வெறுத்தொதுக்கப்படும் ஜோர்ஜ். டபிள்யூ. புஷ் மன்மோகன் சிங்கின் நம்பிக்கைக்குரிய நண்பன். எனவே தான் தனது பதவிக்காலம் முடிவதற்குள் அணுசக்தி 123 ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்து கொள்வதில் புஷ் வேகமாகச் செயலாற்றினார்.

இந்த அணு சக்தி ஒப்பந்தம் இந்தியாவின் சுதந்திரம் சுயாதிபத்தியத்தை அமெரிக்காவிடம் அடகு வைத்து செய்யப்படும் ஒப்பந்தமாகும். மன்மோகன் சிங் இவ் ஒப்பந்தத்தில் இந்தியாவிற்குப் பாதகமானவையாக இருக்கக் கூடிய பல விடயங்களை மறைத்து வந்துள்ளார். பொய்யான தகவல்களைக் கூறி இந்திய அரசியல் கட்சிகளை ஏமாற்றியுள்ளார் என்ற குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. அதனை நிரூபிப்பது போல் அமெரிக்க அரசின் வெளிவிவகாரக் குழுவின் தலைவரான ஹோவர்ட் எல் பெர்மன் இது வரை மறைத்து வைக்கப்பட்டிருந்த இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். இவற்றின் மூலம் அறியக் கூடியது யாதெனில் இந்தியாவைக் கட்டுப்படுத்தவும் சுதந்திரமான முடிவுகள் எடுக்கப்படுவதைத் தடுக்கக் கூடியதுமான பல சரத்துக்கள் அவ் ஒப்பந்தத்தில் உள்ளன. மேலும் இவ் அணு ஒப்பந்தத்தை வைத்துக் கொண்டே தனது ஏகாதிபத்திய மேலாதிக்கத்தை இந்தியா மீதும் இப் பிராந்தியத்தின் மீதும் திணிக்க வழிவகை தேடிக் கொண்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவை மறுகொலனியாக்கம் செய்வதில் அமெரிக்கா சகல வழிகளாலும் முன்னின்று வருகின்றது. 2ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





எமது தோழர்கள் வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், என். கிருஷ்ணப்பிரியன், எஸ். மோகன்ராஜ் ஆகிய ஐந்து பேரும் கைது செய்யப்பட்டு பதினேழு மாதங்கள் ஆகின்றன. பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவ் ஐவரும் மலையக இளைஞர்கள். மூவர் ஆசிரியர்கள் இருவர் மலையக ஆசிரிய நியமனத்தில் இடம் பெற்றவர்கள். இவர்கள் ஐவரும் புதிய- ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள். அதன் அரசியல் வெகுஜன செயற்பாட்டுப் போராட்டங்களில் முன்னின்ற செயற்பட்டவர்கள். வெ. மகேந்திரன் புதிய மலையகம் சஞ்சிகையின் வெளியீட்டாளரும் ஆசிரியருமாவர். ஏனையோர் அரசியல் பண்பாட்டுத் தளத்தில் கட்சியின் வேலை முறையை முன்னெடுத்தவர்கள். இத்தகைய தோழர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசியல் பழிவாங்கும் உள்நோக்குடன் "சிங்களே கொட்டிகள்" என வர்ணிக்கப்பட்டு அரசாங்கத்தால் பரப்புரை செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களுடன் நட்புக் கொண்டிருந்த காரணத்தைக் காட்டியே கைது செய்தனர். பலவாரங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்த பின் விளக்க மறியலுக்கு அனுப்பினர். இப்போது கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் அவர்கள் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கம்யூனிஸ்டுகளுக்கு சிறைச்சாலை எதுவும் புதிதல்ல. பல பத்து வருடங்களை அடக்கு முறை அரசாங்கங்களின்

# 17 மாதங்களாகியும் விடுதலை இல்லை!

## விடுதலை செய் அல்லது விசாரணை செய்

சிறைச்சாலைகளில் சித்திர வதைகளின் மத்தியில் கழித்தவர்கள் உலக கம்யூனிஸ்டுக்கள். இறுதி வரை தமது இலட்சியங்களைக் கைவிடாது உள்ளுக்குள் இருந்தவாறே வெளியில் வேலை செய்யும் தோழர்களுக்கு உத்வேகம் கொடுத்து வந்தவர்கள் கம்யூனிஸ்டுக்கள். அவர்களது சர்வதேசப் பாரம்பரியத்தின் வாரிசுகளாகவே பல நாடுகளின் சிறைகளில் கம்யூனிஸ்டுக்கள் தவம் இருந்து வருகிறார்கள். அவர்களது தவவலிமையின் முன் எந்தவொரு அடக்குமுறை அரசாங்கமும் நின்று பிடிக்க முடியாது. சிறைச்சாலையும் சிறை இருத்தலும் கொடுமையானது தான். ஆனால் கம்யூனிஸ்டுகளும் இலட்சிய வாதிகளும் தீய விடயங்களை நல்ல விடயமாக மாற்றியே வாழ்பவர்கள் அந்தப் பாரம்பரியத்திலேயே எமது தோழர்கள் இலட்சிய நம்பிக்கையோடு இருந்து வருகிறார்கள். அத்தகைய தோழர்களை வெளியே கொண்டுவர சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும். கையெழுத்தியக்கத்தை விரிவு படுத்தவும் நிதிசேகரிப்பை முன்னெடுக்கவும் வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

# நாலு நடக்கும் உலகிலே

## வரலாறு புனைதல்

அமிர்தலிங்கம் பற்றித் 26/8 தினக்குரலில் ஏ.எச்.எம் அஸ்வர் எழுதியிருந்தார். 1967ல் கல்முனை இடைத் தேர்தல் பிரசாரத்தில் அவருடன் மேடையில் இருந்தோர் பட்டியலில் 1961ல் காலமான மூதூர் பா.உ. தி. ஏகாம்பரமும் இருந்ததாக எழுதியிருக்கிறார். மேடையில் அமர்ந்திருந்ததாகச் சொல்லப்பட்ட வேறு பேர்களிலும் எனக்கு ஐயமுண்டு. அதுபோக அமிர்தலிங்கம் ஆயுதத்தின் மீது நம்பிக்கை வைக்காதவரும் ஆன்மிகத்தின் மீது பற்றுறுதி கொண்டவர் என்றும் அவர் எழுதினார். குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் வாதிகட்கு இயற்கையான மரணம் வரலாகாது என்று அமிர்தலிங்கம் பேசியுமுள்ளார். இவையெல்லாம் அவரது ஆன்மிகத்தின் வெளிப்பாடுகளாகத்தான் இருக்க வேண்டும். துரையப்பாவின் கொலை பற்றி அமிர்தலிங்கத்தின் நிலைப்பாடென்ன என்று அஸ்வர் அறியமாட்டாரா?

அதைவிட வடக்கிலும் தெற்கிலும் வன்முறை வெடித்தெழுந்த காலங்களையும் மாறிச் சாறி எழுதி வைத்திருக்கிறார்.

இறந்தோரை வலிந்து நிந்திப்பது பண்பல்ல. ஆனால் அவர்களைச் சான்றோராகக் காட்ட வரலாற்றைத் திரித்து எழுதுவது அதிலும் பண்புக் குறைவானது.

## தனக்குத்தானே பறித்த குழி

அரசாங்கத்தைப் போர் செய்யுமாறு தூண்டி விட்டதில் ஹெல உறுமயவுக்கு ஜே.வி.பிக்கும் பெரும் பங்குண்டு. அரசாங்கம் போரில் வெல்லுகிறது என்ற எண்ணங் காரணமாக சிங்கள மக்களிடையே அரசாங்கத்துக்குச் செல்வாக்கு ஓங்கியுள்ளது. போரை ஆதரித்துக் கொண்டே யூ.என்.பியும் ஜே.வி.பியும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டன. இரண்டு மாகாணங்களிலும் ஜே.வி.பி பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. யூ.என்.பியும் தோற்றுவிட்டது. போரை ஆதரிக்கிற மூன்று கட்சிகள் போட்டியிட்டால் போரைத் தீவிரமாக நடை முறைப்படுத்துகிற கட்சி வெல்லுவதில் அதிசயமென்ன? தானே வெட்டிய குழியில் ஜே.வி.பி விழுந்துள்ளது. இதிலிருந்து மீளுவதானால் ஜே.வி.பி தனது பேரினவாத அரசியலிலிருந்து விடுபட வேண்டும். நடக்கிற காரியமா?

## ஊடக மரண விசாரணை

சென்ற மாதம் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் தமிழேடுகளிலும் இணையத்தளங்களிலும் ஏன் அவர் கொல்லப்பட்டார் என்பதற்கான ஆராய்வுப் பட்டிமன்றங்கள் நடக்கின்றன. எவருமே இந்தப் படுகொலையைக் கண்டித்து ஒரு சொல்லும் எழுதியதை நான் இன்னமுங் காணவில்லை.

## சட்டமும் சாமிமாரும்

ஒலி மாசடைதல் சம்மந்தமான உயர் நீதிமன்ற வழிகாட்டலை மீறி பௌத்த விகாரை ஒன்றில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக நீதி மன்ற உத்தரவின் பேரில் பௌத்த பிக்கு தடுப்பு மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அது தொடர்பான பிணை கோரும் நீதிமன்ற விசாரணையின் போது நீதியரசர்கள் நீதி மன்ற ஆசனங்களுக்கு வந்த போது அங்கிருந்த பிக்குமார் எழுந்து நிற்கத் தவறியமை பிரச்சனைக்குரிய விடயமாகி விட்டது. ஏனெனில் அது வழமையான நடைமுறைப்படி நீதி மன்றத்தை அவமதிப்பதாகும். மறுபுறம் புத்த பிக்குமார் யாருக்காகவும் எழுந்து நிற்பதில்லை என்பது புத்த சமய மரபு. இதற்கான காரணம் உண்டு. புத்த பிக்குமார் யாரையும் வேறுபடுத்திப் பாராமல் தமது பணிகளிற் கவனஞ்செலுத்த வேண்டும் என்பது தான் அது. எனினும் அது இப்போது மதகுருமாரின் அதிகாரம் என்கிற விதமாகக் காணப்படுகிறது. இன்றைய சிங்கள- பௌத்த பேரினவாத அரசியற் சூழலில் இது புதிய முன்மாதிரிகள் சிலவற்றுக்கு வழி வகுக்கலாம். எனினும் நீதி மன்றத்தில் புத்த பிக்குமார் மட்டுமென்ன எந்தத் தேவையிருந்தாலும் நீதிக்கு முன் பணிந்து நிற்க வேண்டும் என்பதை மறுக்கும் போது சட்டமும் நீதியும் மதத்திற்குப் பணிந்து போக நேரும். இங்கே தான் புத்த மதத்திற்கான சிறப்பான இடம் என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது.

## ஐ.நா.வின் மனித அக்கறை

வன்னியின் போராற் பாதிக்கப்பட்டவர்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வர அனுமதிக்க வேண்டும் என்ற அரசாங்கக் கூக்குரலில் சில "மனித உரிமை" அமைப்புகளும் இப்போது ஐ.நா.வும் இணைந்துள்ளன. மக்கள் வர விரும்பி வராமல் மறிக்கப்படுகிறார்களா என்ற கேள்வி யாராலும் ஆராயப்படவில்லை. மக்களிற் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்கியிருக்க விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் வர அஞ்சுவது ஏன் என்று யாருக்குமே விளங்காதா? முதலில் அதைப் பற்றியும் அரசாங்கம் அவசியமான பொருட்களை அனுப்பாமல் தடை விதிப்பதையும் பற்றி இந்த மனிதாபிமானிகள் பேச வேண்டாமா? மக்களைத் தாக்கி அழிக்கும் போர் முறைகள் பற்றிப் பேச வேண்டாமா?

1ம் பக்க தொடர்ச்சி

### மன்மோகன் சிங்க அரசாங்கம்

அதற்கு மன்மோகன்சிங் அரசு முழு இந்தியாவின் கதவுகளைத் திறந்து விட மாநிலங்களின் கதவுகளை அந்தந்த முதலமைச்சர்கள் திறந்து விட்டு வருகின்றார்கள். சுத்தத் தமிழன் கருணாநிதி இந்த விடயத்தில் எல்லோரையும் முந்திக் கொண்டு தமிழகத்தை அமெரிக்கமயமாக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவின் நவ கொலனித்துவப் பிடிக்குள் இந்தியாவைக் கொண்டு வருவதில் இவ் அணுசக்தி ஒப்பந்தம் ஒரு வலிய ஆயுதமாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இந்திய இடதுசாரிகள் போர்க்கொடி தூக்கி மன்மோகன் சிங் அரசிற்கு கொடுத்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டனர். பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் எதிராகவும் வாக்களித்தனர். பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கும் இடதுசாரிகள் ஜனநாயக சக்திகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இவற்றையெல்லாம் மீறியே மன்மோகன்சிங்- சோனியா அரசாங்கம் அமெரிக்காவுடன் கைகோர்த்து நிற்கிறது. இதனைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி போராட்டப் பாரம்பரியம் மிக்க இந்திய மக்களிடமே இருக்கிறது. பாராளுமன்றப் பாதையிலான மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை விட அதற்கு அப்பாலான பரந்து பட்ட மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் இத் துரோக ஒப்பந்தத்தை முறியடித்து இல்லாமல் செய்ய முடியும். இவ் ஒப்பந்தம் இந்திய மக்களுக்கு மட்டுமன்றி தென்னாசிய நாடுகளுக்கும் குறிப்பாக இலங்கைக்கும் ஆபத்தானதாகும். அமெரிக்க- இந்திய ஆளும் வர்க்கங்கள் கை கோர்த்து நிற்பது இலங்கையின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களுக்கும் பாதகமானவைகளேயாகும். எனவே இந்திய மக்களுடன் இணைந்து இவ் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நாமும் எதிர்ப்பதே நியாயமானதாகும்.

1ம் பக்க தொடர்ச்சி

### வன்னிப் பேரவலம்

அங்குள்ள அவலம் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை அரசாங்கத்திடம் அதன் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. அரசாங்கம் அந்த அதிருப்திக்கு சரியாக பதிலளிக்காமல் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு வழிசெய்யும் வகையில் த.வி.பு இயக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபையிடம் கோரியுள்ளது.

மேலும் மக்களை யுத்தம் நடக்கும் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு இடமளிக்குமாறு த.வி.பு இயக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும்படி ஐ.நா. சபையையும் இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது. அந்த கோரிக்கையை ஐ.நா. சபை நிராகரித்து விட்டது.

ஐ.நா சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவை சந்தித்த மனிதஉரிமைகளுக்கு பொறுப்பான இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான அக்குழுவும் வன்னியிலிருந்து மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ஏற்ற பாதையை திறக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் அதன் இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க வசதியாக மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக சர்வதேச நிறுவனங்களின் உதவிகளையும் நாடுகிறது.

இவ்விதமான போக்குகளினால் மக்களே பெரும் பாதிப்புக் குள்ளாவர். இதற்கு மாறாக மக்களின் துன்பங்களை போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## அமெரிக்கத் தூதரின் மனித உரிமை அக்கறை

அமெரிக்கத் தூதுவர் றொபேட் பிளேக் மனோ கணேசனை அழைத்து அவரைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரித்ததையிட்டுத் தனது கவலையைத் தெரிவித்ததுடன் அவர் தொடர்பான நிலைமையைத் தனது நாடு உன்னிப்பாகக் கவனித்து வரும் என்றுங் கூறியுள்ளார். மனோ கணேசன் தமிழ் மக்களின் தலைவர்களில் ஒருவர் என்றும் மனித உரிமைப் பாதுகாவலர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. இதை வைத்து அமெரிக்காவுக்கு இலங்கை மனித உரிமை நிலைமைகள் பற்றி நிறைய அக்கறை உண்டு என்று நாங்கள் நம்ப வேண்டுமா?

லட்சக் கணக்கான மக்கள் கிழக்கில் இடம் பெயர்ந்த போதும் பல்லாயிரக் கணக்கானோர் பட்டினியிலும் நோயிலும் அல்லற்பட்ட போதும் அன்றைய அமெரிக்கத் தூதரின் மனிதாபிமானம் விழித்துக் கொள்ளவில்லை. இப்போது அதிலும் அதிகமானோர் வன்னியில் போரால் இடம் பெயர்ந்து தங்க நிழலின்றி அல்லற்படுகிற போதும் இன்றைய அமெரிக்கத் தூதருக்கு அது பற்றிய கவலை இல்லை.

அமெரிக்காவோ அதனுடன் சேர்ந்து நிற்கிற "சர்வதேச சமூகமோ" இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலைமை பற்றி எந்த விதமான அக்கறையும் உடையதல்ல என்பதை நாம் திரும்பத் திரும்பக் கண்டிருக்கிறோம். தமிழ் மக்கள் படும் அல்லல்கள் பற்றிப் பேசுவதை விடக் குறிப்பான சில அரசியற் பிரமுகர்களது பாதுகாப்புப் பற்றிப் பேசுவது வசதியானது. அவர்களும் நன்றி விசுவாசத்துடன் தமிழ் மக்களிடம் அமெரிக்காவை நம்புங்கள் என்று தருணங் கிடைக்கிற போதெல்லாம் பரிந்துரைக்க மாட்டார்களா?

மனோ கணேசன் மீதான அமெரிக்க அக்கறைக்கு முக்கியத்துவங் கொடுத்துச் செய்தி வெளியிடுகிறவர்கள் ஏன் தமிழ் மக்கள் படுகிற இன்னல்கள் பற்றிய அமெரிக்க அக்கறையின் மையை மட்டு மன்றி அதற்குக் காரணமான போரையும் பயங்கர வாத எதிர்ப்பு என்ற பேரில் தொடர்ந்தும் ஆதரித்து வருகிறதையும் பற்றி மக்களுக்கு விளக்கமாகக் கூற மாட்டார்கள்? அமெரிக்காவின் கரிசனையால் உச்சி குளிர்ந்து போகிற மனோகணேசனும் பிற தமிழ்த் தலைவர்களும் ஏன் இங்கே அல்லற்படுகிற தமிழ் மக்கள் பற்றிய அமெரிக்க அக்கறையீனத்தைக் கண்டித்துக் குரலெழுப்ப மாட்டார்கள்?





விற்பனையாகிறது
தேசிய கலை இலக்கியப் பேரவையின் 35 வது ஆண்டு மலர்
விலை 350/=

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மகிந்த சிந்தனை வியூகங்களும் எதிர்கட்சிகளின் இயலாமையும்

**மகிந்த சிந்தனை அரசாங்கம்** தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தி முன்னெடுக்க வகுத்துக் கொண்ட வியூகங்கள் அவர்களைப் பொறுத்தவரை பயனளித்தே வந்துள்ளன. அவ்வாறு செயல்படுவதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது முக்கிய பாத்திரத்தை வகித்து வந்துள்ளது. ஜே.ஆர். கொண்டு வந்த இந்த ஜனாதிபதி முறைமையும் வரைந்து நிறைவேற்றிய அரசியலமைப்பும் அவரது ஐக்கிய தேசியக் கட்சிக்கே குழிபறித்து தலைநிமிர முடியாதவாறு ஆக்கி வைத்திருக்கிறது. இவற்றின் விளைவை ஜே.ஆர். தனது வாரிசாக உருவாக்கி வளர்த்த ரணில் விக்கிரமசிங்கா சுமக்க முடியாது சுமந்து வரும் பரிதாபத்தைக் காண முடிகின்றது.

மகிந்த சிந்தனையின் அரசியல் மூளைகள் வகுத்த உபாயங்களில் முதலாவது தமது பாராளுமன்றப் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவது. அதன் வழியில் மலையகத்தின் இரண்டு தொழிற்சங்க அரசியல் தலைமைகளுக்கும் தாராளமாக அமைச்சர் பதவிகள் கொடுத்து அரசாங்கத்தில் அங்கம் பெற வைத்தமையாகும். எப்பொழுதும் பதவிக்காக எந்த அரசாங்கத்திலும் அங்கம் பெறுவதில் வெட்கப்படாத அத்தலைமைகள் மகிந்த சிந்தனைக்கு அடிபணிந்து இணைந்தும் கொண்டன. அவ்வாறே வடக்கு கிழக்கு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தாராளமாக அமைச்சர் பதவி பெற்று இணைந்து தம்மை ஈடேற்றிக் கொண்டனர்.

இதன் அடுத்த கட்ட நகர்வாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகள் கொடுத்து உள்ளிக்கப்பட்டனர். அதனால் அரசாங்கத்தின் பலம் உறுதி பெற்ற அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பலவீனப்படுத்தப்பட்டது. அந்தப் பலவீனத்தை ஈடுசெய்து கொண்டு இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியால் முன்னேற முடியாது சேற்றில் புதையுண்டு கரையேற முடியாத வண்டி போல் நிற்கிறது. தொடர்ந்து வந்த தேர்தல்கள் எதிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று எந்த ஆசனங்களை வைத்துக் கொண்டு ஜே.வி.பி பகல் கனவு கண்டது. தங்களால் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்க முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டனர். அதனைப் பரீட்சிக்க ஒரு சந்தர்ப்பமாக 2007ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்த்து வாக்களிக்கும் இறுதி நேரத்தில் ஜே.வி.பி பின் வாங்கிக் கொண்டது. அந்த அபாயக் கட்டத்தைத் தாண்டிய மகிந்த சகோதரர்கள் இனிமேலும் ஜே.வி.பி யை ஒரே கட்சியாக வைத்திருப்பதன் ஆபத்தை உணர்ந்து செயல்பட்டதன் விளைவே விமல் வீரவன்ச தலைமையிலான பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறி புதிய கட்சியை ஆரம்பித்த நிகழ்வாகும். இது ஜே.வி.பி யின் பாராளுமன்றக் கனவைச் சுக்கு நூறாக்கியது. வெறும் கனவுகள் யதார்த்தத்திற்கு வழி காட்டமாட்டாது என்பது ஜே.வி.பி யின் அரசியல் பயணத்தில் மீண்டும் மீண்டும் தோல்விப் பாடங்களாக வரலாறு சுட்டிக்காட்டி வந்துள்ளது. ஆனால் அவர்களால் அதனை உரியவாறு பாடம் படிக்கவோ சுயவிமர்சன அடிப்படையில் திருத்திக் கொள்ளவோ முடியவில்லை. காரணம் அது ஒரு தொழிலாளி வர்க்க இடதுசாரிக் கட்சியல்ல. முழுக்க முழுக்க பேரினவாத சிறுமுதலாளித்துவ நிலைப்பாட்டின் மூலம் பாராளுமன்ற அரசியல் செய்யும் கட்சியேயாகும்.

இன்று மகிந்த சிந்தனை அரசாங்கம் கடுமையான மயக்கத்தைத் தரக் கூடிய "போர் வெற்றி" என்ற மாத்திரையைச் சிங்கள மக்களுக்கு வழங்கி அதனை உட்கொள்ள வைத்ததில் வெற்றி பெற்றிருக்கிறது. அந்த மயக்கத்தில் சிங்கள மக்களில் பெரும்பான்மையினருக்கு வாழ்க்கைச் செலவின் உயர்வு பசிபட்டினி உள்ளிட்ட வாழ்க்கை வீழ்ச்சிகள் தெரியவில்லை. அரசாங்கத்தின் ஊழல் மோசடி வீண் விரயம் எதுவும் கண்களுக்குத் தென்பட வில்லை. அவர்களுக்கு போதை மயக்கத்தில் கேட்ப தெல்லாம் "புலிகளைத் தோற்கடிப்போம் கிளிநொச்சியைப் பிடிப்போம் பயங்கரவாதத்தை அழித்து வடக்கில் சிங்கக் கொடியை நாட்டுவோம்" என்ற மகிந்த அரசின் போர் வெறிப் பேச்சுக்கள் மட்டும்தான்.

இத்தகைய சூழலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ ஜே.வி.பிக்கோ மக்களை மேற்படி போதை மயக்கத்திலிருந்து

## இலங்கையை மீட்டெடுக்க மாற்று அரசியல் அவசியம்

வொரு உள்ளூராட்சி மாகாணசபைகளிலும் ஐ.தே. கட்சியால் ஆட்சி அமைக்க முடியவில்லை. இதற்கான முழுப்பழியையும் அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவின் தலை மீதே அக்கட்சிக்குள் உள்ள சில அதிருப்தியாளர்கள் சுமத்தி வருகின்றனர். ரணிலின் தலைமை மாறவேண்டும் என்றும் கூறுகின்றனர். இது தலையிடிக்கு தலையணையை மாற்றும் செயல் போன்றது என்றே ரணில் சார்பாகப் பேசுவோர் கூறி வருகின்றனர். எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சிய்ய பாராளுமன்ற அரசியல் அரங்கில் பலவீனப்படுத்தியதில் மகிந்த சகோதரர்கள் வெற்றி பெற்றே நிற்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

இதே சகோதரங்களின் மூளைகள் மூன்றாவது சக்தி என மார்தட்டி நின்ற ஜே.வி.பியை ஒரு பிடி பிடித்து உடைவடையச் செய்திருக்கிறார்கள். எவ்வளவு தான் சுய திருப்திப் பேச்சுப் பேசி மக்களை ஏமாற்ற முனைந்தாலும் ஜே.வி.பியின் உடைவு அக்கட்சியைக் கடுமையாகப் பாதித்துக் கொண்டது. அதன் பிரதிபலிப்பை நடந்து முடிந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் காண முடிந்துள்ளது. மகிந்த சிந்தனையை உருவாக்குவதில் தாங்களே முக்கிய பங்கு கொண்டதாகவே ஜே.வி.பியினர் கூறி வந்தனர். பின்பு அரசாங்கம் தவறாகச் செல்கிறது என்று பிளவுக்குப் பின் மேடை வைத்து மக்களின் காதுகளில் பூச்சுற்ற முற்பட்டால் மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள். ஜே.வி.பியின் சந்தர்ப்பவாத அரசியலும் அதன் இயலாத்தனங்களும் விரைவாகவே மக்கள் மத்தியில் அம்பலமாகிக் கொண்டது. தாங்கள் மூன்றாவது சக்தி என மார்தட்டுவதானால் அதனைக் கொள்கை ரீதியாகவும் நடைமுறை வழிகளிலும் ஜேவி.பி செயலாக்கி நிரூபித்திருக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்கிற்கும் அதனை எதிர்க்க முடியாது கையறு நிலையில் நிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் இயலாமைக் கொள்கைக்கும் மாற்றான ஒரு மக்கள் சார்புக் கொள்கையை ஜே.வி.பி முன் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு மூன்றாவது மாற்றுக் கொள்கை ஜே.வி.பி யிடம் இல்லை. காரணம் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாடாகும். ஏற்கனவே கடந்த 2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த ஐ.ம.சு முன்னணி மூலம் பெற்றுக் கொண்ட 38 பாராளுமன்ற விடுவிக்கக் கூடிய மாற்று மருந்து என்ற கொள்கையை முன்வைக்க முடியவில்லை. காரணம் இவ்விரு கட்சிகளும் பேரினவாதக் கட்சிகளேயாகும். இன்று நாட்டிற்குத் தேவைப்படுவது உடன் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தை மூலமான நியாயமான அரசியல் தீர்வுமாகும். வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை வாழ்வுரிமைக்கும் அபிலாசைகளுக்கும் உரிய அரசியல் தீர்வு எட்டபட வேண்டும். இதற்கு பேரினவாத நிலைப்பாடு உதவமாட்டாது. பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டு விட முடி யாது. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கின் சுயாட்சிக்குரிய அதிகாரப் பகிர்வே உரிய தீர்வாக அமைய முடியும். இதுவே இலங்கை தனது வரலாற்றுச் தொடர்ச்சியான ஒன்றுபட்ட இலங்கையை தேசிய இனங்களின் ஐக்கியத்துடன் பாதுகாத்து முன்செல்லவுள்ள ஒரே வழி முறையாகும்.

ஆனால் இதன் அடிப்படையில் கொள்கை வைத்து சிங்கள மக்களுக்கு யதார்த்தத்தை எடுத்து விளக்கி ஏற்றுக் கொள்ள வைக்கும் ஆற்றலும் தேவையும் எந்தவொரு பாராளுமன்ற முதலாளித்துவக் கட்சிக்கும் கிடையாது என்பதே இன்றைய நிலையாகும். ஆனால் இத்தகைய ஒரு நிலைப்பாட்டை முன்னெடுக்காமல் இலங்கையை எந்தவொரு கட்சியாலும் மீட்கமுடியாது. இதனை ஐக்கிய தேசியக்கட்சி ஜே.வி.பி என்பவற்றிடம் எதிர்பார்ப்பது மலடுட்டு மாட்டில் பால் கறக்க முற்படுவது போன்றதாகும்.

எனவே சிங்கள மக்கள் மத்தியில் மேற்கூறிய மூன்று பேரினவாத அரசியல் சக்திகளுக்கும் மாற்றாக இன்றைய அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டு அழிவுகளில் இருந்து இலங்கையை மீட்டெடுக்கக் கூடிய வெகுஜனப் போராட்ட அரசியல் கொள்கைகள் முன்வைக்கக் கூடிய நேர்மையான அரசியல் சக்திகள் அரங்கிற்கு வரவேண்டும். அத்தகைய சக்திகளுடன் சுயநிர்ணய உரிமைக்காக நேர்மையாகப் போராடக் கூடிய தமிழ் அரசியல் சக்திகள் ஐக்கியப்பட வேண்டும். இவ் அரசியலானது ஏகாதிபத்திய எதிர்ப்பையும் சுய நிர்ணய உரிமையையும் ஜனநாயகத்தையும் ஐக்கிய இலங்கையையும் வென்றெடுப்பதாக அமைய வேண்டும். இது கடினமானதாகிலும் வேறு பாதையில் இலங்கையை இன்றைய அபாயத்திலிருந்து மீட்க முடியாது. இயலாமைகள் தோல்விகளாகி மக்களின் சிந்தனைத் தளத்தில் வேலை செய்யும் போது தான் சரியான கொள்கைகளும் நடைமுறைகளும் தோன்ற முடியும்.

வெகுஜனன்

## பட்டதாரிகளுக்கு கிடைக்கும் பரிசு



வேலையற்ற பட்டதாரிகள் பட்டம் பெற்று பல ஆண்டுகளாகியும் அவர்களுக்கு அரசாங்கம் வேலை வழங்கவில்லை. வருடா வருடம் பதினைந்து பல்கலைக் கழகங்களில் இருந்தும் பட்டதாரிகள் பட்டப்படிப்பை முடித்து பட்டமளிப்பு சுருளுடனும் படங்களுடன் வெளியேறுகின்றனர். ஆனால் அவர்களின் வேலைக்கு அரசாங்கத்திடம் எத்திட்டங்களும் இல்லை. பதவிக்கு வந்த புதிதில் ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கியது. அதன் பின் பட்டதாரிகள் ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை. வேலையற்ற பட்டதாரிகளில் சுமார் 30 ஆயிரம் பேர் எனக் கூறப்படுகிறது. அத்தகைய பட்டதாரிகள் வேலை வழங்கக் கோரி அண்மையில் கொழும்பு கோட்டைப் பகுதியில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கிக் கலைத்தனர். அதில் ஒரு பட்டதாரி உதைத்து இழுக்கும் காட்சியை இப்படத்தில் காண முடிகின்றது.

## அமைச்சரும் கமெராவும்



அமைச்சர் மேர்வின் சில்வாவைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அடிதடிக் கூட்டம் ஒன்றை வைத்து மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்குப் பலம் சேர்த்து வருபவர். அவருக்கு ஊடகங்கள் என்றால் அறவே பிடிக்காது. பல தடவைகள் ஊடகவியலாளர்களுடன் தன் தோள் வலிமையைக் காட்ட முற்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றன. சில மாதங்கள் முன்பு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குள் தனது குண்டர் பட்டாளத்துடன் புகுந்து அட்டகாசம் செய்தார். அதனைப் பொறுக்கமாட்டாத ஊடக வியாலளர்களும் ஊழியர்களும் தகுந்த பாடம் படித்துக் கொடு த்து அனுப்பினர். அதன் பின் அவரது ஊடக வியலாளர் எதிர்ப்பு பன்மடங்காகியது. குறிப்பாக சிரச வலையமைப்பு ஊடகவியலாளர்களைக் கண்டால் அவருக்கு ரோசம் பொத்திக் கொண்டு வந்துவிடும். அண்மையில் இடம் பெற்ற அரசாங்க நிகழ்வொன்றிற்கு உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டிருந்த சிரச ஊடக வியலாளர் ஒருவரின் படப்பிடிப்புக் கருவியைப் பறித்து உடைத்த சம்பவம் இடம் பெற்றது. இது பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்காக இருக்கின்றது. இது வரையான அமைச்சரின் பல அடாவடித்தனங்களுக்கு ஒரே ஒரு முறை மட்டுமே நீதிமன்றம் சென்றுள்ளார். மற்றவை அனைத்தும் அவரது செல்வாக்கால் அணைந்து போயின. பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்ட கதை போன்றது தான் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கதையுமாகும்.

## தண்ணீருக்கும் வற் வரி!

இருப்பத்தைந்து யூனிற் அளவுக்கு மேல் தண்ணீர் பயன்படுத்துவோர் 15 வீத வற் வரி செலுத்த வேண்டும். இவ் வரிவிதிப்பு கடந்த யூலை முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. தேநீருக்கு வற்வரி இருப்பதால் அதன் விலை 10 ரூபாவாகும். இப்போது குடிக்கும் தண்ணீருக்கும் வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சாதாரண மக்களே பாதிக்கப்படுகிறார்கள். தண்ணீருக்கான இவ் வற் வரி விதிப்பின் அடுத்த கட்டம் தண்ணீரை தனியார் மயப்படுத்துவதாகும் என்றே நம்பப்படுகிறது. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பின் மத்தியில் இத்தண்ணீர் வரி மக்களுக்கு மேலதிகச் சுமையாகிறது

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



சப்பிரகமுவ மாகாணத்தில் மலையகத்தமிழ் மக்களுக்கென இருந்த பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டதென மலையக அரசியல் கட்சிகள் கவலைப்படுவதாக காட்டிக் கொள்கின்றன. மேல் மாகாண மக்கள் முன்னணி ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டியிட்டதால் தான் இ.தொ.காவின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதென இ.தொ.கா தலைவரும் பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார். இ.தொ.கா வின் மொத்த வாக்குகளை விட ஐ.தே. கட்சிப் பட்டியலில் போட்டியிட்ட மே.ம.மு வேட்பாளர் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்றுள்ளபடியால் இ.தொ.கா போன்ற மலையக கட்சிகளுக்கு சப்பிரகமுவாவில் இடமில்லை என்றும் தமக்குத்தான் இடமிருக்கிறது என மே.மா.மு யின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மலையக கட்சிகள் தனித் தனியே பிரிந்து போட்டியிட்டதனால் வாக்குகள் சிதறிப்போய் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதென ம.ம.மு கூறுகிறது.

தேர்தல் நடப்பதற்கு முன்னர் மேற்படி மூன்று கட்சிகளுமே தாம் தாம் தனித்துவத்தின் வரை விலக்கணம் என்று கூறிக்கொண்டன. தனியே போட்டியிட்ட இ.தொ.கா, ம.ம.மு மட்டுமன்றி ஐ.தே கட்சி பட்டியலில் போட்டியிட்ட மே.ம.முயும் கூட தனித்துவமாகவே தேர்தலில் போட்டியிடுவதாக கூறிக்கொண்டன. மே.ம.மு, ஐ.தே கட்சியுடன் இணைந்திருப்பதும், இ.தொ.கா, ம.ம.மு மஹிந்த அரசாங்கத்துடன் இணைந்திருப்பதும் இரகசியங்களல்ல.

# சப்பிரகமுவ தேர்தலில் தோல்வி யாருக்கு?

தேர்தலில் எந்தவொரு கட்சிக்கு ஒரு ஆசனம் கூட கிடைக்காத நிலையில் ஒரு கட்சியின் தோல்விக்கு இன்னொரு கட்சியே காரணம் என்று திட்டித்தீர்த்துக் கொள்கின்றன.

சப்பிரகமுவ மாகாண சபையில் இ.தொ.கா வின் உறுப்பினரொருவர் இருந்தார். தற்போது அவ்வுறுப்புரிமை இல்லாமல் போனவுடன் இ.தொ.கா தலைமையின் 'முடி' பறிக்கப்பட்டு விட்டது போலாகி விட்டது. சப்பிரகமுவ மாகாணத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் ஐ.தே. கட்சி அளிக்கப்படாமல் தடுப்பதற்கு மஹிந்த அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இ.தொ.கா வும் ம.ம.முயும் தனித்தனியாகப் போட்டியிட்டன என்பதே சரியாக இருக்கலாம்.

ஐ.தே. கட்சி பட்டியலில் போட்டியிட்ட மே.ம.மு யின் உறுப்பினர் எடுத்த விருப்புரிமை வாக்குகளின் படி மே.ம.மு சப்பிரகமுவாவில் இ.தொ.கா, ம.ம.மு யை தோற்கடித்து ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளதாக அதன் தலைவர் கூறுகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டது என்றே எல்லோரும் ஒப்பாரி வைக்கின்றனர். தமிழ்ப் பிரதிநிதித்துவம் இருந்த காலத்தில் சப்பிரகமுவ தமிழ்மக்கள் அத்தமிழ் பிரதிநிதித்துவத்தால் இரட்சிக்கப்பட்டார்களா? எத்தனை இன வன்முறைகள் கட்டவீழ்த்துவிடப்பட்டன. அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடிந்ததா? மாதமொரு வன்முறைக்குச் அம்மாகாண மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர். அவற்றுக்கு எதிராக அரசாங்கங்களுடன் ஒட்டிக் கொண்டிருந்தோ விலகியிருந்தோ மலையக கட்சிகளால் எதனையும் செய்யமுடியவில்லை. இந்நிலையில் அவ்வாறான பிரதிநிதித்துவம் இருந்தென்ன இல்லாமல் போய் என்ன?

இந்த நிலைமைபற்றி இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானிடம் ஒரு பத்திரிகையாளர் 'சப்பிரகமுவ மாகாணத் தமிழ்மக்கள் இ.தொ.கா விலிருந்து ஒருவரையும் தெரிவு செய்யாததால் அம்மக்களை இ.தொ.கா கைவிட்டுவிடுமா என்று கேட்டிருக்கிறார். அந்த கேள்வியிலே இ.தொ.காவை விட்டால் மலையகத்தமிழ் மக்களுக்கு வேறு வழியே இல்லை என்பது தொக்கி இருக்கிறது. அதற்கு இ.தொ.கா மக்களை பழிவாங்காது என்று கூறியுள்ளார்.

இதைவிட அம்மாகாணத்தில் இருக்கும் பேரினவாத கட்சிகளுக்கு குடைபிடிக்கும் சில படித்த மலையகத் தமிழர்கள் மலையகத் தமிழ் கட்சிகளுக்கு சப்பிரகமுவ மாகாண தமிழ் மக்கள் நல்லதொரு பாடம் புகட்டிவிட்டனர் என்றும் நுவரெலியா மாவட்டத்தில் போன்று மல்லயகக் கட்சிகள் விருப்பப்படி சப்பிரகமுவவாவில் செயற்பட முடியாது என்றும் பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளார். சப்பிரகமுவா தமிழ் மக்கள் அவ்வளவு தெளிவாக இருந்தால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி வென்றதும் ஐ.தே.கட்சிக்கு கணிசமான வாக்குகள் கிடைத்ததும் எப்படி என்பதான் விளங்கவில்லை.

தேர்தல் முடிவுகளைக் கொண்டு அரசியல் நிலைவரத்தை சரியாக மதிப்பிட முடியாது. ஆனால் அவற்றை முற்றாக அசட்டை செய்யவும் முடியாது. மக்களுக்குரிய அரசியல் மக்களிடம் செல்லாது விட்டால் எல்லாம் தப்புத்தப்பாகவே முடிவுகள் ஏற்படும்.

# செயலற்ற இடதுசாரரிகளுக்கு மக்கள் வாக்களிக்கவில்லை

**சப்பிரகமுவ வடமத்தியமாகாண சபைகளுக்கான** தேர்தல்கள் நடைபெற்றன. முடிவுகள் அரசாங்கத்திற்கே சார்பாக இருக்கும் என்பது எல்லோரும் தெரிந்த விடயமே. இப்படி கூறு வதால் இலங்கையில் மும்மாரியும் பெய்து பாலாறும் தேனாறும் ஓடுவதாகக் கொள்ளக்கூடாது. ஜனநாயகமும், மனிதஉரிமைகளும் மறுக்கப்படும்போது சிங்கள மக்களுக்காகவே அரசாங்கம் யுத்தம் செய்கிறது என்பது பாரியளவில் பிரசாரம் செய்யப்படும்போது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கே வாய்ப்பு அதிகம் என்பது சாதாரணமாகவே விளங்கிக் கொள்ள முடியும்.

இம் மாகாணங்களில் போட்டியிட்ட இடதுசாரிகளுக்கு மக்கள் கணிசமான வாக்குகளை கூட அளிக்கவில்லை. இங்கு ஜே.வி.பியை அந்த இடதுசாரிக் கட்சிகளுள் சேர்க்க முடியாது. ஆனால் அக் கட்சியும் ஏற்கனவே அதற்கிருந்த ஆசனங்களை இழந்திருக்கின்றது. தேர்தலை அரசியல் பாதையாகக் கொண்டு செயற்படும் இடதுசாரிகள் அவர்களது அக்கொள்கைக்கு நேர்மையாக செயற்படுவதைக் காணமுடிவதில்லை. நாடு யுத்த சூழ்நிலையில் இருக்கிறது. மக்களுக்கு வாழ்க்கைச் சுமையோ தாங்கமுடியவில்லை. மனித உரிமைகள் மீறல், ஜனநாயக மறுப்பு, கொலைகள், கடத்தல்கள், கைதுகள், காணாமல் போதல்கள் உச்சமாக இருக்கின்ற இந்நிலையில் இலங்கையில் இடதுசாரிகள், ஜனநாயக வாதிகள் என்று சொல்லப்படுபவர்களிடம் தனித்த செயற்பாடுகளும் இல்லை பொதுவான செயற்பாடும் இல்லை. நாங்களும் இருக்கிறோம் என்று காட்டிக்கொள்வதை விட அவர்களுக்கு வேறு அரசியல் கடமைகள் இருப்பதை உணர்ந்து செயற்படுவதாக இல்லை. இந் நிலையில் அவர்களை மக்கள் கவனிக்காது விட்டதில் நியாயம் இருக்கவே செய்கிறது. இதனை ஒரு பாடமாகக் கொண்டு தேர்தல்களை மையமாகக் கொள்வதை விடுத்து வெகுஜன அரசியல் தளத்தைக் கட்டியெழுப்ப முன்வருவார்களா?

# சம்பள வாசல்

ஓடும்பிள்ளை



**மலையகத்திலிருந்து படித்துவிட்டு தொழில் செய்பவர்கள்** மலையகத்தில் படித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நிதியுதவி செய்யலாமே என்று எல்லோரும் கேள்வி கேட்கிறார்கள். அண்மையில் ஒரு தமிழ்த் தினசரியின் வாராந்த இதழில் மலையகத்தின் மாணவர் ஒருவர் எழுதியதாகக் கடிதமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் அவரது வீட்டில் மின்சாரம் இல்லாதபடியால் விளக்கு வெளிச்சத்தில் படிக்க கஷ்டமாக இருந்ததாகவும் வீட்டிற்கு மின்சாரம் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை நேரத்தைவிட ஏனைய நேரங்களில் மரக்கறித் தோட்டத்திற்கு வேலைக்குப் போவதாகவும் எழுதப்பட்டிருந்தது. யாராவது பணஉதவி செய்தால் படிப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும் அவர் எழுதியிருந்தார். அத்துடன் தொழிற்சங்கங்களுக்கு அவர் உடன்பிறப்புகளும் பெற்றோர்களும் கொடுக்கும் தொழிற்சங்க சந்தாப்பணத்தில் ஒரு தொகையை பிடித்து படிக்கும் மாணவர்களுக்கு (ஸ்கொலஸ்சிப்) பண உதவி செய்யலாமே என்ற ஆலோசனையையும் முன் வைத்திருந்தார்.

அவர் மலையகத்திலிருந்து கொழும்புக்கு வேலைக்காக சென்றுவிட்ட அவரது நண்பருக்கு எழுதிய கடிதத்திலேயே அவ்வாறு குறிப்பிடுவதாக இருந்தது. தற்போது அவரது தோட்டத்தில் குடிப்பவர்களின் எண்ணிக்கை கூடிவிட்டதாகவும் காதலர்கள் ஓடிப்போவதாகவும் சிலர் நஞ்சுகுடித்து தற்கொலை செய்வதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் அவரது தோட்டத்திற்கு பல புதிய கட்சிகள் அறிமுகமாகிவிட்டதாகவும் இன்னும் பல கட்சிகள் அறிமுகமாகலாம் என்றும் அது பற்றி கவலைபடமால் நாம் எமது வேலையைப் பார்ப்போம் என்றும் எழுதியிருந்தார்.

இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ள எந்த விடயமும் மலையகத்திற்கு புதியனவல்ல. அவை இரண்டு நூற்றாண்டு காலப் பிரச்சினைகள். மின்சார இணைப்பை பெற்றுக் கொள்ள தற்போதைய மாணவன் வேலை செய்வதாக எழுதியுள்ளார். ஆனால் குடும்பத்தின் நாளாந்த உணவிற்காகவும் படிப்பதற்கான கொப்பி, பென்சில் வாங்கவும் விறகு வெட்டி விற்றும், மாட்டுக்கு புல்லறுத்துப் போட்டும், வீடுகளில் பகுதி நேரவேலை செய்தும் மலையகத்தவர்கள் பலர் படித்து இன்று பட்டதாரிகளாகவும் புலமைசார்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் குப்பி விளக்கு வெளிச்சத்தில் படித்தவர்களே.

இலங்கையில் ஏனையவர்களுக்கு இலவசக் கல்வி கிடைக்கப் பெற்று 40 வருடங்களுக்குப் பிறகே மலையகத்தவர்களுக்கு கிட்டியது. அன்றிலிருந்து இன்றுவரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசக் கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடியளவிற்கு கூடப் பண வசதி இல்லை. ஏனெனில் பெற்றோர்களான தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் குடும்பத்தின் உணவு உடை தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதாததாகும். இந் நிலையில் அவர்களது பிள்ளைகளின் கல்விக்கு செலவழிப்பது எப்படி? இந்தக்கஷ்டங்கள் தீரவேண்டுமெனில் தோட்டத் தொழி லாளர்களுக்கு போதிய சம்பளம் கிடைக்க வேண்டும். போதியளவு சம்பளத்தை பெற்றுக் கொள்ள இன்னும் எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியாது. அது வரை கஷ்டப்படும் மாணவர்கள் கல்வி கற்காமல் இருக்க முடியாது.

மலையக மாணவர்களில் க.பொ.த உயர்தரம் படிப்பவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் படிப் போருக்கும் சில அமைப்புகள் சிறிய அளவிலாவது நிதியுதவிகளைச் செய்துள்ளன. அவற்றில் இந்திய தூதரகத்தின் உதவியுடனான பெருந்தோட்ட கல்வி நிதியம், குட்ஹோப் பண்ட், உதயம் பவுண்டேசன் (சிலகாலம் இ.தொ.கா, தொ.தே. சங்கம் என்பன அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணஉதவி செய்தது) குறிப்பிடத்தக்கன. தற்போது அவற்றை விட இன்னும் பல அமைப்புகள் மலையக மாணவர்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றன. சில தொழிற்சங்கங்களும் செய்துவருகின்றன. தனிநபர்களும் பண உதவிகளை செய்துவருகின்றனர். இவ்வுதவிகள் மலையக மாணவர்கள் அனைவரினதும் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது. இலங்கையின் மாணவர்கள் அனைவருக்கும் கல்வியைப் உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கமாகும். ஆனால் மலையக மாணவர்களுக்கு மட்டுமன்றி இன்றும் வடக்கு கிழக்கு தமிழ் மாணவர்களில் அதிக மானோருக்கும் முஸ்லீம் மாணவர்களுக்கும் கல்வியைப் பெறமுடியாதவாறு பணப்பிரச்சினை இருக்கிறது. இதில் மலையக மாணவர்களின் நிலைமை மோசமானது என்பதை மறுப்பதற்கில்லை.

இப்பிரச்சினையை மலையகத்திலிருந்து படித்து தொழில் செய்பவர்களால் தீர்க்க முடியுமா? அவர்கள் மலையகத்தின் படிப்பவர்களுக்கு பணஉதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப்படித்தவர்களுக்கு குடும்பம், சகோதரர்கள், பிள்ளைகள், உறவினர்கள் என்ற விரிந்த வட்டமே இருக்கிறது. மலையகத்திலிருந்து படித்து வந்தவர்களுக்கு அதுவே பெரும் சுமை ஆகும். வியாபாரத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கூட இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாக அவர்களின் உழைப்பு எல்லாம் கையும் கணக்காகவே இருக்கிறது. இருந்தபோதும் சிலர் அவர்களது குடும்ப, உறவினர் வட்டங்களுக்கு வெளியில் படிக்கும் மாணவர்களுக்கு பண உதவி செய்து வருகின்றனர். இதில் கஸ்டப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்களிலிருந்து படித்து வந்தவர்களின் நிலைமை நகர்ப் புறக் குடும்பங்களிலிருந்து அல்லது பண வசதியுள் குடும்பங்களிலிருந்து படித்து வந்தவர்களை விட மிகவும் மோசம்.

அவ்வாறு சிலர் உதவி செய்யும் மனதை கொண்டுள்ளனர். சிலர் பிரசாரத்திற்காக செய்கின்றனர். இதனால் மலையகத்திலிருந்து படித்து வந்தவர்களும் அனைவரும் படித்து வருபவர்கள் அனைவருக்கும் பண உதவி செய்ய வேண்டுமென்பதை ஒரு கடமையாகக் கொள்ள வேண்டு மென்றும், படிப்பவர்கள் படித்து தொழில் செய்பவர்களிடம் பண உதவி பெறுவதை உரிமையாகக் கொள்ள வேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். இக் கருத்து மலையக மாணவர்களின் கல்வியைப் பெறுவதற்குக் தடையாக இருக்கும் பணப் பிரச்சினைக்கான உண்மையான காரணத்தை திசை திருப்பும் முயற்சியாகும். அதற்கு காரணமான சமூகக் காரணிகளையும், சமூக சக்திகளையும் தேடும் முயற்சியையும் அதற்கு தீர்வு காணும் அதாவது சமூகக் கடமையையும் புறக்கணிக்கும் தனிநபர் முன்னேற்றப் போக்காகும்.

தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் அவர்களது இருப்பை பாதுகாத்துக் கொள்ள சில சமூக நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதில் படிப்பவர்களுக்கு பணவுதவி செய்வதும் அடங்கும். ஆனால் தொழிற்சங்கங்களினதும் அரசியல் கட்சிகளினதும் கடமையோ, பொறுப்போ அதுவல்ல. அவை சாதாரணமாக குடும்பம் ஒவ்வொன்றும் தனிநபர் ஒவ்வொருவரும் இன்னொருவரிடம் கையேந்தாமல் இருக்கும் அரசியல் சமூக முறையை ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்டவர்களின் நலன்புரி உதவிகளால் மட்டும் சமூகப்பிரச்சினையை தீர்க்க முடியாது. அந்த நலன்புரி உதவிகள் தொடரும் போதும் அல்லது ஊக்குவிக்கப்படும் போது உதவி செய்யும் கூட்டமொன்று இருப்பதையும், கையேந்தும் கூட்டமொன்று இருப்பதையும் தொடர்ந்து பேண முயற்சிப்பது நிலப்பிரபுத்துவ மனோபாவமாகும். இது ஆரோக்கியமான சமூக நகர்விற்கு உதவாது. உள்ள அமைப்பை பாதுகாப்பதாகும். உண்மையில் ஆரோக்கியமான சமூகத்திற்கு கொடுப்பவர்கள் என்றும் இரட்சகர்கள் என்றும் யாரும் இருக்கக் கூடாது. அதேபோன்று கையேந்துபவர்களும் இருக்கக்கூடாது.

எனவே படிப்பவர்களுக்கு பண உதவி செய்ய மலையக குடும்பங்கள் ஒவ்வொன்றும் தகுதியுடையதாக மாற்றப்பட வேண்டும். அரசாங்கம் இலவசக் கல்வியை அர்த்தமுடையாதாக நடைமுறைப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பற்றி கவனஞ் செலுத்த வேண்டும். அமைப்பு ரீதியான அரசாங்க தனிப்பட்ட நலன்புரித்திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமேயன்றி தனிநபர்களை நம்பி மலையக மாணவர்கள் கையேந்துபவர்களாக இருக்கும் நிலைமாற்றப்பட வேண்டும். ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் படிப்பவர்களுக்கு படித்தவர்களும் தொழில் செய்பவர்களும் உதவ வேண்டும் என்பது அடிமைத்தனமான எதிர்பார்ப்பாகும். அப்படி தனி நபர்களிடம் உதவிபெற்று படிப்பதனால் சுதந்திரமான படித்த சமூகம் உருவாக முடியாது. கடப்பாடுடையதாகவே சதாகாலமும் இருக்க வேண்டி வரும். அரசியல் ஞான சூனியாங்களாக இருக்க வேண்டிவரும். இதற்கு மாறாக மலையகப் படிக்கும் மாணவர்களுக்கு இருக்கும் பணப்பிரச்சினையை தீர்க்க குறுகியகால நீண்ட கால அமைப்பு ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மலையகத்தின் படித்தவர்களும் படித்துவிட்டு தொழில் செய்பவர்களும் பன்முகமாகவும் கூட்டாகவும் செயற்படமுடியும். இது சமூகத்தை மாற்றும் போராட்டம் என்பதால் இலகுவான பொறுப்பாக இராது. இருப்பவர் கொடுப்பதும் இல்லாதவர் பெறுவதும் இன்றைய தனி நபர் முன்னேற்றச் சூழலில் இலகுவான காரியமல்ல. சமூகமாற்றமே நீண்ட காலத்தில் பிரச்சினையை தீர்க்க உதவும்.

படித்தவர்களும், படிப்பவர்களும் மலையகத்தில் எத்தனை கட்சிகள் வந்தாலும் எமக்கென்ன என்ற சிந்தனை கொள்வது மலையகத்திலிருந்து பௌதிகரீதியாக அந்நியப்படுவதை விட ஆபத்து நிறைந்த அந்நியப்படுதலாகும். எனவே படித்தவர்களும் படிப்பவர்களும் கோளாறான சிந்தனைகளிலிருந்து விடுபடுவதுதான் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அடிப்படையான அம்சமாக இருக்கும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 செப்ரெம்பர் 2008பக்கம் 16 விலை 20/- சுழற்சி 117
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# வெற்றியும் இல்லை தோல்வியும் இல்லை

**வன்னியில் இடம் பெறும் அரசாங்கத்தின்** இராணுவ நடவடிக்கைகளில் மக்கள் பெரும் மனித பேரவலத்திற்குட்பட்டுள்ளனர். மக்கள் வீடுகளிலிருந்து காடுகளில் வசிக்கின்றனர். இடம் பெயர்ந்து கூடாரங்களில் வாழ்ந்தவர்கள் மீதும் வானிலிருந்து குண்டுகள் போடப்பட்டுள்ளன. எறிகணைக் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

வன்னியில் மேலும் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் தொடரவிருப்பதால் வவுனியாவுக்கு வந்துவிடும்படி மக்களுக்கு பாதுகாப்பு அமைச்சு "வேண்டுகோள்" விடுத்துள்ளது. அதேநேரத்தில் மக்கள் இறுதிப் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் வன்னியிலிருந்து இடம்பெயரும் மக்களை கேடயமாக பயன்படுத்தாது அவர்கள் விரும்பிய இடத்திற்கு செல்வதற்கு விடுதலை புலிகள் இயக்கம் அனுமதிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை கேட்டுக் கொண்டுள்ளது.

உலக நாடுகளில் இடம்பெறும் யுத்தங்களை அவதானிக்கும் ஐக்கிய அமெரிக்க அரசின் நிறுவனமொன்று சர்வதேச சட்டங்களையும் விதிகளையும் மீறும் வகையில் இலங்கை அரசாங்கமோ விடுதலைப் புலிகள் இயக்கமோ தாக்குதல்களை நடத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இடம்பெயரும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க இலங்கை அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஐ.நா.சபை பூரணமான ஆதரவை வழங்கும் என்று அறிவித்துள்ளது.

இந்தியா யுத்தத்தை நிறுத்தச் சொல்லி இலங்கை அரசாங்கத்தை கேட்கவும் இல்லை கேட்கப்போவதுமில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியிருப்பது மட்டுமன்றி இராணுவ ஆலோசனைகளையும் வழங்கி வருவது இரகசியமான விடயங்களல்ல.

இலங்கையில் இயங்கிவந்த யுத்த எதிர்ப்பு அமைப்புகள் யாவும் நிசப்தமாக்கப்பட்டுள்ளன. யுத்த எதிர்ப்பியக்கத்தில் முன்னின்று செயலாற்றிய பலர் இன்று சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவே முன்னைய யுத்த எதிர்ப்பாளர்கள் ஆதரவு வழங்குவதாகவே கொள்ள முடிகிறது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளிலிருந்து படிக்கத்தவறிய பாடங்கள் நிறையவே இருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானது இந்த நீண்ட இராணுவ நடவடிக்கைகளில் எத்தரப்பிற்கும் நிரந்தர வெற்றியும் இல்லை நிரந்தர தோல்வியும் இல்லை என்பதாகும். மக்களுக்கும் சொத்துகளுக்கும் பேரழிவு ஏற்படுவதுடன் மக்கள் மேலும் மேலும் கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாகிவருகின்றனர். இரண்டாவது விடயமானது இந்த நிலைமைக்கு காரணம் தமிழ்மக்கள் மீதான தேசிய இன அடக்குமுறை ஆகும் என்தாலே இதற்குப் பேச்சுவார்த்தையில் மூலமே அரசியல் தீர்வு காணப்பட முடியும் தீர்வு காணப்படவேண்டும்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகின்றபோதும் அங்கு மக்கள் பயப்பீதியின்றி வாழும் சூழ்நிலை இல்லை என்பதை மறுப்பதற்கில்லை. அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்தவர்களை சேவையில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண குடாநாட்டில் நாளாந்தம் நடைபெறும் சம்பவங்களின் மூலம் அரசாங்க இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் பிரதேசங்கள் கொண்டு வரப்படுவதால் மட்டும் அமைதி நிலப்போவதில்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

உலகில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக நிறுவப்பட்டதாக கொள்ளப்படும் ஐ.நா உட்பட எல்லா சர்வதேச நிறுவனங்களும் யுத்தத்தை நிறுத்துவதற்காக செயற்படுவதை விடுத்து யுத்தம் சர்வதேச சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப நடத்தப்பட வேண்டும் என்கின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்கின்றன. அவை யுத்தத்தில் சம்பந்தப்படாத மக்களை பாதுகாக்க வேண்டும் என்று கூறும் அதேவேளை யுத்தங்கள் சர்வதேச சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்கின்றன. யுத்தக் குற்றங்களை புரிந்தவர்களை தண்டிக்க வேண்டும் என்கின்றன. யுத்தமே மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் என்பதை அவை வலியுறுத்துவதில்லை. அவற்றின் தற்போதைய நிலையானது அரசாங்கங்களினால் நடத்தப்படும் யுத்தங்கள் நியாயமானவை என்பதாகும். இதுதான் இன்றைய உலகமயமாதலின் யுத்தம் பற்றிய கொள்கையும், ஒழுங்குமாகும். இந்த கொள்கையையும் நடைமுறையையும் கொண்டுள்ள "முகவரியற்ற சர்வதேச சமூகத்திடம் தான்" நியாயத்தையும் நீதியையும் கேட்க வேண்டிய அவல நிலையிலேயே உலக மக்கள் வாழ்கின்றனர்.

தமிழ் மக்களினுடைய தேசிய அபிலாஷைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் அனைவரிடம் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதனை வென்றெடுக்க வேண்டிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் அவசியம் பற்றியும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதனால் நடைபெறுகின்ற யுத்தத்தில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. மக்களினுடைய ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டால் இராணுவ நடவடிக்கைகள் முதன்மையானதாகவோ இராணுவ அமைப்புகள் தலைமையானதாகவோ இருக்க முடியாது.

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு போர் வெறியை ஊட்டுவதற்கான பிரசாரங்களே மிகையாக இருக்கின்றன. யுத்தத்தை நிறுத்தி அரசியல்தீர்வு காண்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது மட்டுமன்றி பயங்கரவாதமாகவும் காட்டப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையேயான ஐக்கியம் என்பது கூட பயங்கரவாதத்திற்கு ஆதரவான விடயமாகவே கற்பிக்கப்படுகிறது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் யுத்தத்திற்கு எதிரான வெகுஜனப் போராட்டங்களை செய்கின்றனர். இந்தியாவில் தமிழ் நாட்டில் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் யுத்தம் நிறுத்தப்படவில்லை தொடரப்படுகிறது.

யுத்தத்தை தடுத்து நிறுத்தி அமைதியையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்த அரசியல் தீர்வைக் காண்பதற்காகச் செயல்படுவது இலங்கையின் அனைத்து மக்களினுடைய பணி ஆகும். உலக நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் இலங்கையில் அமைதியை நிலைநாட்டும் என்றோ தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் என்றோ மேலும் மேலும் நம்பிக் கொண்டிருக்க முடிாயது. அமைதியை நிலைநாட்டி அரசியல் தீர்வு காணும் பணியை மக்கள் தங்கள் கைகளில் எடுக்காத வரை எந்தவொரு மாற்றமும் ஏற்பாடது.

அரசியல் தீர்வு காணப்படாதவரை இப்பிரச்சினையில் இராணுவ ரீதியான முன்னேற்றங்கள் வெற்றிகளாவதுமில்லை. இராணுவ ரீதியான பின்னடைவுகள் தோல்விகளாவதுமில்லை. வெற்றியுமில்லாத தோல்வியுமில்லாத நடவடிக்கைகளுக்காக மக்களையும் மக்களின் சொத்துக்களையும் அழிக்க வேண்டுமா என்பதே அரசாங்கத்தின் முன்னுள்ள கேள்வியாகும்.

**ஆசிரியர் குழு**

# பௌத்த மதத்தின் அரசியல் ஆதிக்கம்

**வெகுஜனன்**

**அன்று பிராமணிய ஆதிக்கம் மக்கள்** மீது திணிக்கப்பட்டது. உயர்வு தாழ்வு, புனிதம் தீட்டு, உயர்ந்தோருக்கு ஒரு நீதி தாழ்ந்தோராக்கப்பட்டவர்களுக்கு வேறொரு நீதி என்பன ஆதிக்கப் போக்காகப் பிராமணியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவற்றை நிராகரித்தே கௌதம புத்தரின் போதனைகளும் நடைமுறைகளும் எழுந்தன. மனித வாழ்வின் துன்பங்களுக்கு காரணமான விடயங்கள் பற்றி புத்தர் எடுத்துரைத்தார். வாழ்வில் அன்பு கருணை அகிம்சை பரிவு பற்றி விரித்துரைத்தார். துன்பங்களுக்கு ஆசையே அடிப்படையென்றார். எளிமையான வாழ்வும் நீதி நியாயங்களைத் தர்மமாகக் கொள்ளும்படி வேண்டினார். சாதி இன உயர்வு தாழ்வுகளை மறுத்துரைத்தார். தனது போதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லவே பௌத்த துறவிகளை உருவாக்கினார். ஆடம்பர உடை உடுத்தலை விட்டெறிவதற்காகவே பௌத்த பிக்குகளுக்கு எளிமையும் புனிதமுடையதான மஞ்சள் காவி உடையைத் தேர்ந்தெடுத்து தானும் உடுத்தி ஏனைய பிக்குகளையும் அணிய வைத்தார். மக்களுக்கு நற்போதனை செய்து அவர்களை வாழ்வில் நல்வழிப்படுத்தவே பௌத்ததுறவிகளும் அமைப்புகளும் தோற்றுவிக்கப்பட்டனர். மக்களைச் சுரண்டவோ அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ பிக்குமார் உருவாக்கப்படவில்லை. பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை துறந்த எளிமையான வாழ்வு தான் பௌத்த பிக்குமாரின் வாழ்வாகும் என்பதே கௌதம புத்தரும் அவரது பிரதான சீடர்களும் வகுத்துச் சென்ற பௌத்த மார்க்க நெறியாகும்.

இவற்றை இன்றைய எமது நாட்டுப் பௌத்தப் பிக்குமாரிடமும் அமைப்புகளிடமும் எந்தளவிற்கு எதிர்பார்க்க முடியும். மன்னராட்சிக் காலத்தில் தான் இங்கு பௌத்தம் கொண்டு வரப்பட்டது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பும் "மக்களாட்சி" எனப்படும் இன்றைய சூழலில் பௌத்த மதத்தின் பிற்போக்கு ஆதிக்கமே முன்னிலை வகிக்கிறது. இலங்கை அரசியலில் பௌத்தம் சிங்கள இனமொழி வெறித்தனங்களுக்கு கவசமாக மட்டுமன்றி தலைமைதாங்கும் நிலைக்கும் வளர்ந்து நிற்கின்றது. அதன் வெளிப்பாட்டை இன்றைய ஜாதிக ஹெல உறுமய கட்சி பிரதிபலித்து நிற்கிறது. ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களை அக்கட்சி கொண்டிருக்கிறது. சுற்றாடல் அமைச்சராக பௌத்த சிங்கள இனவாதி சம்பிக்க ரணவக்கவை அக்கட்சி நியமித்துக் கொண்டது. மிகுதியானவர்கள் பௌத்த பிக்குமாராகவே உள்ளனர். இவர்கள் சகலவற்றிலும் பௌத்த மத சிங்கள இன மொழி முதன்மையை வற்புறுத்தி வருகின்றனர். அரசியலிலும் சமூக வாழ்விலும் அவற்றுக்கு உயர்ந்த தனி இடம் வழங்குவதை ஒருவகை வெறியாகவே முன்னெடுத்து வருகின்றார்கள். தமிழர்கள் முஸ்லீம்கள் மலையக மக்கள் மற்றும் சிறுபான்மையினரை இரண்டாந்தரமாகவும் இழிவாகவும் நடாத்துவதையே இவர்கள் தமது நிலைப்பாடாகவும் கொண்டிருக்கின்றனர். சிங்கள பௌத்த மக்களைப் பெரு மரமாகவும் அதில் பற்றி நிற்க வேண்டிய சிறு செடி கொடிகள் போன்றவர்களே தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் என்பதாகவே இப் பௌத்த மதவாதிகள் செயலாற்றி வருகிறார்கள். இத்தகைய பௌத்த மத ஆதிக்கம் சகலவற்றிலும் முன்னிலை வகிக்க வேண்டும் என்பதையே ஜாதிக ஹெல உறுமயவும் பௌத்த ஆதிக்க சக்திகளும் வற்புறுத்தி வருகிறார்கள்.

இதனையே அண்மைய உயர் நீதிமன்ற அமர்வின் போதும் காண முடிந்தது. சட்டத்தின் முன் சகல மதங்களும் சமம் என்றவாறே உயர் நீதிமன்றம் நடந்த கொண்டது. 'ஒலி மாசடைதல்' பிரச்சினையில் உயர் நீதிமன்றம் வருமாறு கேட்கப்பட்ட கொழும்பு விகாரை ஒன்றின் தலைமைப் பிக்கு நீதிமன்றம் வரமறுத்து விட்டார். அதனால் அவரைப் பிடித்து விசாரணைத் தடுப்பில் வைக்க உயர் நீதிமன்றம் உத்தவிட்டது. அதன் பின் பிணை மனு கோரி நீதிமன்றம் வந்த பிக்குமார் நீதியரசர்கள் தமது விசாரண இருக்கைக்கு வந்த போது எழும்பி நிற்க மறுத்து தமது இருக்கையில் இருந்தனர். இதனால் நீதமன்றத்தை விட்டு வெளியே சென்று திரும்பி வருமாறு நீதியரசர்களால் பணிக்கப்பட்டனர். இவர்கள் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமான பிக்குமார் என அறிய முடிகின்றது.

மேற்படி நீதிமன்ற செயற்பாடும் பிணைமனு விசாரணை பிற்போடப்பட்டமையும் பௌத்த மேலாதிக்கம் கொண்ட பிக்குமார் மத்தியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மன்னர் காலத்திலிருந்தே தாங்கள் எழும்பி மரியாதை செலுத் துவதில்லை என்றும் இன்றைய ஜனாதிபதிக்குக் கூட அப் படிச் செய்வதில்லை என்றும் கூறியுள்ளனர். அவ்வாறு அமர்ந்திருப்பது தமக்குரிய சிறப்புரிமை என்றும் வற்புறுத்தியுள்ளனர். இதனால் நீதித்துறைக்கும் பௌத்த ஆதிக்கப் போக்காளர்களுக்குமிடையில் முறுகலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஜாதிக ஹெல உறுமய பெரும் சங்கடத்தில் சிக்கியுள்ளது. "தன்வினை தன்னைச் சுடும்" என்பது போல மதவெறிப் பிக்குமார் மாட்டுப்பட்டு நிற்கிறார்கள்.

இன்றைய நிலையில் நீதித்துறை தொடர்ந்தும் சட்டத்தின் முன் நீதியின் முன் சகலரும் சமம் என்று எழுதி வைக்கப்பட்டுள்ளவற்றை நிவேற்றுவதில் தன் பக்கசார்பற்ற தன்மையை நிறைவேற்றும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. அல்லாது விடின் பௌத்தமத ஆதிக்க வெறி மேலும் தலை விரித்தாட அனுமதிப்பது ஆகிவிடும்.

இச் சம்பவம் மட்டுமன்றி பௌத்தமத ஆதிக்கத்தை வெறித்தனமாக முன்னெடுக்கும் பல சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்றே வருகின்றன. கிழக்கில் பேரினவாத நோக்கில் பௌத்தமத விஸ்தரிப்பு சத்தமின்றி முன்னெடுக்கப்படுகிறது. அண்மையில் கொழும்பு 14 கிராண்பாஸில் ஒரு இந்து ஆலயத்தினுள் புகுந்து ஒரு புத்த பிக்குவும் வேறு இருவரும் அங்கிருந்த முத்துமாரி அம்மன் சிலையை உடைத்து சேதம் விளைவித்தனர்.

இவையாவும் பௌத்தமத வெறித்தனத்தையும் ஆதிக்கப் போக்கையுமே எடுத்துக் காட்டுகின்றன. இதற்கும் இன்றைய ஆளும் வர்க்க அரசியலுக்கும் சம்மந்தம் இல்லை என எவரும் நிராகரித்துவிட முடியாது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவின் மேலாதிக்க நிலைப்பாடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசுவாசமும்

"இந்திய அனுபவத்தில் நாம் திரும்பத் திரும்ப கண்டு வரும் உண்மையாதெனில் இந்தியா ஒரு போதும் ஈழத்தமிழர்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம் தனது பிராந்திய நலனை பேணிக் கொள்ளாது. மாறாக சிங்களத் தலைமைகளை திருப்திப்படுத்துவதன் மூலமே அது தனது பிராந்திய நலனை உறுதிப்படுத்திக் கொள்ள முயலும். அப்படி இந்தியா முயலும் போதெல்லாம் அதன் நடவடிக்கைகள் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்திருக்கும். எனவே இந்தியாவிற்கு அடிக்கடி காவடி எடுப்பதன் மூலமோ அங்கு நாராயணன்களைச் தரிசிப்பதாலோ நிலைமைகள் மாறப் போவதில்லை." இவ்வாறு தினக்குரல் ஞாயிறு இதழில் தாரக என்பவர் எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை எழுதியிருப்பவர் நிச்சயம் விரக்தியடைந்த ஒரு தமிழ்த் தேசியவாதியாகவே இருப்பார். இத்தகைய தமிழ்த் தேசியவாதிகளுக்கு வெளிச்சம் வர மூன்று தசாப்தகாலம் பிடித்திருக்கிறது. இதனை முப்பது வருடங்களுக்கு முன்பு மாக்சிச லெனினிச வாதிகள் இந்திய பிராந்திய மேலாதிக்கம் பற்றிக் கூறிய போது இதே தமிழ்த் தேசியவாதிகள் அவர்களை "சீன விசுவாசிகள்" என்றும் "தமிழீழத் துரோகிகள்" என்றும் வசை வக்கணம் வைத்துப் பேசியும் எழுதியும் வந்தனர் என்பது நினைவு கொள்ள வேண்டியதாகும்.

தமிழீழக் கோரிக்கை வட்டுக்கோட்டைத் தீர்மானமாக முன்வைக்கப்பட்டபோது இப் பிரிவினைக் கோரிக்கை சாத்தியமற்ற ஒன்று என்றே மாக்சிச லெனினிச வாதிகள் தூர நோக்குடன் எடுத்துக் கூறி நின்றனர். இலங்கையின் பொருளாதார அரசியல் சமூகச் சூழலின் யதார்த்தம் அதற்கு இடம் கொடுக்க மாட்டாது என்றும் இந்தியாவின் பிராந்திய நலனுக்குச் சாதகமானதாக இல்லாத காரணத்தால் இந்தியா அதற்கு இடம் கொடுக்காது என்றும் தூர நோக்குடன் எடுத்துக் கூறினார்கள்.



ஆனால் பங்களாதேசப் பிரிவினையை இந்தியா 1971ல் சாத்திய மாக்கியது போன்று இலங்கையிலும் தமிழீழத்தை பிரித்தெடுத்துத் தரும் என்ற நம்பிக்கை பாராளுமன்றத் தமிழ்த் தேசியவாதிகள் தொட்டு ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர் இயக்கங்கள் வரை இருந்து வந்தது. இதனை மாக்சிச லெனினிச வாதிகள் மறுத்துரைத்து நின்றனர். அவ்வாறு இந்தி யாவின் உதவியுடனோ அல்லது அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியத் தலையீட்டுடனோ பிரிக்கப்படும் தமிழீழம் ஒரு போதும் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்டதாக இருக்க மாட்டாது என்றும் அது இஸ்ரேல் போன்ற ஒன்றாக மட்டுமே அமையும் என்றும் கூறி வந்தனர். ஆனால் பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்ப்பதற்கு தமிழ்த் தலைமைகள் குறுந்தேசியவாத நிலையையே எடுத்தன. தமிழர் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனையையும் ஆண்ட பரம்பரையின் உயர் மேட்டுக்குடி ஆளும் வர்க்க நிலைப்பாட்டையும் அவர்கள் கொண்டிருந்தனர். இவற்றுடன் இந் திய ஆளும் வர்க்கம் தமக்கு கைகொடுத்து விமோசனம் பெற்றுத் தரும் என்றும் நம்பியிருந்தனர். அதற்கு "தாய் நாடு" என்றும் "தொப்புள் கொடி" உறவென்றும் உரிமை கொண்டாடினர். ஆனால் இவை யாவும் இன்றைய நிலையில் பொய்யாய் கனவாய் பழங் கதையாய் போய் நிற்பதையே தமிழ்த் தேசியவாதிகளால் தரிசிக்க முடிகின்றது. இந்தியாவின் இன்றைய சுயரூப வெளிப்பாட்டு நிலையைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இந்திய ஆளும் வர்க்கத்தைக் கண்டித்தும் நொந்தும் கொள்கின்றனர். இன்னும் சிலர் காலச் சூழல் மாறும் போது இந்தியா ஈழத் தமிழர்களுக்கு கை கொடுத்துக் கரை சேர்க்கும் என்ற நப்பாசையிலும் இருந்து வருகின்றனர்.

இந்த நம்பிக்கை இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் இருந்து வருகின்றது. அவர்கள் என்றும் இந்திய ஆளும் வர்க்க விசுவாசிகளாகத் திகழ்ந்து வந்தவர்களே. இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் சந்தர்ப்ப சூழலின் நிர்ப்பந்தத்தால் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு பாராளுமன்றம் வந்தவர்களேயன்றி ஒரே கட்சியின் மூலம் தெரிவானவர்கள் அல்லர். வலிந்து கூட்டமைப் பாக்கப்பட்டவர்கள். அவர்கள் வெற்றிபெற்ற விதமும் சர்ச்சைக்குரியது. அது மட்டுமன்றி இவர்கள் முன்பு ஒருவரை ஒருவர் எதிர்த்து சகோதர யுத்தத்தில் எதிரிகளாக நின்றவர்கள். இருப்பினும் வெவ்வேறு நிலைகளில் இந்திய விசுவாசத்தில் தளராத நம்பிக்கை கொண்டிருந்தவர்கள்.

இவர்களது அடிமை விசுவாசத்தை இந்திய எசமானர்கள் பெரிதாக மதித்ததில்லை. அவர்கள் இவர்களை அதட்டி மிரட்டியே வந்துள்ளனர். அதற்காக இத் தமிழர் தரப்பினர் சினத்ததோ எதிர்த்ததோ கிடையாது. இருப்பினும் அவ்வப்போது இவர்களில் ஒருவர் இருவரைச் சந்தித்துக் கொள்வது வழக்கம். அது கூடச் சில காலம் இடம் பெறவில்லை. அந்தவகையிலேயே அண்மைய எம்.கே. நாராயணன் குழுவினரின் திமர் வருகையின் போது கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனை நாராயணன் சந்தித்துச் சென்றார். அதன் பின் இந்தியப் பிரதமர் இங்கு வந்த வேளையிலும் சம்மந்தன் சந்தித்து தமது பரிதாப நிலையை எடுத்துக் கூறியிருந்தார். சரி விரைவில் டெல்லிக்கு வருமாறு அழைப்பு விடுப்போம் என மேற்படி எசமானர்கள் கூறிச் சென்றனர். அதன் அடிப்படையிலேயே சம்மந்தன் டெல்லிக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார். சம்மந்தனை மட்டுமன்றி ஆனந்தசங்கரியின் தலைமையிலான மூன்று தமிழ்க் கட்சிகளினரையும் டெல்கித் தலைமை அழைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரில் யாருடன் பேச வேண்டும் யாருடன் பேசக் கூடாது என்பதில் கூட இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்களுக்கு வரையறை உண்டு. அது ஏன் எப்படி என்பது கூட்டமைப்பிற்குள் உள்ள ஒரு பகுதியினருக்கு நன்கு விளங்கக் கூடியதாகும்.

இந்தியா தனது பிராந்திய நலனுக்காக எதை விட்டுக் கொடுக்க வேண்டும் எதை அழுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் அன்றும் இன்றும் தெளிவாகவே இருந்து வந்துள்ளது. அந்த வகையில் தான் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை ஊடாக இந்தியா தனது மேலாதிக்கக் காய்களை நகர்த்தி வந்திருக்கிறது. இந்த யதார்த்தமும் உண்மையும் இலங்கையின் தமிழ்த் தேசியவாதத்தை குறுந்தேசியவாதமாக வளர்த்தெடுத்து வந்த அனைத்து தரப்பினருக்கும் ஆரம்பத்திலேயே புரிந்திருக்க வேண்டும். இவர்கள் தமிழர்களின் வாழ்வுரிமைகளையும் இலங்கையில் அவர்களது இருப்பின் நிலைப்பையும் தூர நோக்குடன் அணுகி அதற்கான கொள்கையை வகுத்து முன்னெடுத்திருந்தால் இந்தியாவை நம்பி மோசம் போயிருக்கமாட்டார்கள்.

அது மட்டுமன்றி இலங்கைத் தமிழர்களின் தலைவிதியை தாங்களாகவே தமது சொந்தப் போராட்டங்கள் மூலம் தீர்மானிப்பதைத் தடுத்து தாமே சகல உரிமைகளையும் வென்றெடுத்துத் தருவதாகக் கூறித் தமிழர் தலைமைகள் தமது கைகளில் பொறுப்பெடுத்துக் கொண்டனர். பாராளுமன்ற அரங்கில் விவாதத் திறமையாலும் பேரப்பேச்சாலும் வெள்வெருட்டு அகிம்சை போராட்டங்களாலும் தமிழர் உரிமைகளுக்கு தமிழர் பழைவாதத் தலைவர்கள் தாங்கினர். இவர்களுக்கு மாக்சிசம் சோசலிசம் இடதுசாரி நிலைப்பாடு என்பன உள்வாங்க முடியாத வேப்பெண்ணையாக இருந்தன. அதற்கான காரணம் இத் தமிழ்த் தலைமைகள் உயர் வர்க்க உயர் சாதிய மேட்டுக்குடி சக்திகளின் பிரதிநிதிகளாக இருந்தமையாகும். அதனால் உலக சோஷலிச இயக்கத்தையும் நாடுகளையும் விரோதத் தனத்துடனேயே நோக்கி வந்தனர். அதேவேளை கொலனிய வெள்ளை எசமானர்களின் பணிவான அடிமை விசுவாசிகளாக இருந்து வந்ததுடன் பின் ஏகாதிபத்திய தாசர்களாகவும் தம்மைத் தக்கவைத்தும் வந்தனர். இதன் தொடர்ச்சியை ஆயுதம் ஏந்திய தமிழர் இயக்கங்களும் முன்னெடுத்து வந்தன. சில இயக்கங்கள் சோஷலிசம் இடதுசாரி விடயங்கள் பேசினாலும் அவை அடிப்படையில் தமிழர் பழைமைவாதக் கருத்தியலையும் சிந்தனை நடைமுறைகளையும் மீறிச் செல்லவில்லை. பல்வேறு இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு புலிகள் இயக்கம் தனியொரு இயக்கமாகத் தம்மைப் பிரகடனப்படுத்திய சூழலிலும் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனைத் தொடர்ச்சி அறுபடவில்லை. அதேபோன்று இந்தியாவையும் அமெரிக்க ஐரோப்பிய சக்திகளையும் வெவ்வேறு அளவுகளில் விசுவாசத்துடன் நம்பி நிற்கும் போக்கில் மாற்றம் எதுவும் நடைபெறவில்லை.

தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர் என்ற படிமம் தென்னிலங்கையில் பேரினவாதிகள் மத்தியில் மட்டுமன்றி இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலும் உறைந்து கொண்டது. அதனால் இந்தியா தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை ஒட்டுமொத்தமான ஒரு சத்தியாகக் கணக்கில் கொள்ளாது ஏனோ தானோ என்ற நிலையில் ஒப்புக்கு சந்திக்க ஏற்பாடு செய்தனர்.

இந்தியத் தரப்பிற்கு புலிகள் இயக்கத்தைப் பிடிக்காது. புலிகள் இயக்கம் இந்தியாவை நம்பும் நிலையில் இல்லை. சில தமிழர் கட்சிகள் இந்தியா சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளன. ஆனால் புலிகள் அவ்வாறு இந்தியா கூறுவதை ஏற்க மாட்டார்கள். இவற்றின் மத்தியில் தமிழ் மக்களின் நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்து நிற்கிறது. பேரினவாத சிங்கள பௌத்த ஆளும் வர்க்கம் இந்தியாவைத் தமது யுத்தத்திற்கு நன்கு பயன்படுத்தி வருகின்றது. அதற்கு பிரதியுபகாரமாக இலங்கையை இந்தியாவின் பொருளாதாரக் கொலனியாக்கிக் கொள்ள சகலவற்றையும் தாரை வார்த்தும் வருகின்றது. எனவே வடக்கு கிழக்கில் தமிழர்கள் அழிக்கப்படுவது இந்தியாவிற்கு ஒரு பொருட்டல்ல. சொந்த நாட்டில் உலகமயமாதலின் கீழான சுரண்டலுக்கும் சூறையாடல்களுக்கும் களம் அமைத்து தம் நாட்டு மக்களையே வாழ்விழக்க வைக்கும் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு இலங்கைத் தமிழர்கள் அழிக்கப்படுவது ஒரு அற்ப விடயமேயாகும்.

ஏற்கனவே வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டு அங்கு சகோதரப் படுகொலைகளும் தமிழ் முஸ்லீம் மோதலும் ஏற்படுவதற்கு இந்தியா வகித்த பாத்திரம் யாவரும் அறிந்த இரகசியமாகும். பதின்மூன்றாவது திருத்தத்தைக் காட்டி அரசியல் தீர்வை இழுத்தடித்து யுத்தத்தை வேகமாக முன்னெடுக்கும் மகிந்த சிந்தனை அரசுக்கு சகல உதவிகளையும் செய்துவரும் இந்தியா தமிழ் மக்கள் அழித்தொழிக்கப்படுவதை எப்படித் தடுக்கப்போகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தனை அழைத்து என்ன கூறப்போகிறது. சம்மந்தன் டெல்கியில் இந்தியா அதட்டிச் சொல்வதைக் கேட்பாரா அல்லது புலிகள் இயக்கம் சொல்வதை அங்கு உறுதியாக எடுத்துரைப்பாரா. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம். பாவம் சம்மந்தன் எப்படியும் இன்று தமிழர் படும் அவலங்களைப் பட்டியலிட்டு இந்திய எசமானர்களுக்கு பணிவாக எடுத்துரைத்து விட்டு சும்மா திரும்ப வேண்டியதுதான். இந்தியாவை நம்பியவர்களும் இன்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களும் அனுபவிக்க வேண்டிய ஒரு தண்டனை தான் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா வகிக்கும் பிராந்திய மேலாதிக்க நிலைப்பாடாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் பழைமைவாதப் பீடைகள் அழிக்கப்படாத வரை விடுதலை இல்லை

**நான் வி.எஸ். நய்ப்பாலின் ரசிகன் அல்ல.** நய்ப்பாலின் உலகநோக்குடன் எனக்கு உடன்பாடு இல்லை. அவர் இந்திய வம்சாவழியில் வந்த மேற்கிந்தியர், எனினுங் கறுப்பின மக்களதும் இந்தியத் துணைக்கண்டத்தினரதும் பண்பாடு பற்றி அதிகம் மதிப்பு இல்லாத ஒருவர். வெள்ளை இனத்தோரின் நாகரிகத்தை வழிபடு பவரென்று கூடச் சொல்லலாம். அவருக்குச் சில ஆண்டுகள் முன்பு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. அதெல்லாம் ஒரு புறமிருக்க அவரது வசனம் ஒன்றில் ஆழமான கருத்தொன்று புதைந்திருந்தது. அது நமது சமூகத்துக்குப் பொருந்தி வருவதால் அதை இடையிடை நினைவு கூர்ந்திருக்கிறேன். “நான் கிராமத்தை நீங்கினேன். ஆனால் கிராமம் என்னை நீக்கவில்லை” என்ற அவ் வசனத்திற்குப் பலவாறான வாசிப்புகள் இயலுமானவை. ஆனால் அதன் சாராம்சம் பழமைவாதத்தின் பிடிப்பு மிக வலுவானது என்பது என்றே சொல்வேன்.

அது இடப்பெயர்வு தொடர்பான ஒரு விடயம் மட்டுமல்ல. கல்வி, தொழில், நவீனத்துவத்துடனான பரிச்சயம், ஏன் மதமாற்றங்கூடச் சில விடயங்களை மாற்றுவதில்லை. மாற்றத் தேவையான சிந் தனைகளும் பழக்க வழக்கங்களும் உள்ளன. மாற்றத் தேவை யற்றவை உள்ளன. மாற்றக்கூடாதவை உள்ளன. ஆனால் இவற் றில் எல்லாம் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்காமல் சில விடயங் களை நமது அடையபளத்தின் பேரால் மரபு என்றும் வழமை என்றும் சம்பிரதாயங்கள் என்றும் கண்மூடித்தனமாகப் பற்றிக் கொண்டிருக்கிறோமே அது கவலைக்குரியது. சிந்தித்து எடுத்த முடிவு தவறானதென்றாற் கூடப் பரவாயில்லை. அதன் விளைவு களைக் கண்ட பிறகு மீளச் சிந்தித்துத் திருத்திக்கொள்ளலாம். சிந்திக்காமல் எடுக்கப்படுகிற முடிவுகள் சரியோ பிழையோ அவை ஆபத்தானவை. ஏனெனில் அவை சரியாக அமைகிற போதும் அவற்றுக்கான காரணங்கள் தவறானவையாகவே அமைகின்றன. அத்தவறுகள் தான் எதிர்பாராத போது தவறான முடிவுகட்கு இட் டுச் செல்லலாம்.

ஈ.வெ.ரா. அவர்கள் (பெரியார்) தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி என்று சொல்லியிருக்கிறார் என்று அவர் மீது கோபங் கொண்ட வர்கள் இருந்தனர். இன்னமும் அது பற்றிச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர் தமிழ் மீதோ தமிழர் மீதோ வெறுப்பால் அதைக் கூறவில்லை. தமிழர் பல விடயங்களிற் காட்டுமிராண்டி யுகத்தில் வாழ்கிறார்கள். அவர்களது பேச்சும் சிந்தனையும் அந்த யுகத்திற்கு உரியனவாக உள்ளன. அவர்களது மொழி அவர்களை நவீன சிந்தனைக்குக் கொண்டு செல்ல உதவவில்லை என்பதே அவரது மனக்கொதிப்பாக இருந்தது. இன்றுங் கூட இந்த மொழி எதற்காக அதிகம் பயன்படுகின்றது. என்று எங்கள் நாளேடுகளைப் படித்துப் பாருங்கள். மதங்கள் தொடர்பான கட்டுக்கதைகள் எவ்வளவு உள்ளன? சோதிடம் என்கிற பொய்புரட்டு வேலை எத்தனை பக் கங்களை நிரப்புகிறது? மாந்திரிகத்திற்கான விளம்பரங்கள் எத்தனை? அதைவிட மனதுக்கு வந்த பொய்களை எல்லாம் எண்ஜோதிடம் (அதிர்ஷ்ட விஞ்ஞானம்!) என்கிற பேரிற் கூசாமல் எழுதிக் காசு சம்பாதிக்கிறவர்கட்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது? மனிதன் பகுத்தறிவுள்ள பிராணி என்கிறார்கள். இந்தப் பொய் புரட்டுக்களைக் கேள்வி விசாரணை இல்லாமல் ஏற்கிற எவரும் பகுத்தறிவுள்ள ஒரு பிராணியா இருக்க இயலுமா?

தமிழில் மருத்துவ, விஞ்ஞான, தொழில் நுட்பத் தகவல்களை நிதானமாகவும் பொறுப்புணர்வுடனும் வழங்க இயலுகிறதா? தமிழில் நவீன சிந்தனைகளை அறிவுபூர்வமாகப் பரிமாறவும் பகிரவும் விவாதிக்கவும் இயலுகிறதா? நாங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம். ஆனால் ஒரு நுகர்வுப் பண்டமாக கணனியை வைத்துச் சோதிடம் பார்க்குமளவுக்கு நமக்கு ஆற்றல் இருக்கிறது. அந்தச் சோதிடம் ஒரு பூரணமாக புலுடா வேலை என்று விளங்கிக் கொள்ளக் கூடிய அறிவுத் திறன் இல்லை.

நாம் ஒருபுறம் மூட நம்பிக்கைகளின் அடிமைகளாக இருக்கிறோம். இன்னொரு புறம் அந்நிய நுகர்வுப் பண்பாட்டுச் சிந்தனையின் அடிமைகளாக இருக்கிறோம்.

என்றாலும் நமது அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்காத மரபு சார்ந்த உயர் விழுமியங்கள் பற்றியும் இடையிடையே பேசிக் கொள்கிறோம். நம்மிடம் எல்லாமே இருக்கிறது என்று மார்தட்டிக் கொள்கிறோம். ஆனால் நமது இன்னல்களிலிருந்து நம்மை மீட்க எந்த அந்நியர்கள் வருவார்கள் என்று தவங்கிடக்கிறோம். பச்சை யான உண்மைகளை விட நமது பகற்கனவுகள் நமக்குப் பவித்திர மானவையாக இருக்கின்றன. நாங்கள் நம்மை நமது இறந்த காலத்தின் இருண்ட பகுதிகளின் இரும்புப் பிடியினின்று தளர்த் துவது எப்போது?

“தந்தை செல்வா” தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தார் என்று நம்ப விரும்புகிறோம். அவர் சாதியையும் பிரதேசவாதத் தையும் கடந்து தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தினார் என்றும் நம்ப விரும்பினோம். அவரது தேர்தல் தொகுதியில் இருந்த பெரிய கோயிலின் கதவுகள் சாதியால் தாழ்த்தப்பட்டவர்கட்கு அடைக் கப்பட்டே இருந்தது. அதைத் திறக்க ஒரு வெகுசனப் பேராட்டம் தேவைப்பட்டது. அண்மை வரையிலும் சில பாடசாலைகளில் உயர் வகுப்புகட்குப் போக இயலாமற் சாதி தடையாக இருந்து வந்துள்ளது.

யாழ். நூலகம் எரிக்கப்பட்ட போது, எல்லாத் தமிழ் மனங்களுங் கொதித்தன. அதில் மிகுந்த நியாயம் இருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனின் பாட நூல்களை ஒரு சாதி வெறியன் பறித்துக் கிழித்தெறிந்தபோது கே. டானியல் எழுப்பிய கேள்வி இன்றும் என் மனதில் பசுமரத்தாணிபோல பதிந்துள்ளது. உங்கள் நூலகம் அழிந்தது பற்றி நீங்கள் கொதிக்கிறீர்கள். இந்தச் சிறுவனின் நூலகம் உங்களில் ஒருவரால் அழிக்கப்பட்டிரு க்கிறதே அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்ற கருத்துபட அவர் கேள்வி எழுப்பியிருந்தார். எவ்வளவு சத்தியமானது அவரது கேள்வியின் நியாயம்!

இன்றுங் கூடச் சாதியத்தைக் கண்டித்துப் பொது மேடையில் யாரும் பேசினால் ‘அவர் என்ன பகுதி?’ என்ற விதமான விசா ரணைகள் காதோடு காதாகச் செய்யப்படுகின்றன. கல்வி அறிவு நம்மைக் காட்டு மிராண்டித்தனத்திலிருந்து மீட்கப் போதுமானதல்ல. பல சிங்களப் பேரினவாதிகளும் இனவெறியர்களும் படித்தவர்களாக உள்ளனர் என்று அறிவோம். அவ்வாறே தமிழ்ச் சாதி வெறியர் களிடையே படித்தவர்கள் பலர் உள்ளனர் என்பது உண்மை. பிரதேச வாதம், ஊர் அடிப்படையிலான குழுவாதம் என்பனவும் அவர்களிடையே உண்டு. ‘சிவத்தமிழ்ச் செல்வி’ தங்கம்மா அப்பாக் குட்டியின் அனாதை மடங்களில் தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தை கட்கு இடம் மறுக்கப்பட்டது என்பதை அண்மையில் அறிந்தபோது எனக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் அது பற்றி இவ்வளவு காலமும் ஏன் விரிவாகப் பேசப்படவில்லை என்று ஏமாற்றமாக இருந்தது. ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் சாதி அடிப்படை யில் ஒரு இளம் போதனாசிரியரை நிந்தித்த கதையும் எனக்கு அதிர்ச்சி தரவில்லை. இப்படிப்பட்டவர்கள் சந்திர மண்டலத்துக்குப் போனாலும் அவர்களுடைய கிராமம் (அல்லது அக்காட்டுமிராண்டிச் சனத்தின் காடு) அவர்களுடனேயே போகும் என்பது தான் உண்மை.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் வெற்றிபெற வேண்டு மானால் முதலிற் சகல தமிழ் மக்களும் நாகரீக யுகத்திற்குள் வந்து சேர வேண்டும் என்று நினைக்கிறேன். சாதி, பிரதேசம், வம்சாவழி போன்ற வேறுபாடுகளை அறவே களைவதற்கான

தொடர்ச்சி 12ம் பக்கம்

# தமிழனைத் தமிழன் ஆளும் தமிழ் நாட்டு குடும்ப அரசியல்

**தமிழ் நாட்டில் ஆறரைக் கோடிக்கு** மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வர்க்க சாதிய பால் மத அடிப்படைகளில் ஏற்றத்தாழ்வுகளுடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் வறுமையும் பட்டினியும் வேலை இன்மையும் இல்லாமைகளும் போதமைகளும் ஏகப்பெரும்பான்மையான தமிழ் மக்களின் வாழ்வில் இருந்து வருகின்றன. ஆனால் அங்குள்ள அரசியல் கட்சிகள் தமிழன் தமிழனின் பெயராலும் சாதியின் பெயராலும் சட்டசபை அரசியலில் பாராளுமன்ற அரசியலில் பங்கு கொண்டு தமது உயர்வர்க்க மேட்டுக்குடி அரசியல் நடாத்தி வருகின்றனர். கடந்த அறுபதாண்டு கால ஆட்சியில் திராவிடக் கட்சியைச் சேர்ந்த ஆளம் வர்க்க குடும்பங்கள் கோடி கோடியாகப் பணமும் சொத்தும் சுகபோகங் களும் சேர்த்துக் கொண்டன. அதனால் அதிகாரம் அடியாட்கள் கூட்டம் அவ்வப்போது அரச படைகளின் பாதுகாப்புடன் ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர்.

இதன் மூலம் திராவிடக் கட்சிகளிலும் காங்கிரஸ் கட்சிகளிலும் குடும்ப அரசியலும் ஆட்களும் தொடர்கின்றன. தமக்குப் பின்பு தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் நிலைத்து நின்று ஆட்சி செய்வதைக் குறியாகக் கொண்டே தற்போதைய தலைமைகள் செயலாற்றுகின்றன. இது தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்திய அரசியல் களத்தில் எங்குமே இந்த வாரிசு அரசியல் தொடர்கிறது. அதன் மூலம் மக்களுக்கு நன்மை கிடைத்தால் கூட பரவாயி ல்லை என ஏற்க முடியும். பணம் சம்பாதிக்கவும் அதிகாரம் செலுத்தவும் சொத்துடைய உள் நாட்டு வெளி நாட்டு சக்திகளுக்கு பாதுகாப்பு அளிக்கவுமே இக் குடும்ப அரசியல் தொடர்கிறது.

இதில் தி.மு.க வில் கருணாநிதி (84) குடும்பம் முன் நிற்கிறது. அது இன்று தமிழ் நாட்டின் கோடீஸ்வரக் குடும்பங்களில் ஒன்று கருணாநிதியின் இரண்டு மனைவிகளின் பிள்ளைகள் அரசியல் அதிகாரப் பதவிகளுக்கும் சொத்துகளுக்கும் வாரிசுகளாக முன்னிற் கிறார்கள். இதில் மு.க. அழகிரி (57) மகன், மு.க. ஸ்டாலின் (55), கனிமொழி (40) மகள் ஆகியோர் முன் நிற்கின்றனர். இத ற்கு அடுத்த வரிசையில் கருணாநிதியின் பேரப்பிள்ளைகள் நிற்கி றார்கள். மு.க.அ. துரை தயாநிதி (21), மு.க.அ கயல்விழி (32) மகள் ஆகியோர் உள்ளனர். மு.க.எஸ். உதயநிதி வயது(30) மகன் உள்ளார்.

ஜெயலலிதா செல்வியாக இருப்பினும் சசிகலாவின் குடும்பம் அ.இ.அ.தி.மு.க. வில்ல ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அங்கும் ஒரு வகைக் குடும்ப அரசியல் தான் கோலோச்சுகிறது. அங்கும் சாதிய அரசியல் தான்.

பாட்டாளி மக்கள்கட்சி வன்னியர் சாதிக் கட்சியாகும். அதன் தலைவர் டாக்டர் எஸ். இராமதாஸ் (67) தமது சாதியினரின் நலன் பேணுபவர் போலவும் தமிழ் மொழி பண்பாடு பாதுகாப்பவர் போல வும் செயலாற்றி வருகிறார். அரசிய லில் கணிசமான செல்வாக்கைப் பெற்றிருப்பதன் மூலம் சொத்து சுகம் பெற்றும் உள்ளர். தனது மகனான அன்பு மணி(39) மத்திய அரசின் சுகாதார அமைச் சராக்கி அப்பதவி யைப் பாதுகாத்தும் வருகிறார்.

மத்திய நிதி அமைச்சரான பி. சிதம் பரம் (62) காங்கிரஸ்காரர் அவரது மகன் கார்த்திக் சிதம்பரம் (36) அரசி யலுக் பயிற்றப்பட்டு வருகிறார்.

அடுத்து எம். கிருஷ்ணசாமி (68) காங்கிரஸ் விசுவாசியான இவர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக உள்ளவர். இவரது மகன் எம்.கே. விஷ்ணு (35) பிரசாத் ஒரு வைத்தியராக சென்னை மருத் துக் கல்லூரியில் இருந்து வெளி வந்துள்ளார்.

இவர்கள் அனைவரும் தமிழ் நாட் டையும் மக்களை ஆட்சி செய்யவே தத்தமது கட்சிகளின் ஊடாக முன் நிற்கிறார்கள். அதற்கு தமது குடும்ப அரசியல் தொடர்ச்சியை முன்னெடு த்துச் செல்லவே முழு முயற்சி செய்து வருகிறார்கள்.



இக் கார்ட்டூன் சண்டே ரைம்ஸ் ஒவ் இந்தியா சென்னைப் பதிப்பு ஏப்பிரல் 20. 2008ல் வெளிவந்ததாகும்.

தமிழ் நாட்டு மக்கள் இத்தகைய குடும்ப ஆட்சி வழி வந்தவர்க ளைத் தரிசனத் தலைமையாகவே காண்பது தான் பரிதாப நிலை யாகும் நிலவுடைமைக்கால மன்னராட்சிக் காலச் சிந்தனைகளின் அடிமைத்தனப் போக்கு அரசியலிலும் தொடர்கிறது. பணம் சொத்து அதிகாரம் அடியாட்கள் பவிசு அந்தஸ்து யாவும் சேர்ந்தே தமிழ் நாட்டு அரசியலை வழி நடாத்துகிறது. அந்த அரசியல் நிலவுடைமை முதலாளித்துவ ஆட்சியாகவே தொடர்கிறது. அத்தகைய ஆட்சிகள் இன்றைய உலகமயமாதலுக்கு சிகப்பு கம்பளம் விரித்து நிற்கிறது. இந்திய மாநிலங்களில் ஆகக் கூடிய அந்நிய மூலதனத்திற்குப் பாய் விரித்த மாநிலம் தமிழ் நாடாகவே இருக்கிறது என்று பெருமை பேசப்படுகிறது. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மிக மோசமடைந்து செல்கிறது. வறுமை வேலை இன்மை வளர்ந்து செல்கிறது. சாதிய இழிவுகள் தொடர்கின்றன. பெரியாரின் பகுத்த றிவுக் கொள்கைகள் யாவும் அவரது சீடர்களான தி.மு.க வினரா லேயே காற்றில் பறக்கவிடப்பட்டன. தமிழகத்தில் நடக்கும் ஆட்சியும் அதிகாரமும் வர்க்க சாதிய ஆணாதிக்க ஆட்சியேயாகும். இதனை மூடி மறைத்துக் கொள்ளவே தமிழர்களைத் சுத்தத் தமிழனான கருணாநிதி ஆள்வதாகக் கதை கட்டிப் பரப்புரை செய்யப்படுகிறது. தமிழர்களைத் தமிழர்களே ஆளுவதால் தொழி லாளர்கள் விவசாயி கள் மற்றும் உழைக்கும் மக்கள் பெண்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பழங்குடி மக்கள் என்போருக்கு எவ்வித பலாபலனும் விமோசனமும் கிடைக்க மாட்டாது. இதனையே தமிழ் நாட்டில் காண முடிகிறது.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய மேலாதிக்கம் பற்றிய ஜே.வி.பியின் சந்தர்ப்பவாதம்

தயா

**ஜே.வி.பி என்றுமில்லாதவாறு மீண்டும் இந்திய** எதிர்ப்பு பற்றிப் பேசுகிறது. கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் இந்தியாவிற்கு கொடுக்கப்படவிருப்பது பற்றியும் மன்னாரில் எண்ணெய் அகழ்வு காங்கேசன்துறை சீமெந்துதொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை கொடுக்கப்படவிருப்பது பற்றியும் எண்ணெய் வர்த்தகம் இந்தியாவிடம் கொடுக்கப்பட்டிருப்பது பற்றியும் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்யப்பட்டது பற்றியும் அதனால் இலங்கைக்கு ஏற்படுகின்ற பொருளாதார பின்னடைவுகள் பற்றியும் விளக்கமாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும் பேசிவருகின்றனர். இவற்றில் உண்மை இல்லாமல் இல்லை. இலங்கை ஏறக்குறைய இந்தியாவின் பொருளாதாரக் கொலனியாக மாறியுள்ளதெனலாம். ஜே.வி.பி அவற்றை கூறுவது மட்டுமன்றி இலங்கையில் வடக்கு கிழக்கில் சமஷ்டி முறையை ஏற்படுத்தி தமிழர்களிடம் அப்பிரதேசத்தை ஒப்படைப்பதற்கு இந்தியா இலங்கை அரசாங்கத்தின் மீது மேலாதிக்கம் செலுத்திவருகிறது என்றும் கூறுகின்றனர்.



எனவே ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு என்பது இலங்கையின் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிரான நிலைப்பாடாகவே இருக்கின்றது. இந்தியா இலங்கை தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை உறுதி செய்ய ஆக்கப்பூர்வமான முயற்சிகளை எடுத்ததாகவோ எடுக்கும் என்றோ எவரும் சொல்வதை கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

## இந்திய விஸ்தரிப்புவாதமும் மேலாதிக்கமும்

இந்திய ஆளும்வர்க்கங்கள் அவற்றின் மேலாதிக்கத்தை இந்தியாவுக்கு வெளியிலும் விஸ்தரிப்பதாக அதற்கு எதிரான போராட்டமும் இலங்கைவாழ் அனைத்து மக்களின் விடுதலைப் போராடடத்தின் பகுதியாகும் என்று பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அறியப்பட்ட தோழர் என். சண்முகதாசனின் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் அதனது அவதானிப்பை 1960 களில் வெளியிட்டது. இந்நிலைப்பாட்டை 'சீனசார்பு' நிலைப்பாடு என்றும் இன்றும் கொச்சைப்படுத்தும் 'இந்திய தாசர்கள்' இருக்கின்றனர். அதாவது மாசேதுங் சிந்தனையை ஏற்றுக்கொண்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான எல்லைச் சண்டையில் சீன ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தது போன்று இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்காகவே இந்தியவிஸ்தரிப்பு வாதத்திற்கு எதிரான கொள்கையை எடுத்தது என்று குற்றம் சாட்டப்படுகிறது. இந்திய- சீன எல்லைச்சண்டையில் சீனா எடுத்த நடவடிக்கைகள் பெரும்பாலும் சமாதான வழிமுறைகளாகவே இருந்தன. இந்தியாவே வலிந்து யுத்தத்தை தொடங்கியது என்பது தெரியாத விடயங்களல்ல. இந்திய விஸ்தரிப்புவாதம் என்பது 'சிக்கிம்மை' இந்தியாவுடன் இணைத்துக் கொண்டதும் வெளிப்படையானது. 'சிக்கிம்மை' இந்தியாவுடன் இணைத்துக் கொண்டவுடன் 'இலங்கையை' பற்றி உங்களின் நிலைப்பாடு என்னவென்று கேட்டபோது "காலம் வரும்" என்று அப்போதைய இந்திய பிரதமர் ஜஹவர்லால் நேரு கூறியிருந்தார். அத்துடன் இந்தியா தொடர்ச்சியான அதன் அயல் நாடுகளுடன் 'சமத்துவம்' என்ற கொள்கையைவிட இந்திய நலன் என்பதையே உயர்த்திப்பிடித்து வருகிறது. பாகிஸ்தான் பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு, இலங்கை ஆகியவற்றுடன் இந்தியா கொண்டிருக்கும் மேலாதிக்கம் வெளிப்படையானதே.

இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறிப்பாக நேரு- கொத்தலாவல உடன்பாடு, சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் சிறிமா இந்திரா ஒப்பந்தம் பிற்காலத்தில் 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை- இந்திய சமாதான உடன்பாடு, சுதந்திர வர்த்தக உடன்பாடு போன்றவற்றில் இந்திய மேலாதிக்கம் நிலை நாட்டப்பட்டுள்ளது.

1970 களின் பிற்பகுதியில் ஒப்பீட்டளவில் தென்னசியப் பிராந்திய நாடுகளில் இலங்கை பொருளாதார, கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் முன்னணியில் இருந்தது. இந்தியாவிற்கு சரணடையாத அரசியல் தலைமைகள் இங்கிருந்தன. இந்த நிலையை சீர்குலைப்பதற்கு இந்தியாவிற்கு வசதியாக கிடைத்த துருப்பே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை. பல தமிழ் இளைஞர் குழுவினருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்டது. அவற்றில் பலவற்றை இந்தியாவே இயங்கியது. இதன் உயர்ந்த கட்டமே 1987 இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கை ஆகும்.

இவ்வாறு தொடர்ச்சியாக இந்தியாவின் மேலாதிக்கத்தை அவதானிக்க முடிந்தபோதும் இந்திய விஸ்தரிப்பு வாதம் மேலாதிக்கத்திற்கு எதிரானபோக்கு சீனசார்பான நிலைப்பாடு என்றே இன்றும் சிலர் வாதிடுகின்றனர். இதற்கு இன்னொரு முக்கியமான தவறான புரிதலும் இருக்கிறது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் விவாதிக்கப்பட்ட புரட்சிகரப்பாதையா பாராளுமன்ற சமரசப் பாதையா என்ற இரண்டு நிலைப்பாடுகளையும் சீனசார்பு சோவியத் சார்பு என்று தவறாகவே வேண்டுமென்றோ கற்பிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி என்று இன்றும் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்ற சமரசப் பாதையை முன்னெடுத்தது. சர்வதேச ரீதியான சோவியத்தின் பக்கத்தை எடுத்தது. மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொண்டவர்கள் புரட்சிகரப்பாதையை முன்னெடுத்தனர். புரட்சிகரப்பாதையை முன்னெடுத்தவர்கள் சர்வதேசரீதியாக மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொண்டதால் அவர்களை சீன சார்பு என்று கூறி இந்திய எதிர்ப்பாளர்களாகக் காட்டப்பட்டது.

இந்த இந்திய விஸ்தரிப்புவாத மேலாதிக்க எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள இளைஞர்களால் உருவாக்கப்பட்ட ஜே.வி.பி அதனுடைய தீவிர தேசியவாத சிறுமுதலாளித்துவ நிலைப்பாட்டிற்கு ஆதரவாக வலியுறுத்தியது. ஜே.வி.பி மாசேதுங் சிந்தனையை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியோ ஆரம்பகாலத்தில் சீனாவுடன் நெருங்கிய உறவை வைத்திருந்த கட்சியோ இல்லை.

இந்திய விஸ்தரிப்புவாத- மேலாதிக்க எதிர்ப்பு என்பதை ஜே.வி.பி சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து கடன்வாங்கிய கொள்கை ஆகும் என்று பேராசிரியர் சுசரித்த கம்லத் அவரது ஜே.வி.பியின் பிறப்பு, இருப்பு, இறப்பு என்ற நூலில் எழுதியிருக்கிறார். ஆனால் அவர் அந்த கொள்கையை ஜே.வி.பி தவறாக அர்த்தப்படுத்தியதா இல்லையா (அக்கொள்கை சரியானதா இல்லையா) என்ற விவாதத்திற்கு செல்லவில்லை.

## ஜே.வி.பியின் நிலைப்பாடு

ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு அதிகார தேசியவாத சிறுமுதலாளித்துவ நிலைப்பாடாகும். 1971 கிளர்ச்சிக்கு அடிப்படையாக ஜே.வி.பி நடத்திய ஐந்து அரசியல் வகுப்புகளில் ஒன்று இந்திய விஸ்தரிப்புவாதம். அதில் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பிரதிநிதிகளாக மலையகத்தோட்டத்தொழிலாளர்களையும் சிறு இந்திய வியாபாரிகளையும் அடையாளம் காட்டியதுடன் அவர்களை இந்தியாவுக்கு நாடுகடத்த வேண்டும் என்றும் தேயிலை, றப்பர் தோட்டங்களை மூடிவிடவேண்டும் என்றும் கூறியது. அதன் 1971 கிளர்ச்சியை அடக்க இந்தியா அதன் இராணுவ உதவிகளை இலங்கைக்கு கொடுத்தது. இந்தியக் கடற்படையினர் கொழும்பில் நிலை கொண்டிருந்தனர்.

ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டையே உடனடியான கொள்கையாகக் கொண்டிருந்தது. வடக்கு கிழக்கில் தமிழ்மக்களுக்கு மாகாண சபையை அறிமுகம் செய்யக் காரணமாக இருந்ததாலேயே அதனை ஜே.வி.பி எதிர்த்தது.

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஜே.வி.பி பெரிதாக எதிர்க்கவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா வழங்கும் இராணுவ உதவிகளை எதிர்க்கவில்லை. இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுத்துவிடும் என்ற அச்சத்தை முன்னிறுத்தியே இந்தியாவுக்கு எதிராக ஜே.வி.பி பேசி வருகிறது. இலங்கையின் எண்ணெய் வர்த்தகத்தில் இந்தியா ஏகபோகம் செலுத்துவதை ஜே.வி.பி எதிர்க்கவில்லை. தற்போது பலவிதமான புள்ளிவிபரங்களுடன் இந்தியாவுக்கு எதிராக ஜே.வி.பி பேசுவது அதன் அரசியல் பின்னடைவைச் சீர்செய்து கொள்வதற்கான முயற்சியே ஆகும். சுயநிர்ணய உரிமைக்காக போராடிவரும் தமிழ்மக்களுக்கு ஆகக்குறைந்தளவு அதிகாரப் பகிர்வும் உறுதிசெய்யப்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையிலேயே ஜே.வி. பியின் இந்திய எதிர்ப்பு அமைந்துள்ளது. நோர்வேயின் அனுசரணையுடன் இங்கு முன்னெடுக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளை குழப்புவதற்காக இந்தியாவுக்கு ஆதாரவாக இருப்பது போல் பாசாங்கு செய்தது ஜே.வி.பி அதேவேளை சமாதான நடவடிக்கைகளுக்கு வெளியில் ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் அமெரிக்காவும் இங்கு செலுத்திவரும் மேலாதிக்கத்தை உரிய வலுவுடன் எதிர்க்கவில்லை. அவற்றை குறைத்தே மதிப்பிடுகிறது. அவை பற்றி அடக்கியே வாசிக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு இந்திய மேலாதிக்கம் பற்றியும் அடக்கியே வாசித்தது. ஆக ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு என்பதோ ஏகாதிபத்திய விரோத மேலாதிக்க எதிர்ப்பு என்பதோ இலங்கை தமிழ்மக்களுக்கு எதிரான நிலைப்பாடேயாகும். தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடே அதன் இந்திய எதிர்ப்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஆகும்.

## மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுகளின் நிலைப்பாடு

உண்மையான மாக்சிய லெனினிஸ நிலைப்பாடு என்பது எந்தவொரு நாட்டினதும் மேலாதிக்கத்திற்கு எதிரானதே ஆகும். இலங்கையின் சுதந்திரம் இறைமை, சுயாதிபத்தியம் என்பவற்றையும் இலங்கை வாழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் ஐக்கியத்தையும் இலங்கையின் தொழிலாளர் விவசாயிகளினது சுரண்டப்படும், அடக்கப்படும் அனைவருக்குமான சமூகமாற்றம் போன்றவற்றையும் முதன்மைபடுத்தும் எவரும் இந்திய மேலாதிக்கத்துடன் நட்பு பாராட்டமுடியாது. இதன் அர்த்தம் இந்தியமக்களுடனானதும் இந்திய ஜனநாயக முற்போக்கு சக்திகளினதும் உறவுக்கு பாதாகமானதல்ல மாறாக இந்தியாவின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறைமை ஐக்கியம் போன்றவற்றை மதிக்கும் அடிப்படையாகும்.

சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் சின்னமாகக் கொள்ளவில்லை. ஆனால் இலங்கையின் புரட்சிக்கு தலைமை சக்தியாக தோட்டத் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்றே கூறியது. அக்கட்சியின் செயற்பாடு குறைந்து தற்போது செயற்பட்டுவரும் புதிய- ஜனநாயக கட்சி இந்திய விஸ்தரிப்புவாதம் மேலாதிக்கம் இலங்கையின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் சுயாதிபத்தியத்திற்கும் ஐக்கியத்திற்கும் எதிரானதாகவும் இலங்கையின் தேசிய இனங்களின் சுதந்திரத்திற்கும் எதிரானதாகும் என்பதால் அதற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு உதவுவது போன்று பாசாங்கு செய்துகொண்டு இலங்கை- இந்திய உடன்படிக்கையின் மூலம் இந்தியா இலங்கையை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு சென்றது. அதன் பின் ஒவ்வொரு விடயத்திலும் இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியாக உதவி கொண்டு ஏறக்குறைய இலங்கையின் பொருளாதாரத்தை அதனுடைய காலடிக்கு கொண்டு சென்றுவிட்டது.

தற்போது ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் பங்காளியாக இந்திய ஆளும் வர்க்கங்கள் மாறிவிட்டன. இந்தியாவின் அதிகார முதலாளி வர்க்கம் (Bureaucratie Capitalist) முற்றுமுழுதாக ஏகாதிபத்திய பூகோளமயமாதலுக்கு சார்பாக செயற்படுவதுடன் இப்பிராந்தியத்தின் இந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதில் அவ் வர்க்கம் மிகவும் மூர்க்கத் தனமாக செயற்பட்டுவருகிறது.

இந்நிலையில் இந்திய ஆளும் வர்க்கங்களும் அரசகட்டமைப்புகளும் ஏனைய நாடுகளை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டே அதன் பூகோளமயமாதல் சந்தைப் போட்டிக்கு முகம் கொடுக்கிறது.

அதேவேளை ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் அர்த்தத்திலேயே இந்தியாவின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறைமை, தேசிய இனங்களின் சுதந்திரம் என்பவற்றை விளங்கிக் கொள்கிறது. அதனால் இந்தியமக்களுக்கும் தேசிய நலனுக்கும் பாதகமாகவே இந்திய ஆளும் வர்க்கங்களும் செயற்படுகின்றன. இந்திய நிலைப்பாட்டிலேயே இலங்கை நாட்டையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் இந்தியா அனுகுகிறது.

எனவே சீனஆதரவு எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்து இந்திய மேலாதிக்கத்தை சரியாக புரிந்து கொள்ள முடியாது. சீன- இந்திய முரண்பாடு என்று ஒன்றில்லை என்று கூறுவதற்கில்லை. சீன- இந்திய முரண்பாட்டில் இந்தியாவின் பக்கம் எடுக்கின்ற எவரும் இந்திய மேலாதிக்கம் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வன்னி நோக்கிய போரும் வதைபடும் மக்களும்

சண்முகம்

**வன்னி நோக்கிய போர் உச்ச நிலையை** நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனை நாளாந்தம் வெளிவரும் போர்க் களச் செய்திகள் தெரிவிக்கின்றன. மன்னாரில் இருந்து ஆரம்பித்த வடக்கு நோக்கிய போர் நகர்வானது ஏற்கனவே புலிகளின் வசம் இருந்த பல முக்கிய இடங்களை ராணுவம் கைப்பற்றிச் செல்வதாக இருந்தது. வன்னிப் பெரு நிலப்பரப்பின் மேற்கே A 32 நெடுஞ்சாலையை உள்ளடக்கிய பகுதிகளைத் தாம் மீட்டெடுத்து வருவதாக ராணுவத் தரப்புக் கூறி வருகின்றது. நாச்சிக் குடா வரையும் முன்னேறியுள்ளதுடன் நாச்சிக்குடா, துணுக்காய், மல்லாவிப் பிரதேசங்களையும் தாங்கள் முற்றுமுழுதாகக் கைப்பற்றி விட்டதாக ராணுவத்தினர் கூறி வருகின்றனர். அங்கிருந்து அக்கராயன் நோக்கி நகர்வதையும் போர்க்களச் செய்திகள் எடுத்துரைக்கின்றன. இச் செய்திகளை ராணுவத் தகவல் மையமும் புலிகளின் இணையத் தளங்களுமே செய்திகளாகத் தருகின்றனவே தவிர பொதுப்பட்ட செய்திகள் அங்கிருந்து இல்லை.




அதேவேளை வன்னியின் தென்கிழக்கிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கிய படைநகர்வும் இடம் பெற்று வருகின்றது. நெடுங்கேணி வரை தாம் முன்னேறியுள்ளதாக ராணுவத் தகவல் மையம் அறிவித்து வருகின்றது. மேலும் ராணுவத் தந்திரோபாயமானது A 9 நெடுஞ்சாலையை ஓட்டிய இருமருங்கிலும் முன்நகர்வைச் செய்யாது இருந்து வருகின்றது. அவ்வாறு ராணுவம் முன்னேறினால் கடும் எதிர்ப்பையும் மோசமான இழப்புக்களையும் சந்திக்க நேரிடலாம் எனக் கணித்ததன் மூலம் தமது முன்னேறும் தந்திரோபாயத்தை வகுத்துள்ளது போலும். அதே வேளை வன்னிப் பிரதேசம் காடுகளும் வயல் நிலங்களுக்கு நிறைந்திருப்பதால் ராணுவ முன்னேற்றம் இலகுவானதாக இல்லை என்பதையும் நகர்வின் வேகம் எடுத்துக் காட்டி வருகிறது. மேலும் இலங்கை ராணுவம் வன்னிப் பிரதேசத்தில் புகுந்து கொள்வது இதுவே முதல் தடவையாகும். ஆனால் இந்திய இராணுவம் ஏற்கனவே அமைதிப் படையென்னும் பெயரில் இங்கு வந்ததினால் வன்னி அவர்களுக்கு பழக்கப்பட்டதாக இருந்தது. இந்திய ராணுவ உயர் மட்டத்தின் அனுசரணை இலங்கை ராணுவத்திற்கு இருந்து வருவதையும் மறுக்க முடியாது.

மேலும் A 9 பாதையூடாக வன்னியில் இருந்து வவுனியா நோக்கி மக்கள் இடம் பெயர்ந்து வருவார்கள் என்ற நம்பிக்கையில் ராணுவம் காத்திருக்கிறது. A 9 பாதையூடான படை நகர்வை நடாத்துவதற்கு ராணுவம் தாமதிப்பதன் காரணம் அது வென்றும் சிலர் கூறி வருகின்றனர்.

இதேவேளை புலிகள் இயக்கம் பல முன்ரங்க நிலைகளில் இருந்து பெரும் மோதல்களுக்கு இடம் வைக்காது பின்வாங்கிச் சென்றுள்ளது. ராணுவத்தின் மேற்குப்புற விரைவான போர் நகர்வுக்கு புலிகளின் பின்வாங்கல் சாதகமாக அமைந்து கொண்டது. துணுக்காய் மல்லாவி "மீட்பிலும்" அது நடைபெற்றது. அதற்கு அப்பால் அக்கராயன் நோக்கிய படை நகர்வின் போது புலிகள் இயக்கம் கடும் எதிர்ப்பைக் காட்டியதால் போர்க் களம் உக்கிரம் அடைந்து வருகிறது. இரு தரப்பிலும் பெரும் உயிர்ச் சேதங்களும் படுகாயங்களும் ஏற்பட்டுள்ளன. கிளிநொச்சியை நோக்கிய ராணுவ நகர்வானது மேலும் போரை உச்சப்படுத்தப் போகிறது. ராணுவம் தனது பின்புல இருப்பைத் தயார்படுத்தி வருவதுடன் முன்னேறும் படைப்பிரிவுகளைப் புலிகள் ஊடறுத்து தனிமைப்படுத்தித் தாக்கியழிப்பதைத் தடுக்கும் வியூகங்களையும் வகுத்து வருகின்றது. அத்துடன் விநியோக வழிகளை ஏற்படுத்திப் பாதுகாக்கவும் முயன்று வருகின்றது. எவ்வாறாயினும் ராணுவத் தரப்பிற்கு வன்னிப் போர்க்களம் பல போர்ச் சவால்களுக்குரியதாகும். ஆனால் புலிகளுக்கு வன்னிப் பிரதேசம் நன்கு பழக்கப்பட்ட பிரதேசமாகிலும் ராணுவத்திற்கு இருக்கும் வளங்களும் பின்புலமும் விரிவானவைகளும் உறுதியானவைகளாகும். அதே வேளை கிளிநொச்சியை எப்படியும் பாதுகாப்பது என்பதில் புலிகள் வாழ்வு அல்லது சாவு என்ற நிலைப்பாட்டில் எதிர்த்து தாக்குதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உள்ளனர். இருப்பினும் வன்னிப் பிரதேச மக்கள் அங்கிருந்து வெளியேறி ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வராமல் இருக்கும் வரை புலிகளுக்கு சாதகமானதும் பலமுமாகும். இதனாலேயே அரசாங்கமும் ராணுவமும் வன்னி மக்களை வெளியேறி வருமாறு வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருக்கிறது. ஆனால் இடம் பெயர்ந்த மக்கள் தெற்கு நோக்கி வன்னியின் மத்திய பகுதிகளுக்கே செல்கிறார்கள். அதற்குப் பதிலாக வடக்கு நோக்கி வவுனியாவிற்கு வரத் தயாராக இல்லாத சூழலே காணப்படுகின்றது. புலிகள் மக்களைத் தடுத்து தமது இருப்பைப் பாதுகாக்க மனிதக் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர் என்றே அரசாங்கம் கூறி வருகின்றது. ஆனால் வன்னி மக்கள் நிர்ப்பந்தங்கள் வழிமறுப்புக்களையும் மீறி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வர கடும் அச்சம் காட்டுகிறார்கள். அதற்குக் காரணங்கள் இருக்கின்றன. 1995ல் தென்மராட்சி வடமராட்சிப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்து சென்று அகதிகளாக இருந்த மக்கள் ஐந்து மாதங்களுக்குப் பின் ராணுவ அழைப்பை நம்பி வலிகாமத்திற்குத் திரும்பினர். ஆனால் நம்பிக்கை துரோகம் நடந்தது. அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர். செம்மணிப் புதைகுழிகள் சில கண்டு பிடிக்கப்பட்டன. காணாமல் போனோர் ராணுவப் புதைகுழிகளுக்கு இரையாக்கப்பட்டதாகவே இன்றும் மக்களால் நம்பப்படுகிறது. இதே கதி இன்று ஏற்பட மாட்டாது என எப்படி வன்னி மக்கள் நம்ப முடியும். அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வரும் மக்கள் எவ்வாறு நடத்தப்படுவார்கள் என்ற பாரிய அச்சம் இருக்கவே செய்கிறது. அதனாலேயே வன்னி மக்கள் அவலங்களை அனுபவித்த போதிலும் தெற்கு நோக்கி வராது இருந்து வருகின்றனர்.



இத்தகைய உச்ச கட்டப்போர்ச் சூழலில் வன்னிக்குள் தத்தமது சொந்தக்கிராமங்கள் இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாகிய மக்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சங்களைத் தாண்டி விட்டது. ஆங்காங்கு உள்ள பாடசாலைகள் கோவில்கள் பொது இடங்கள் என்பனவற்றில் குறிப்பிட்டளவு மக்கள் இருந்து வருகின்றனர். ஆனால் பெருந் தொகையானோர் காடுகளில் மரங்களின் கீழ் வயல் பரப்புகளில் பரிதாபமாக இருந்து வருகின்றனர். அவர்கள் உணவுக்கும் குழந்தைகளுக்கான பால்மா போன்றவற்றுக்கும் கடுமையாகக் கஷ்டப்படுகின்றனர். நிவாரண உதவிகளை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளது. அதனால் அரசாங்க நிவாரண உதவிகள் அற்பமாகி உள்ளதுடன் அரசார்பற்ற நிறுவனங்கள் கட்டுப்பாடுகளை எதிர் நோக்கியுள்ளதால் அவை முடங்கல் நிலையில் உள்ளன.

வன்னிப் போரில் பொது மக்களின் குடியிருப்புக்கள் நடமாடும் பொது இடங்கள் ராணுவத் தாக்குதல்களால் இலக்கு வைக்கப்பட்டுத்தாக்கப்படுகின்றன. எறிகணை வீச் சுக்கள் பல்குழல் பிரங்கிகள் விமானங்கள் குண்டுகளைக் கக்கிய வண்ணமே உள்ளன. இறப்போர் அனைவரும் புலிகளாகவே காட்டப்படுகின்றனர். அழிக்கப்படும் வீடுகள் இடங்கள் புலிகளின் முகாம்கங்கள் எனப்படுகின்றன. மன்னார் மாவட்டமக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து அகதிகளாய் உள்ளனர். இப்போது கிளிநொச்சி முல்லை த்தீவு மக்கள் அகதிகளாகி உள்ளனர். அவர்கள் பாதுகாப்புத் தேடி அடிக்கடி இடங்களை மாற்றிச் சென்றாலும் குறிப்பிட்டளவு தூரத்திற்குப் பிறகு எங்கே செல்ல முடியும் என்ற பிரச்சினை எழவே செய்கிறது. வன்னிப் பிரதேசம் நிலப்பரப்பில் விஸ்தீரமானதாகிலும் மக்கள் இடம் பெயர்ந்து தங்கங்கக் கூடிய கட்டிடங்களும் ஏனைய வளங்களும் குறைவானவையாகும். அதனால் அங்கு உக்கிரமடையும் போரினால் மக்கள் மேன்மேலும் வாட்டி வதைக்கப்படும் நிலையே காணப்படுகிறது. இதற்கு யார் ஆறுதல் தருவது யார் பொறுப்புக் கூறுவது.

தென்னிலங்கையில் எவ்வித ஆதரவு நிலையும் இல்லை. புலிகளையும் மக்களையும் ஒன்றாகப் பார்க்கும் நிலையே சிங்கள மக்களுக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. "போர் வெற்றி" என்ற போதை மயக்கத்தில் சிங்கள மக்கள் உள்ள சூழலே நிலவுகின்றது. இம் மயக்கத்தைக் கலைக்கக் கூடிய சரியான அரசியல் மார்க்கத்தைக் காட்ட எந்தவொரு கட்சியும் சிங்கள மக்களிடையே இல்லாதிருப்ப துரஷ்டமேயாகும். அதுவே மகிந்த சிந்தனையின் போர் வெறிக்கு ஆதாரமாகவும் உள்ளது.

அதேவேளை தமிழர் தரப்பால் நம்பப்பட்ட இன்றும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்தியா அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன தமது கண்களையும் காதுகளையும் பொத்தி வைத்திருக்கின்றன. பயங்கரவாத ஒழிப்பிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அவை மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு உதவி வருகின்றன. இப்போதாவது தமிழர் தரப்பினர் ஏகாதிபத்திய மேலாதிக்க பிராந்திய மேலாதிக்க சக்திகளை எதிர்பார்த்துத் தவம் கிடக்கும் நிலைப்பாட்டை மறுபரிசீலணை செய்வார்களா? தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் அழிந்தாலும் பரவாயில்லை தமது வெற்றி பெறாத நிலைப்பாட்டை மாற்றத் தயாராக இல்லாத தமிழர் தலைமைத்துவத்தையிட்டு தமிழ் மக்கள் தான் மறுபரிசீலணை செய்யவேண்டும். அதன் மூலமே பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்தும் சுயநிர்ணய உரிமையினை வற்புறுத்தியும் பரந்துபட்ட வெகுஜன அரசியல் மார்க்கத்தை முன்னெடுக்கும் போராட்டத்தைத் தமிழ் மக்கள் புதிய வழித்தடத்தில் முன்னெடுக்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 13

## தொழிற்சங்கப் போராட்டத்தின் எழுச்சி மிகும் ஆண்டுகள்

**1923 முதல் 1929 வரையிலான ஆண்டுகள்** இலங்கையின் தொழிற்சங்க இயக்கத்தின் போர்க்குணம் மிக்க ஆண்டுகள் எனலாம். இலங்கையின் உற்பத்திகட்கு உலகச் சந்தையில் மிகவும் சாதகமான விலைகள் இக் காலகட்டத்திற் கிடைத்ததால் இலங்கையின் உற்பத்திகள் குறிப்பாகத் தேயிலை, தேங்காய், காரீயம் என்பன உயர்ந்த விலைகளைப் பெற்றன. ரப்பர்ச் சந்தையும் சுறுசுறுப்பாயிருந்து. உணவும் போதியளவிற் கிடைத்தது.வணிகமும் போக்குவரத்தும் பிற சேவைகளும் அதையொட்டி வளர்ந்தன. கொழும்பு செல்வச் செழிப்புடையதாகியதன் விளைவாக நகர் சார் தொழிலாளரது எண்ணிக்கையும் பெருகியது. வேலையின்மை ஒரு பிரச்சனையாக இல்லாத போதும் வேலைத் தளங்களில் அதிருப்தி இருந்தது. ஊதியப் பற்றாக்குறை வேலை தொடர்பான நிலைமைகள் விலைவாசி ஏற்றம் என்பன அதிருப்திக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

அரசாங்கத் திணைக்களங்களிற் பணியாற்றியோரின் ஊதியங்களும் ஒய்வூதியம் உபகாரச் சம்பளம் இழப்பீடுகள் போன்ற வசதிகளும் தனியார் துறை ஊழியர்களதை விடச் சிறிது சிறப்பாகவே இருந்தன. தனியார் துறையில் ஊதியமும் சலுகைகளும் நிறுவனத்துக்கு நிறுவனம் வேறுபட்டன. ஒய்வூதியம் என்று ஒன்று இருக்கவில்லை. இதனாலேயே தனியார் துறை விட அரசாங்க ஊழியத்தின் மீதான கவர்ச்சி படித்த யாழ்ப்பாணத் தமிழரிடையே அதிகமாயிருந்தது எனலாம். "கோழி மேய்த்தாலும் கோறணமேன்றில் மேய்க்க வேண்டும்" என்பது 1950களிற் கூட ஒரு பொன்மொழி போலப் பேசப்பட்ட ஒரு வாக்கியம்.

முதலாம் உலகப் போரின் பின்பு தனியார் துறையில் வழங்கப்பட்ட சிறிய சம்பள விலைவாசி ஏற்றத்துக்கு ஈடு கொடுக்கவும் வறுமையிலிருந்து தொழிலாளரை மீட்கவும் போதியதாக இருக்கவில்லை. கடும் வட்டிக்குக் கடன் வாங்குவதும் கடைகளிற் கடனுக்குப் பொருட்களைப் பெற்று நட்டப்படுவதும் வாழ்க்கையின் ஒரு பகுதியாகி விட்டது. இவ்வாறு நாடு செல்வச் செழிப்பில் மிதக்கையில் தொழிலாளிடையே வறுமையும் அதன் விளைவான மனக்கசப்பும் தலைவிரித்தாடின.

1925ல் அரசாங்க ஊழியர்களின் சார்பாக ஏ.ஈ. குணசிங்ஹ தயாரித்துச் சட்டவாக்கற் சபையில் சி.எச்.ஸட். .'.பெர்ணாண்டோ சமர்ப்பித்த வேண்டுகோளை யொட்டி அரசாங்கத்தின் கீழிருந்த அரசாங்க உற்பத்திமனை புகையிரதச் சேவை ஊழியர்கள் கடும் நடவடிக்கையில் இறங்குவர் எனும் எச்சரிக்கைகளும் எழுந்தன. அரசாங்க விசாரணைக் குழு ஒன்று ஊதிய உயர்வையும் பொது விடுமுறைகள் விடுப்பு என்பன பற்றிய சில சலுகைகளையும் பரிந்துரைத்தது. அதையொட்டித் தனியார் துறையினரும் சாதகமான ஒரு நிலைப்பாட்டை எடுத்தனர். இவற்றுக்குக் காரணமாக அமைந்தது 1923ம் ஆண்டு நடந்த பொது வேலை நிறுத்தம் எனலாம். அதன் போது அன்று தேசியவாதிகள் எனக் கூறிய சிங்களத் தேசியவாதிகளது ஆதரவு அதற்கு இருந்தது. ஆனால் மிதவாதிகள் எனப்பட்டோர் அதனை எதிர்த்தனர். ஒரு மாதம் நீடித்த அவ் வேலை நிறுத்தம் வெற்றி பெறாவிடினும் அது தொழிலாளரிடையே தாம் ஒரு வர்க்கமாகப் போராடலாம் என்ற உணர்வை உருவாக்கியது. மிதவாதிகள் மீதும் சீர் திருத்தவாதிகள் மீதும் தொழிலாளர் வைத்திருந்த நம்பிக்கை தளரவும் வேலை நிறுத்தம் காரணமாயிருந்ததால் தொழிலாளர் ஒரு வர்க்கமாகத் தொழிற்சங்கங்களில் இணைந்து போராட ஆயத்தமாயினர். ரஷ்சியப் புரட்சியின் வெற்றியும் சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கமும் அங்கு இடம் பெற்று வந்த மாற்றங்களும் அதிகாரிகளிடையே எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தின. இலங்கையிலும் கம்யூனிசம் வேரூன்றுமோ என அவர்கள் கவலை கொண்டனர். சோவியத் யூனியன் ஆசியாவின் தேசியவாத, புரட்சிகர இயக்கங்கட்கு வழங்கிய ஆதரவு அவர்களது அச்சத்தை மேலும் வலுப்படுத்தியது. எனவே தொழிலாளரது அதிருப்தி கிளர்ச்சியாக வளராமல் இருப்பது பற்றி நிருவாகம் கவனமாகவே இருந்து வந்தது.

எவ்வாறாயினும் 1925ல் தொழிலாளரின் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கப்படாத போதும் பெறப்பட்ட சலுகைகளும் ஊதிய உயர்வும் ஏ.ஈ. குணசிங்ஹவுக்கும் அவரது தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் சங்கத்திற்கும் மேலும் வலிமையையும் தன்னம்பிக்கையும் ஊட்டின. எனவே கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகிற போக்கு வலுப்படத் தொடங்கியது.

1926ல் வெள்ளவத்தை நெசவாலையில் தொழிலாளரின் வேலை நீக்கத்தை எதிர்த்தும் கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் ஊதிய உயர்வு கோரியும் நடந்த வேலை நிறுத்தங்கள் சாதகமான விளைவுகளைத் தந்தன. எனினும் 1927ல் தொடங்கி 1929 வரையிலான காலமே அதுவரையில் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் அதி போர்க்குணங் கொண்ட எழுச்சிக் காலமாயிருந்தது.

இக் காலகட்டத்தில் ஒரு தொழிற்துறையில் நடந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகப் பிற தொழிற் துறைகளில் இருந்த தொழிலாளர்களும் பகிரங்கமாகவே செயற்பட்டமை முக்கியமானது. கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்களே தொழிலாளர் அனைவரினும் போர்க்குணம் மிகுந்தவர்களாக இருந்தனர். இலங்கையின் பொருளாதாரத்தையே முடக்கக் கூடியளவுக்கு அவர்கட்கு வலிமை இருந்தது. அவர்கட்கு ஆதரவாகப் பிற துறைமுகத் தொழிலாளர்களும் போராட்டத்திற்கு குதித்தனர். நிலக்கரியைக் கப்பலில் இருந்து இறக்க முடியாத நிலையில் புகையிரதப் போக்குவரத்து ஸ்தம்பிதமடையும் ஆபத்து இருந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்க்குப் பிற அரசாங்கத் துறைத் தொழிலாளர்கள் ஆதரவு தெரிவித்தனர். கடை முதலாளிகளும் நிதி உதவி உணவு வழங்கல் என்று பல வகைகளிலும் ஆதரிக்க முன்வந்தனர். ஏறத்தாழ மூன்று வாரங்களாக நடந்த துறைமுக வேலை நிறுத்தம் நடந்தது. அரசாங்க மத்தியஸ்தத்தை முதலாளிமாரும் தொழிலாளிமாரும் ஏற்றுக் கொண்டதன் பேரில் அது வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இவ் வெற்றியின் தொடர்ச்சியாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் (சி.எம்.யூ) எனும் தனியார் துறை எழுது வினைஞர்களது தொழிற் சங்கம் 1928ல் உருவானது. துறைமுகப் போராட்ட வெற்றியின் பயனாக 1928ம் 29ம் ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் அலைஅலையாக எழுந்தன.

1928ல் நடந்த தொழிற்சங்கப் போராட்டங்களில் வாடகை மோட்டார் வண்டிச் சாரதிகளின் வேலை நிறுத்தம் முக்கியமானது. கடுமையாக நடந்து கொண்ட மினேர்வா வாடகை வண்டிக் கம்பனி முதலாளிக்கு ஆதாரவாகச் செயற்பட்ட கம்பனி ஒன்றன் பெற்றோல் நிலையம் பகிஷ்கரிக்கப்பட்டது. 1929ல் கொழும்பு ற்ராம் வண்டித் தொழிலாளரது வேலை நிறுத்தப் போராட்டம் அதற்கு முந்திய சகல வேலை நிறுத்தப் போராட்டங்களிலும் முக்கியமானதாக அமைந்தது. ற்ராம் வண்டிப் போக்குவரத்து இல்லாமல் பொது மக்கள் அதிகம் அவதிப்படாத விதமாக வாடகை மோட்டார் வண்டி ஓட்டுவோர் பயணிகளை இலவசமாக ஏற்றிச் சென்றனர். அனுதாபிகள் பலரும் தமது சொந்த வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் சென்றனர். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுப் பொது மக்கள் ற்ராம் வண்டிகளிற் பயணஞ் செய்தோரைக் கூச்சலிட்டு அவமதித்தனர். ற்ராம் வண்டித் தண்டவாளங்களின் குறுக்கே நடந்து போக்குவரத்துக்கு இடையூறு செய்தனர். ற்ராம் பாதைகள் வழியே மறியல் போராட்டங்களும் நடைபெற்றன. அதன் பின்பு ற்ராம் கம்பனி முதலாளிக்குச் சொந்தமான பிற கம்பனிப் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் தொடங்கப்பட்டது. அக் கம்பனிகட்கான இறக்குமதிகளைக் கையாள மறுக்காவிட்டால் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அக்கம்பனிப் பொருட்களைக் கையாளும் துறைமுகக் கம்பனிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பொலிஸ் கம்பனி முதலாளி சார்பாகக் குறுக்கிட்ட போதும் ற்ராம் வண்டிகட்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்ட போதும் வேலை நிறுத்தத்திற்கும் பொது மக்களது ஏகோபித்த ஆதரவு பொலிஸ் மீதான கோபமாகவும் மாறியது. இதன் விளைவாக அரசாங்கமும் தனியார் கம்பனிகளும் இறங்கி வர நேர்ந்தது. போர்க்குண மிக்க ஒரு தொழிற்சங்க இயக்கத்தின் எழுச்சியைத் தடுத்து நிறுத்துமுகமாக முதலாளிமார் சம்மேளனம் தொழிற்சங்கங்களுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் முதல் முறையாக இறங்கியது.

1927ல் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட தொழிலாளர்கட்குப் பாதகமான தொழிற்சங்கச் சட்ட ஒழுங்குகளையும் தொழிற் தகராறுச் சட்ட ஒழுங்குகளையும் போன்று இலங்கையிலும் சட்ட ஒழுங்குகளைப் புகுத்த கொலனிய நிருவாகம் திட்டமிட்டது. இலங்கைத் தொழிற்சங்கங்கள் மட்டுமன்றி பிரித்தானியக் கொலனி நிருவாக அலுவலகமும் அவசர அவசரமான இந்த நடவடிக்கையை விரும்பாததால் அச் சட்ட ஒழுங்குகள் நிறைவேற்றப்படவில்லை. எனினும் 1929க்குப் பின்பான பொருளாதார நெருக்கடி இலங்கையில் நிலைமைகளை மாற்றியது. தொழிலாளி வர்க்க உணர்வுக்குச் சரியான அரசியல் வழிகாட்டல் இல்லாது போனால் அரசியல் பொருளாதார நெருக்கடிகளின் போது தொழிலாளர் போராட்டங்கள் தோல்வி அடைவதுடன் தலைமைகள் தவறான திசைகளில் திரும்ப நேரும் என்பதற்கு அடுத்து வந்த ஆண்டுகள் சாட்சியங்களை வழங்கின.

குணசிங்ஹாவின் தொழிற்சங்கத் தலைமையின் இயலாமை எவ்வாறு அதைச் சந்தர்ப்பவாதப் பாதையில் தள்ளியது என்றும் அதன் விளைவாகத் தொழிற்சங்க இயக்கமும் தொழிலாளி வர்க்கமும் பெரும் இழப்புக்களைக் காண நேர்ந்தது என்றும் அந்த இடிபாட்டின் நடுவிலிருந்து ஒரு புதிய தலைமை எவ்வாறு உருவானது என்றும் இனிக் கவனிப்போம்.

**வளரும்**

# இந்திய வெள்ளக் கொடுமை

**நேபாளத்தின் தென் மேற்கிலும்** வட இந்தியாவில் பிகார் மாநிலத்திலும் இப்போது உத்தரப் பிரதேசத்திலும் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இவ் வருடம் இந்தியாவில் 180 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 லட்சம் மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு நேர்ந்துள்ளது. இந்நிலையில் பிகாரில் இறந்தோர் தொகை 700 ஐ நெருங்கியுள்ளது. நேபாளத்திலிருந்து இந்தியாவின் பிகார் மாநிலத்தில் பாய்கிற கோசி (நேபாளத்தில் சப்தகோசி) என்கிற ஆற்றுக்கு இந்தியப் பகுதியிற் கட்டப்பட்ட அணைகள் சரிவரப் பராமரிக்கப்படாமல் உடைப்பெடுத்ததாலேயே இவ் வெள்ளம் ஏற்பட்டது. இந்த ஆற்றுக்கான அணைகள் 1954ல் இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் இடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில் கட்டப்பட்டன. அவற்றின் பராமரிப்பு இந்தியாவின் பொறுப்பிலிருந்தது.

கோசி ஆறு பாதுகாப்பற்ற ஆறு எனவும் அதன் தடம் மாறி வந்துள்ளது எனவும் கூறப்படுகிறது. எனவே அது தொடர்பான கண்காணிப்பும் பராமரிப்பும் முக்கியமானவை. கோசி அணைக்கட்டுப் பற்றிய இந்திய- நேபாள உடன்படிக்கை தவறானது எனவும் இந்த வெள்ளம் அதன் விளைவான பேரழிவு எனவும் நேபாளப் பிரதமர் ப்பிரசண்டா கண்டித்துப் பேசியுள்ளார். நேபாள அரசாங்கம் நேபாளத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசரகால நிலையைப் பிரகடனஞ்செய்தது துடன் பாதிக்கப்பட்ட இந்திய மக்களுக்கும் உதவ முன்வந்துள்ளது.

பிஹார் அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் வேளைக்கே உரிய நடவடிக்கைகளை எடுக்காததாலும் காலம் பிந்திய நிவாரணப் பணிகளின் விளைவாகவுமே பேரழிவு நேர்ந்தது எனவும் பலவாறான கண்டனங்கள் எழுந்துள்ளன. எனினும் மேலும் அணைகளும் வரப்புகளும் ஆற்றில் வருகிற வண்டலை அகற்றுவதுமே தீர்வு என இந்திய அரசாங்கமும் பிகார் மாநில அரசாங்கமும் கருதுகின்றன. இவை அடிப்படையான பிரச்சனையைத் தீர்க்கமாட்டா என்றே விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே தோல்வியடைந்த வெள்ளக் கட்டுப்பாட்டுக் கொள்கை ஒன்றை இந்திய, பிகார் மாநில ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதைத் தடுக்க வேண்டுமானால் பாராளுமன்றக் கட்சிகளது தலைமைகள் மீது தங்கியிராமல் அதற்கு வெளியே வெகுசன அரசியல் இயக்கம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். பிகாரில் அதற்கான வாய்ப்பு உண்டு. மாக்ஸிய லெனினியவாதிகள் ஒன்று பட்டு அப்பணிக்குத் தலைமை தாங்கி வழி நடத்தினால் அந்த வெகுசன அரசியலை முன்னெடுப்பதற்கு ஒரு நல்ல தளத்தை அமைத்துக் கொடுக்கும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# யாழ். குடாநாடு தனிநாடாகி விட்டதா ராணுவ நடைமுறை கூறுவதென்ன?

**இன்று சகல நிலைகளிலும் யாழ்ப்பாணக்** குடா நாடு ராணுவ செயற்பாடுகளால் இறுக்கப்பட்டுள்ளது. சிவில் நிர்வாகம் பெயரளவில் செயல்பட்டாலும் அதனை மேற்பார்வை செய்து வழி நடத்துவது ராணுவ உயர் பீடமேயாகும். அங்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் சில மத வழிபாட்டிற்கும் மட்டுமே வாய்திறக்க முடியும். சமூக அரசியல் விடயங்களில் மட்டுமன்றி கலை இலக்கிய நிகழ்வுகளுக்கும் கட்டுப்பாடுகளே இருந்து வருகின்றன. அத்தகைய நிழ்வுகள் யாவும் ராணுவத்தினரின் கவனத்திற்கு கொண்டு செல்லாது நடாத்தினால் ஆபத்து வந்து விடும் என்ற அச்சம் நிலவுகின்றது. மக்கள் கண் காணிக்கப்படுவதும் விசாரிக்கப்படுவதும் இப்போது மட்டுமன்றி கடந்த கால் நூற்றாண்டு காலமாகவே இருந்து வரும் நடைமுறைதான். முன்பு ஆயுதம் தாங்கிய தமிழர் இயக்கங்கள் மக்களை கண்காணித்து அச்சுறுத்தி வந்தன. அதனை இப்போது சீருடை தரித்த அரசாங்க ராணுவம் செய்து வருகின்றது. முன்னையவர்கள் தமிழர் விடுதலையின் பெயரால் செய்தனர். பின்னையவர்கள் பேரினவாதத்தின் பெயரால் செய்கின்றனர்.

யாழ்குடாநாடு இன்று கட்டுப்பாடுகள் மிகுந்த நடைமுறைகளால் பிணைக்கப்பட்டுள்ளது. கருத்துச் சுதந்திரம் நடமாடும் சுதந்திரம் மட்டுமன்றி உயிர் வாழும் சுதந்திர்மும் மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரயாணம் செய்யும் சுதந்திரமும் தடுக்கப்பட்டுள்ளது. ராணுவத் தொடரணி பயணிக்கும் போது அதற்குரிய வீதிகள் பலமணி நேரம் மக்களது போக்குவரத்திற்கு தடைசெய்யப்படுகின்றது. திருமண நிகழ்வுப் போக்கு வரத்து மட்டுமன்றி மரணச் சடங்கு ஊர்வலம் என்றாலும் அந்தந்த இடத்தில் நிற்க வேண்டியது தான்.



இவற்றுக்கு அப்பாலான வெளி மாவட்டப் பிரயாணத்திற்கான நடைமுறை மிகமிக இறுக்கமாக்கப்பட்டுள்ளது. ஒருவர் வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டுமாயின் பல்வேறு கட்டுப்பாடுகள் கொண்ட நடைமுறைகளுக்கு ஊடாகவே அனுமதி பெற வேண்டும். கிராம சேவரிடம் செல்வதில் ஆரம்பித்து பொலீஸ் நிலையம் ராணுவ முகாம்கள் பலவற்றுக்கும் ஏறி இறங்கி அலைந்து உலைந்து கொள்ள வேண்டும். இப்பொழுது மேலும் ஒரு நடைமுறை கோரப்பட்டுள்ளது. அதாவது வெளிமாவட்டம் செல்லும் ஒரு குடாநாட்டு குடிமகன் மகள் தான் செல்லும் இடத்தில் தங்கப் போகும் வீட்டுக்காரரின் சம்மதத்தை அப் பகுதி பொலீஸ் நிலையத்தின் ஊடாகப் பெற்று அதனை சமர்ப்பிக்க வேண்டும். இது தற்போது ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் செல்வோர் விசா பெறும் போது பின்பற்றப்படும் நடைமுறை போன்றதாகும். இதனை நோக்கும் போது யாழ் குடாநாடு தனி நாடாகிவிட்டதா என்ற ஒரு கேள்வியைத் தான் எழுப்ப வேண்டியுள்ளது. இங்கே கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம் யாதெனில் இன்றும் வன்னிக்கான தரை வழிப்பாதையால் பயணம் மேற்கொள்ளப்படுவதுடன் அங்கிருந்து வெளி மாவட்டம் செல்லும் எவரும் இத்தகைய கடுமையான கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கப் படவில்லை என்பதாகும்.

பல்வேறு அலைச்சல் உலைச்சல்கள் மத்தியில் பெறப்படும் அனுமதியுடன் பிரயாணம் மேற்கொள்ள வந்தால் விமான மூலமும் கடல் கப்பலிலும் பிரயாணம் செய்ய வேண்டும். விமானத்திற்கு பத்தாயிரத்து ஐந்நூறு ரூபா (ஒரு வழிப்பயணத்திற்கு)வும் கப்பல் பயணத்திற்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபா திருகோணமலை வரை அறவிடப்படுகிறது. இப் பயணங்களில் படும் சிரமங்கள் துன்பங்கள் விபரிக்க முடியாதவைகளாகும். பல தடவைகள் பொதிகளைச் சோதனை இடுவதும் பல மணி நேரம் காத்திருக்க வைப்பதும் நடைமுறையாக உள்ளது. இருப்பத்தியோராயிரம் ரூபாவை விமானப் பயணத்திற்கு தாரை வார்க்கும் ஒவ்வொரு வடபுலத்துப் பயணியும் படும் வேதனையானது விபரிக்க முடியாத ஒன்றாகும்.

குடாநாட்டிலிருந்து இவ்வாறு நெருப்பாறு கடக்கும் பயணம் இப்பொழுது மட்டுமல்ல கடந்த கால் நூற்றாண்டில் அனுபவித்தவைகள் தான். பூநகரி, கிளாலி, சுண்டிக்குளம் நீரேரிகள் தாண்டிய இரவு பகல் பயணிங்களில் மக்கள் கயிறாகத் திரிக்கப்பட்டனர். வரிகள் வாங்கியவர்களும் பிரயாணப் பணம் கறந்தவர்களும், வரிசைகளில் வைத்து வாட்டி வதைத்தவர்களும் எல்லாத் தரப்பிலும் தான் இருந்தனர். ஆனால் அத்தனையையும் அனுபவித்து வந்தவர்கள் தமிழ் மக்களாகவே இருந்தனர்.

இத்தனை இடர்கள் மத்தியிலும் ஏன் கொழும்பிற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் மக்கள் பயணிக்கின்றனர். அவர்கள் சுகபோகம் பெறுவதற்கல்ல. தத்தமது அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே தான். அரசாங்க தலைமைச் செயலகங்களும் திணைக்களங்களும் கொழும்பில் திருகோணமலையில் வவுனியாவில் இருப்பதால் குடாநாட்டு மக்கள் அவ்விடங்களுக்கு வர வேண்டியே உள்ளது. மேலதிக வைத்தியத்திற்கும் கல்வி சுகாதாரத் தேவைகளுக்கும் இவ்வீடங்களுக்கே வந்து செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் வெளிநாடுகளுக்கான பயணங்களும் கொழும்பிலிருந்தே பயணிக்க வேண்டியுள்ளது. இத்தகைய தவிர்க்க முடியாத தேவைகளின் காரணமாகவே வெளிமாவட்டப் பயணங்களை குடாநாட்டு மக்கள் மேற்கொள்கின்றனர். இதற்காக பொலீஸ் நிலையங்களுக்கும் ராணுவ முகாம்களுக்கும் அலைய வேண்டியுள்ளது.

அவ்விடங்களில் மக்கள் இந் நாட்டின் கௌரவமான குடிமக்களாக நடத்தப்படவில்லை. இரண்டாம் தரக்குடிமக்களாகக் கூட நடாத்தப்படுவதில்லை. எட்டாம் பத்தாம் தர நிலையிலேயே நடாத்தப்படுவதாகவே பிராயணம் செய்த பலர் விசனம் தெரிவித்து வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆடுமாடுகளை சாய்ப்பது போன்ற தொனியில் மக்கள் நடத்தப்படுவதாகவும் பிரயாணிகள் எடுத்துரைக்கின்றனர். இவை எவற்றின் வெளிப்பாடு பௌத்த சிங்கள பேரினவாதத்தினதும் ராணுவ ஒடுக்கு முறையியினதும் வெளிப்பாடு என்றே மக்கள் பேசிக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது. இச் சூழலிலேயே மக்கள் மேன்மேலும் தனி நாட்டுக் கோரிக்கையின் பக்கம் தள்ளப்படும் நிர்ப்பந்தத்தையே அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டின் அரசாங்கம் தனது மக்களை மக்களாக நடத்த முடியாத சூழலில் தான் மக்கள் மாற்றுக் கொள்கைகளின் பக்கமும் அவற்றுக்கான அரசியல் போராட்ட நடைமுறைகளுக்கும் ஆதரவு கொடுக்கும் படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்ற யதார்த்தை ஆளும் தரப்பினர் உணர்ந்து கொள்வதில்லை. சகலதையும் ராணுவ ஒடுக்கு முறை மூலம் சாதித்து விடலாம் என்பது தப்பான கணக்கிடலாகும். எல்லாவற்றையும் துப்பாக்கி முனையில் செய்ய முடியும் என நம்புவது ∴பாசிசத்தின் போக்காகும்.

எனவே இன்றைய வடபுலத்து பிரயாணக் கட்டுப்பாடுகளும் நடைமுறைகளும் குடாநாடு தனி நாடு என்பதை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்து விடுகிறது. பிரயாணம் செய்வோரிடமும் தாம் அயல் நாட்டிலிருந்து பிரயாணம் செய்கின்றோம் என்ற மனநிலையையும் தோற்றுவித்து விடுகிறது. இதற்கு மகிந்த சிந்தனை அரசாங்கம் என்ன பதில் இறுக்கப் போகிறது. சகலதையும் ராணுவ வழிமுறைகளுக்கு ஊடாகத் தொடர்ந்து செய்யப் போகிறதா அல்லது சிவில் நடைமுறைகளுக்கு ஊடாகச் செயல்படுத்தப் போகிறதா என்பதே குடா நாட்டு மக்கள் எழும்பும் கேள்வியாகும்.

**வடபுலத்தான்**

## கண்டதும் கேட்டதும்

### செய்திக் கோப்பு

## செங்குருவி

### ● 50 வீதக் கலியாணம்

**நீண்ட நாட்களாக ஒருவர் திருமணம்** செய்வதற்குப் பெண் பார்த்து வந்தார். அவரை அவரது நண்பர் சந்தித்த போது கலியாண விடயம் எந்தளவில் இருக்கிறது என வினாவினார். அந் நபர் அவ்விடயம் 50 வீதம் சரி வந்து விட்டது என்றார். என்ன மாதிரி என நண்பர் ஆவலுடன் விசாரித்தார். அதற்கு அந் நபர் எனக்கு கலியாணத்தில் பூரண சம்மதம் அது தான் 50 வீதம் சரி வந்து விட்டது என்று கூறினேன் என்றார். மிகுதி 50 வீதம் பெண் கிடைகாமை தான் என்றும் கூறினார். இது போன்றது தான் சர்வ கட்சிப் பிரதிநிதிகளின் மாநாட்டுத் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண அரசியர் தீர்வு பற்றிக் கூறியுள்ள 95 வீத விடயங்கள் பூர்த்தியடைந்துள்ளன என்ற கூற்றாகும்.

### ● பொலீஸ் படையின் நிலை

இலங்கையில் பொலீஸ் அமைப்பு முறை ஆரம்பிக்கப்பட்ட 142 வது ஆண்டு தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. அதே வேளை ஒரு பௌத்த தலைமைப் பிக்கு கூறினார் "முன்பெல்லாம் பொலிசாரைக் கண்டு குற்றவாளிகள் கொலையாளிகள் அஞ்சுவார்கள். ஆனால் இப்போது குற்றவாளிகளையும் கொலைகாரர்களையும் பாதாள உலகத்தவர்களையும் கண்டு பொலிசார் அஞ்சி நடந்து கொள்கிறார்கள்." அது மட்டுமட்டுமன்றி இலஞ்சம் ஊழல் செய்வதில் பொலீஸ் திணைக்களம் இலங்கையில் இரண்டாம் இடத்தில் இருப்பதாக இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணையாளர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

### ● பிரபாகரன் பெயருக்காக சிறையில்

மலையகத்தில் பிரபாகரன் என்ற பெயரைக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டனர். வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் அன்று கைது செய்யப்பட்ட அம் மலையக இளைஞர்கள் இருவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் செய்த குற்றம் அவர்களது பெற்றோர் வைத்த பிரபாகரன் பெயரைக் கொண்டிருந்தமையே தான். ஒரே பெயரைக் கொண்டிருந்த காரணத்திற்காக ஒன்றுமறியாத தமிழ் இளைஞர்கள் சிறை இருக்க வேண்டுமா?

### ● தேச நிர்மாண மோசடி

மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் தேச நிர்மான அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தனா. அவர் 450 மில்லியன் ரூபா பணத்தை தனது சொந்த வைப்பில் எப்படிப் பெற்றார். என்ற விசாரணையைப் பொலிசார் ஆரம்பித்துள்ளார் என அறிய முடிகிறது. தேச நிர்மாணத்திற்குரிய பணம் எவ்வாறு சுய நிர்மாணத்திற்கு மாற்றப்பட்டது. இது வெளிவந்த ஒன்று மட்டுமே. வெளிவராத பல ஊழல் மோசடிகள் ஏராளம் இருந்து வருகின்றன. மகிந்த சிந்தனை ஆட்சியில் இது ஒரு சோற்றுப் பதம்.

### ● ஜனநாயகக் கொலைகள்

கிழக்கில் ஜனநாயகம் வென்றெடுக்கப்பட்டு சமாதானம் நிலை நாட்டப்பட்டு அபிவிருத்தி இடம் பெறுவதாகவே நாளாந்தம் செய்திப் பரப்புரைகள் கூறி வருகின்றன. ஆனால் அங்கு கொலைகள் ஆட்கடத்தல்கள் காணமல் போதல்கள் அடிக்கடி நடைபெற்ற வண்ணம் உள்ளன. பகலில் ஜனநாயகம் சமாதானம் அபிவிருத்தி பற்றிய பேச்சுக்களும் நிகழ்ச்சிகளும் நடைபெற இரவில் கொலைகள் ஆட்கடத்தல்கள் தொடர்கின்றன. அப்படியாயின் அவை கிழக்கு ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகி விட்டதா? என்றே மக்கள் கேட்கிறார்கள். மகிந்த சிந்தனையின் கீழ் இத்தகைய ஜனநாயக கொலைகள் எதுவும் புதுமை அல்ல என்பதே கடந்த மூன்று வருட ஆட்சி அனுபவமாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# போரின் போதையால் பெறப்பட்ட வெற்றி

**சப்பரகமுவ, வடமேல் மாகாணசபைகட்கான** தேர்தல்களில் அரசாங்கம் பெற்ற வெற்றி யாரும் எதிர்பார்த்திருக்காத ஒன்றல்ல. தேர்தல் ஒழுங்கீனங்கள் ஒரு புறமிருக்க அரசாங்கம் இவ் வெற்றியைப் பெறுவதற்கு முற்றுமுழுதான மோசடிகள் தான் காரணமா என்பது நிச்சயமற்றது. ஏனெனில் இன்று 'பயங்கரவாதத்துக்கு' எதிரான போர் தான் நாட்டின் முக்கியமான பிரச்சனையாகச் சிங்கள மக்களுக்குக் காட்டப்படுகிறது. அந்த மயக்கம் கலையாத வரை போரின் போக்கே தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் நடைமுறையில் இருந்த போது பேச்சுவார்த்தைகள் முறியாத நிலையிலும் தென்னிலங்கையில் தேசிய இனப்பிரச்சினை பற்றிய விளக்கமான கருத்துக்கள் பரப்பப்பட்டிருக்கவில்லை. போர் நிறுத்தம் என்பதற்கு அப்பால் முக்கியமாக தமிழ் மக்களும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் சிங்கள மக்களும் போரால் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டுளனர் என்பது பற்றியோ தேசிய இனப் பிரச்சனையைத் தீராமல் நாட்டுக்கு அமைதியைக் கொண்டு வர இயலாது என்பது பற்றியோசொல்ல எந்தவிதமான பயனுள்ள முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்ல இயலாது. விடுதலைப் புலிகளைச் சமாதான மேசைக்கு இழுத்து வந்து போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி ஒரு இடை வேளையை உருவாக்கிய யூ.என்.பி தலைமை தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகளைச் சிங்கள மக்களுக்கு விளக்காதது ஒரு புறமிருக்க அவற்றை எவ்வளவு தூரம் தெளிவாக விளங்கிக் கொள்ள முயற்சி எடுத்தது என்பதே ஐயத்துக்குரியது.


விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் முறிவதற்குப் பலமாதங்கள் முன்னரே அமெரிக்காவின் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாணத் தலைமையை பிரித்தெடுத்து விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்துகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எனவே யூ.என்.பி எந்த வகையிலும் அமைதியான முறையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமானதும் நிலைக்கக் கூடியதுமான தீர்வை வழங்குவதில் அக்கறை காட்டியதாகச் சொல்ல முடியாது.

சுனாமிக்குப் பின்பு விடுதலைப் புலிகள் மேலும் இழப்புக்களைச் சந்தித்த நிலையும் வடக்கு- கிழக்கு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சூழ்நிலையும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் கருணா குழுவினரைப் பலப்படுத்திப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைக் கிழக்கில் முறியடிக்கும் வாய்ப்பை வலுப்படுத்தின. இந்த அணுகுமுறைக்கான அத்திவாரம் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே இடப்பட்டுவிட்டது. அதற்குத் தூண்டுகோலாக ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் இருந்தன. சுனாமி நிவாரண ஒத்துழைப்பில் சந்திரிகா அரசாங்கம் இழுத்தடித்த தன் பின்னணியிலேயே ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் நீதிமன்றத்தைப் பயன்படுத்தி வடக்கு- கிழக்கிற்கான நிவாரணத்திற்கு முட்டுக்கட்டை போட்டனர்.

இன்றைய அரசாங்கம் இதற்கு முந்திய எந்த அரசாங்கத்தையும் விட மோசமான முறையில் போரை முன்னெடுக்கிறது என்பது உண்மை. எனினும் போர் என்பது நாட்டின் சனநாயகத்தின் சீரழிவுடன் சேர்ந்தே வலுப்பட்டு வருகிறது. 1978 முதல் சர்வ வல்லமையுடைய சனாதிபதிகளின் கீழ் நாட்டின் சனநாயக உரிமைகள் படிப்படியாகப் பறித்தெடுக்கப்பட்டே வந்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் பூகோளமயமாதலுக்கு உடன்பாடான முறையில் மாற்றப்பட்டு வருகிறது. தனியார் மயம் தாராளமயம் என்பனவற்றுக்கும் பொருளாதார நிருவாக மீள்கட்டமைப்பு எனும் பேரில் அரசாங்கத்தின் சமூகப் பொறுப்புக்களைக் கைகழுவி விடுவதற்கும் அரசாங்கங்கள் பல விதமான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன.

யூ.என்.பியிடம் இவ்விடயத்தில் மாற்றுக் கொள்கை எதுவும் இல்லை. ஜே.வி.பி இடையிடையே ஏகாதிபத்திய விரோதக் கனைப்புக்களில் ஈடுபட்டாலும் "பயங்கரவாத விரோத" நடவடிக்கைகளில் அமெரிக்க, இந்திய ஆதரவை வேண்டி நின்றுள்ளது. அது தனது குறுகிய கால அரசியல் லாபங்கட்கும் அரசியற் பேரங்கட்குமாகத் தனது தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது. ஒரு தெளிவான வர்க்கக் கண்ணோட்டமோ தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப உலகமயமாதலுக்கு எதிரான ஒரு வெகுசன இயக்கத்தைக் கட்டி எழுப்பும் நோக்கமோ அதற்கு இருக்கவில்லை.



இந்தப் பின்னணியிலே மாகாண சபைத் தேர்தலைகளை நோக்கினால் நாட்டின் பொருளாதார பிரச்சனைகட்கு மூன்று பிரதான கட்சிகளிடமும் தீர்வு இல்லை. அவை அப் பிரச்சனைக்கும் போருக்கும் உள்ள உறவைப் பற்றித் தம் தேர்தல் பிரசாரத்தில் அதிகம் தயங்கின. யூ.என்.பி முன்னாள் ராணுவத் தளபதி ஜானக பெரேராவை வடமேற்கு மாகாணத் தலைமை வேட்பாளராக நியமித்த தன் மூலம் போருக்கு ஆதரவான ஒரு படிமத்தையே காட்ட முற்பட்டது. ஜே.வி.பி தனது ஆதரவுத் தளத்தை ஒரு இடதுசாரிக் கட்சியென்ற முறையிலன்றி ஒரு பேரினவாதக் கட்சியாகவும் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதுடன் எவ்விதமான சுயாட் சியையும் ஏற்காத ஒரு கட்சியாகவும் தன்னைக் காட்டியே வளர்க்க முற்பட்டது. இப் போக்குக் கடந்த பத்தாண்டுகளில் தீவிரமடைந்துள்ளது. போர் நிறுத்தத்தை நிராகரிப்பதில் ஜே.வி.பி மிகவுந் தீவிரமாகவே இருந்தது.

இந்த நிலையில் பயங்கரவாதத்திற்கு எதிரான போரே பிரதான பிரச்சனை என்ற நிலைப்பாட்டிலிருந்து மக்கள் விடுபடாத ஒரு சூழலில் யாரால் இப் போரை வெல்ல இயலும் என மக்கள் நம்புகிறார்களோ அவர்களையே அவர்கள் தேர்தலில் ஆதரிப்பர் என்பது எதிர்பார்க்கக் கூடியது அல்லவா. போரை வெல்லுவதை விட அழிவுகளை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் நாட்டில் அமைதியையும் நாட்டின் பொருளாதார மீட்சியையும் இயலுமாக்குவது முக்கியம் என்பது அவர்களாற் பிரசாரஞ் செய்ய இயலாத விதமாக அவர்களது போர் வெறி அவர்களை ஆட்கொண்டு விட்டது.

போரை வெல்வதற்கு மக்கள் தியாகங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிற அரசாங்கம் போரை வெல்லாவிட்டால் அல்லது தோல்விகாணத் தொடங்கினால் தன் போர் ஆதரவு நிலைப்பாட்டை வைத்து ஜே.வி.பி கூடிய ஆதரவைப் பெற்றிருக்கலாம். சில மாதங்கள் முன்பு வரை அரசாங்கம் போரை வெல்கிறது அந்த வெற்றிப் பாதையிலிருந்து திசை திரும்பக் கூடாது என்று பேசி வந்த ஜே.வி.பி தலைமை எந்த முகத்தை வைத்துக் கொண்டு போரை விட மக்களின் அடிப்படைத் தேவைகள் முக்கியமானவை என்று பேச இயலும்?

போரைக் காரணங்காட்டிச் சனநாயக உரிமைகளை அரசாங்கம் மறுத்து வருவது பற்றிப் பேசுவதற்கான அருகதையும் யூ.என்.பிக்கோ ஜே.வி.பிக்கோ இல்லை. ஏனெனில் யூ.என்.பியின் பதினேழு வருடக் கொடுங்கோன்மையின் நினைவுகள் இன்னும் அழியவில்லை. அவ்வாறே ஜே.வி.பி 1987, 89 பயங்கரவாதமும் மக்கள் மனதில் உள்ளது. அதை விட அது பொதுசன முன்னணியுடன் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திய நாள் முதல் அரசாங்கத்தின் சனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து எதையுமே செய்ததில்லை.

எனவே ஜே.வி.பி பேரினவாதத்தின் மூலம் தான் வென்ற ஆதரவைப் பேரினவாதப் போரை வெற்றிகரமாக நடத்துவதாகக் காணப்படுகின்ற ஒரு அரசாங்கத்திடம் இழந்து விட்டது என்பதே உண்மை.

இந்தத் தோல்விக்கு ஜே.வி.பியில் ஏற்பட்ட பிளவும் சிறிய ஒரு பங்கை அளித்திருக்கலாம். ஆனால் ஜே.வி.பியின் தோல்விக்கான அடிப்படை காரணம் அதல்ல. ஜே.வி.பி உருப்படியான மாற்றுக் கொள்கை எதையுங் கொண்டிருக்கிறதாக மக்கள் நம்ப இயலாதளவுக்கு அதன் பேரினவாதம் அதன் தோற்றப்பாடான "சிவப்பு" அரசியலை மேவி விட்டது. இதிலிருந்து மீளுவதானால் ஜே.வி.பி தனது பேரினவாதப் போர் ஆதரவு அரசியலுக்கும் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை முதன்படுத்தி மக்களுக்காகக் குரல் கொடுத்தும் போராடும் ஒரு அரசியலுக்கும் நடுவே ஒரு தெரிவுக்கு முகங்கொடுத்தாக வேண்டும். நேர்மையான ஒரு புரட்சிகர இடதுசாரி அரசியல் அமைப்புச் சிங்கள மக்களிடையே உருவாகாமல் தடுப்பதற்காப் பல சூழ்ச்சிகளையுஞ் செய்து வந்துள்ள ஒரு கட்சியால் இனவாதங் கடந்த ஒரு இடதுசாரி அரசியற் பார்வையை முன்னெடுத்துச் செல்ல இயலுமா?

யூ.என்.பிக்குள் தலைவரை மாற்றினால் எல்லாம் சரியாகி விடும் என்கிற எண்ணம் உள்ளது. அது எவ்வளவு தூரத்திற்குப் பயனளிக்கும் என்பது ஐமிச்சமானது. யூ.என்.பி ஒரு பேரினவாதக் கட்சி. ஆனால் அது தெற்கில் சிறுபான்மைத் தேசிய இனத்தவரதும் சிறுபான்மைத் தேசிய இனத்தவரது தலைமைகளதும் ஆதரவை நம்பியுள்ள கட்சி அதன் பேரினவாதம் ஆழமானது. ஆனாலும் மகிந்த சிந்தனை ஆட்சியின் யுத்தப் பாதையின் வெற்றியின் முன்னால் யூ.என்.பியால் எதுவுங் செய்ய இயலாது. போரில் அரசாங்கம் பின்னிடைவுகளைச் சந்திக்க நேர்ந்தாலும் எதிர்க் கட்சிகள் மீது பழி சொல்லி அரசாங்கம் தன்னைத் தற்காத்துக் கொள்ள வாய்ப்புண்டு.

எனினும் யூ.என்.பியைப் பிளவுபடுத்துவதில் அரசாங்கம் கண்ட வெற்றியின் பின்னர் யூ.என்.பியால் பழைய வலிமையைப் பெறுவது எளிதல்ல.

இந்த அரசாங்கம் கவிழுவது இயலாததல்ல. ஆனால் அக் கவிழ்ப்பு யாரால் எப்படி நிகழும் என்பது தான் முக்கியமானது.

அரசாங்கத்தால் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இயலாமல் மக்கள் மேலும் மேலும் இன்னலுக்காளாகித் தாங்க இயலாமல் ஒரு மாற்று அரசாங்கத்தைத் தெரிவு செய்கிற நிலைக்கு இன்னும் வரவில்லை. போரில் வெற்றி எனும் போதை மருந்து பசி பட்டினியைக் கொஞ்சக் காலத்துக்கேனும் மறக்கச் செய்யலாம்.

எனினும் இந்த நாட்டில் ஒரு பயனுள்ள ஆட்சி மாற்றம் பாராளுமன்றத் தேர்தல் மூலம் வர இயலாது என்பது உறுதி. பாராளுமன்றத்தின் மூலம் நாட்டு மக்களின் பிரச்சனை தீராத போது வலதுசாரி ராணுவ ஆட்சி ஒன்று உருவாகி ஃபாஸிசமாக வடிவெடுக்கலாம். அது நாட்டுக்கு 'உறுதியான' ஆட்சியைக் கொண்டுவரலாமே ஒழிய மக்களுக்கு நன்மையைக் கொண்டு வராது.

ஜே.வி.பியின் சரிவு நமக்குக் கூறுகிற பாடம் என்ன? ஒரு நேர்மையான புரட்சிகர இடதுசாரிக் கட்சிக்கான இடைவெளி இப்போது உள்ளது. சிங்கள இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் அது பற்றி ஆழச் சிந்திக்க வேண்டும்.

*மோகன்*

---

### ஜே.வி.பி 8ம் பக்கம் தொடர்ச்சி.....

சீனாவின் நிலைப்பாடு எடுக்கின்ற எல்லோரும் இந்திய மேலாதிக்கம் பற்றி கவனமாக இருக்கிறார்கள் என்றுமில்லை. 'சீனப்பூச்சாண்டி' நிலைப்பாடு பழமைவாத தமிழ்தேசிய நிலைப்பாடாகவே இருக்கிறது. அந் நிலைப்பாட்டிலிருந்து கொண்டு இலங்கைக்கும். தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் இந்தியமேலாதிக்கத்தால் ஏற்படும் பாதிப்பை சரியாக மதிப்பிட முடியாது. அதற்கு எதிரான மூலோபாயம் தந்திரோபாயங்களை சரியாக வகுத்துக் கொள்ள முடியாது.

எனவே ஜே.வி.பி ஹெல உறுமய போன்றவற்றின் இந்திய எதிர்ப்பு என்பது அதிதீவிர சிங்கள தேசியவாத நிலைப்பாட்டிலிருந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் நிலைப்பாடாகும். இந்தியா பற்றி ஜே.வி.பியின் ஹெல உறுமயவின் அல்லது ஏகாதிபத் தியத்தின் வாடிக்கையாளர் அந்தஸ்தில் செயறபடும் சுதந்திரக் கட்சி ஐ.தே.கட்சி என்பவற்றின் நிலைப்பாட்டில் சரியாக புரிந்து கொள்ள முடியாது. அதேபோன்று கோளாறான தமிழ் தேசியவாத நிலைப்பாட்டிலும் இருந்து கொண்டும் இந்தியாவை சரியாக புரிந்துகொள்ள முடியாது. இந்நிலைப் பாடுகள் இலங்கையை தமிழ்மக்க ளின் சுயநிர்ண உரிமைப்போராட்டத்தை இந்திய மேலாதிக்கத்திடம் காவுகொடுக்கும் நிலைப்பாடுகளே. இந்தியா ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்தியத்தின் அங் கமாகவும் பாகமாகவும் மாறிக்கொண்டிருப்பதாக சில இந்திய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவற்றையும் கருத்தில் கொள்வது அவசியம். இந்திய மேலாதிக்க எதிர்ப்பு என்பது இந்தியாவை சிதைக்கும் நிலைப்பாடாகவன்றி இந்திய மேலாதிக்கத்திடமிருந்து இலங்கையை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை பாதுகாக்கும் போராட்டத் தந்திரோபாயமும் இந்திய மக்களுக்கு காட்டும் ஒத்துழைப்புமாகும்.

---

### தமிழத் 7ம் பக்கம் தொடர்ச்சி.....

உறுதி பூணாமல் விடுதலையைப் பற்றிப் பேசுவது பயனற்றது. செல்வநாயகம் ஒழித்துவிட்டதாகச் சொன்ன காலத்திலிருந்ததை விடச் சற்றுங் குறையாதளவில் சாதியச் சிந்தனையும் பிரதேசவாதமும் நம் மனங்களில் உள்ளன. 1960களில் நடந்த இடது கம்யூனிஸ்றுகளின் தலைமையிலான போராட்டம் வெளி வெளியாகச் சாதி வேறுபாடு காட்டுவதற்கும் சாதி அடிப்படையிலான சுரண்டலுக்கும் ஒரு பலத்த அடியை வழங்கியது. சாதியப் பாம்பு இன்னுஞ் சாகவில்லை. அதன் சாதிய மூளையும் சாதிய விஷப் பல்லும் இன்னமும் பல தலைகட்குள்ளே செயற்படுகின்றன. பிரதேசவாதம் இன்று தமிழ் மக்களை அழிக்கக்கூடிய நிலைக்கு வளர முனைகிறது. இவை இல்லை என்று சொல்வதால் இவை இல்லாமற் போய்விடா. சில விஷப் பூண்டுகள் முளைவிட முன்னமே மண்ணைக் களறி அவற்றைக் களைய வேண்டும். வன்முறையால் அல்ல. வெளிவெளியான விவாதங்கள் மூலமும் நேர்மையான கலந்துரையாடல்கள் மூலமும் சமூகப் பயனுள்ள செயற்பாடுகளாலுமே அவற்றை ஒழிக்க முடியும்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத சிந்தனைகளைக் களைவதற்கு நாம் துணிவோமேயானால் நம்மைப் பீடித்துள்ள சகல விதமான சமூகப் பீடைகளையும் அழித்து ஒரு நவீன மொழி பேசும் நவீன சமூகமாக நாம் எழுச்சி பெற இயலும்.

***நன்றி: தினக்குரல் வார இதழ்***
***24- 08- 2008***
***மறுபக்கம்- கோகர்ணன்.***

புதிய பூமி 13 செப்ரெம்பர் 2008

# மக்கள் போராட்டங்களை நசுக்கும் சலுகைகள்

சு. சுகேசனன்

மானிட வரலாற்றினை கூர்ந்து கவனிக்கின்ற வேளையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனித உழைப்பானது சமூகத்துடன் தொடர்புபடும் சூழ்நிலையைப் பொறுத்து அல்லது அவ் உழைப்பானது சமூகத்தில் எவ்வாறு கையாளப்பட்டு அதற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதோ அதனைப் பொறுத்தே சமூக அமைப்பும் இருந்தது. இது அடிமை முறை சமூகம். நிலவுடைமை சமூகம், முதலாளிய சமூகம், ஏகாதிபத்தியம் இன்று உலகமயமாக்கல் என்ற நிலையில் நவீனத்துவமான ஏகதிபத்தியம் என்பதேயாகும். இவ் ஒவ்வொரு காலக் கட்டத்திலேயும் உழைப்புச் சுரண்டல் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட்டது என்பது மூலச் சாரம். இந் நிலையை வெற்றிக் கொள்வதற்காக ஒவ்வொரு காலக் கட்டத்திலும் போராட்டங்கள் நடைப்பெற்றுள்ளன. இப் போராட்டங்களின் அடிப்படையிலேயே சமூக அமைப்புகள் மேற் கூறப்பட்ட வகையில் மாறி வந்துள்ளதும் இம் மாற்றங்களில் உழைப்பாளர் பாசறை என்றும் ஆள்வோர் பாசறை என்றும் இரு சாரார் இருக்கின்றனர் என்பதும் தெளிவாகி வந்தது. இச் சாரார்களுக்குடையிலான போராட்டங்களில் ரஷ்சியாவில் நடைபெற்ற தொழிலாளர் புரட்சியும் தொடர்ந்து தொழிலாளர் ஆட்சியும் முக்கிய வரலாற்று திருப்பமாகும். இதனைத் தொடர்ந்து சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா, நேபாளம் முதலியவற்றிலும் மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் என்பன உலக வரலாற்றில் சுரண்டல் முறைகளுக்கு எதிராகத் தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் போராட்ட வெற்றிகளும் முக்கியமானது. இவ்வெற்றிகள் உழைக்கும் வர்க்க உணர்வினாலும் ஐக்கியத்தினாலும் சரியான தலைமைத்துவத்தினாலும் கிடைக்கப் பெற்றவைகளாகும்.

மேற் கூறப்பட்ட சமூகக் கட்டங்களில் ஆரம்பத்தில் இருந்த கடுமையான இறுக்கமான சுரண்டல் முறைகள் நடந்த போராட்டங்களினால் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த சமூகக் கட்டத்திற்கு மாறுகின்றன. அதன் போது வர்க்க உணர்வையும், தொழிலாளர் பலத்தினையும் குறைப்பதற்காக உழைப்பாளர்களை பல்வேறு நுட்பங்களில் காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் புதிய வழிகளில் சுரண்டுகின்றனர். இவ் விடயத்தினை கீழ் வரும் வகையில் பார்க்கலாம். ஆண்டான்- அடிமை முறை காலத்தில் அடிமைகளிடம் தன் உழைப்பைத் தவிர்ந்த வேறேதும் கிடையாது. இக் காலகட்டத்தில் அடிமைகள் போராடினர். நிலவுடைமைக் காலத்தில் உழைப்பாளர்கள் நிலவுடைமையாளர்களின் நிலங்களில் விவசாயம் செய்து நிலவுடையாளர் குறிப்பிடும் உற்பத்தியை உடைமையாளர்களுக்கு கொடுத்து மீதமுள்ள தம் சொற்ப பங்கைப் பெற்றனர். ஆண்டான் அடிமைக் காலத்தில் இருந்த சுரண்டல் நுட்பம் மாற்றம் அடைந்து நிலவுடைமைக் காலத்தில் வேறு விதமாக இருக்கக் காண்கின்றோம். முதலாளியக் காலத்தில் நிலவுடைமையாளர்கள் சமூகத்தில் இருந்த சுரண்டல் நுட்பமுறை மாற்றமடைந்து உற்பத்தியில் கடின உழைப்புக்கு பணப் பெறுமதியில் கூலி நிர்ணைக்கப் பட்டது. இம் முறை குறித்த காலத்துக்குப் பிறகு நாடுகளுக்கிடையிலான தொடர்பாடல்கள் மேலும் இலகுவானதுடன் வேறுபட்டது. புரட்சி நடைப்பெற்ற காலத்தினை நோக்குகையில் ரஷ்சியாவில் ஏற்பட்ட தொழிலாளர் வர்க்க வெற்றியில் பீதியுற்ற இங்கிலாந்து முதலாளியம் தன் தொழிலாளர்களும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடாத வண்ணம் அவர்களின் வர்க்கச் சிந்தனையை சிதைக்கும் வகையில் ஏனைய நாடுகளில் தான் கொள்ளையிட்ட இலாபத்தில் தொழிலாளர் நலன்புரி விடயங்களில் மிகச் சிறிய அளவு செலவிட்டது. இதன் காரணமாக இங்கிலாந்து தொழிலாளர்கள் தாம் ஏனைய நாட்டுத் தொரழிலாளர்களை விட வசதியாக இருக்கின்றோம் என்ற சிந்தனையை உள்வாங்கிக் கொண்டமையினால் தாம் செய்ய வேண்டிய பாட்டாளி வர்க்கக் கடமையில் இருந்து விலகலாயினர்.

காலங்கள் மாறி நுட்பங்கள் மாறினும் சுரண்டல் நிலைத்தது. 1800 களின் நடுப்பகுதியில் இருந்து ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் வாயிலாகத் தமக்கு ஏற்ற வகையில், முதலாளி வர்க்கம் சுரண்டலை வேகமாக்கி நவீனப்படுத்திக் கொண்டது. உலக நாடுகளில் எந்த நாட்டு சுரண்டப்படும் வர்க்கம் தன் நிலையை அறிந்து, உணர்ந்து தம் வர்க்கத்தைத் திரட்டவும் சுரண்டலுக்குள்ளாகும் தம் நேச அணியை ஐக்கியப்படுத்தியும் மக்கள் திரளினருக்குத் தானே தலைமைப் பாத்திரத்தினை ஏற்றுப் போராடியும் கொள்கிறது. ஏற்பட்ட வீழ்ச்சிகளின் படிப்பினைகளை உள்வாங்கி மேலும் பலம் பெறுவதுடன் சுரண்டலுக்கு எதிராக உறுதியுடன் போராடுகின்றதோ அந்நாட்டு தொழிலாளி வர்க்கம் வெற்றிப் பெறும். ஏனைய நாடுகளின் தொழிலாளர் வர்க்கம் முடங்கும். இது வரலாறு எமக்களித்த பாடம். இங்கு வெற்றி பெறாத நாடுகள் தொடர்பாக கவனிக்கையில் ஏன் இந் நாடுகளுக்கு இந் நிலை ஏற்பட்டது என்று தேடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதில் முதலாளியம் பல்வேறுபட்ட வழிமுறைகளைக் கையாளுகின்றது. ஒன்று, போராட்டங்களை நேரடியாக அரசு யந்திரம் கொண்டு தாக்கி நசுக்குவது, போராட்ட தலைமையை அழிப்பது மக்களை மிரட்டுவது. இரண்டு, தொழிலாளர் தமக்குள் சிதைவை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் உத்திகளைக் கையாள்வது. மூன்று, சலுகைகள் நலன்புரி விடயங்கள் கையூட்டு என்பவற்றிண்டாக தொழிலாளரின் போராட்டப் பயணத்தினை இடை நடுவில் சிதைப்பது என்ற வகையில் பல்வேறுபட்ட உத்திகளைக் கையாள்கின்றது முதலாளிய வர்க்கம். இவற்றுள் மிக இலகுவாக தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தின் பிடிக்குள் சிக்கும் ஓர் இடம் தான் சலுகை, நலன்புரி விடயங்கள் இவ்விடயம் தொடர்பாக ஏலவே கதைக்கப்பட்ட விடயமாக இருப்பினும் இன்றைய தேவையைப் பொறுத்து மீண்டும் நம் பார்வையைச் செலுத்துவது அவசியமாக இருக்கின்றது.

**சமூக அமைப்புகள் மாறினாலும் சுரண்டல் தொடர்ந்து வந்துள்ளது**

சலுகைகள் என்றால் என்ன என்பதனை தெளிவுற விளங்கிக் கொள்வது முதன்மையானது. சலுகைகள் என்ற பதத்திற்குப் பல்வேறு வகையில் பொருள் விளக்கம் தரப்படுகின்றது. ஆதாயம், சிறப்புரிமை பெறுதல் முதல் உரிமை பெறுதல், உரிமைக்கு முந்துதல் என்பதே அவைகளாகும். இருப்பினும் இதனில் இருந்து சலுகை என்பது தொடர்பாக விளக்கமளிக்க பல சொற்களைக் கையாண்டாலும் இவை எல்லாவற்றினதும் சாரம் ஒன்று தான். எனவே நிகழ் காலத்தில் நிறைவேற்றியாக வேண்டிய தேவைகளை நிறைவேற்றாமல் அதனைத் தாங்கிக் கொண்டு எதிர்காலத்துக்கான தம் பாரிய போராட்ட நோக்கத்தினை வெற்றிக் கொள்வதற்குப் பதிலாக சட்ட/ ஒழுங்கு பொறிமுறைக்குள் தாம் அகப்பட்டுக் கொண்டதின் காரணத்தினால் சுரண்டுவோர் தரப்பில் முன்வைக்கும் ஆகக் குறைந்த சலுகைப் பொறிக்குள் சிக்கிக் கொள்கின்றனர். ஆனால் போராட்ட வெற்றியான போராட்டத்தின் தலைமையின் உறுதியான கொள்கையும், போராட்டத்தில் இணைய வேண்டிய நேச அணிகளை வென்று நிரப்படுத்தி போராட்டத்தினை சரியான வகையில் முன்னெடுத்தல், எதிர் காலத்தில் பொது நலனைக் கருத்திற்கொண்டு மிகவும் நுட்பத்துடன் தம் அணியை சோர்வுறாமல் வழிநடத்துதல் தம் அணியின் நேர்மையான வழிமுறைகளைப் பின்பற்றுதல் என்பதிலும் தங்கியுள்ளது. போராட்ட அணியின் தலைமையும் மேற்போர்ந்த அதன் தலைமை நடவடிக்கைகளில் இருந்து இம்மியளவு பிசகின் தலைமையானது போராட்டக்காரர்களை விட தன் பங்கிற்கு சற்றும் கூடுதலான சலுகைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெற்றுக் கொண்டு சலுகை வழங்குனருடன் இசைந்து செல்லும் அபாயம் தோன்றி விடும். எனவே சலுகைகள் என்பது ஒரு அமைப்புக்குள் அல்லது நிறுவனத்துக்குள் போராட்டங்கள் எழாதவாறு தடுப்பதற்கும், நடந்தேறும் போராட்டங்களை நசுக்குவதற்கும் எதிர்காலத்தில் போராட்டங்கள் நடைபெறாத சூழலை உருவாக்கவும் பயன்படும். அதிக சலுகை வழங்குனருக்கு இசைய மறுப்பவர்களை ஒடுக்குவதற்கும் (காட்டிக் கொடுப்புகள் ஊடாக) "சலுகை கையாளப்படுகின்றது. இது வரையில் பார்த்த விடயங்கள் எல்லா இடங்களிலும் இடம் பெறுகின்ற ஒன்றாகவே உள்ளது.

**சலுகைகள் நலன்புரி வழங்கல்கள் போராட்டங்களை திசை திருப்புகின்றன**

**சமூக மாற்றத்திற்கான போராட்டமே இறுதி இலக்காகக் கொள்ள வேண்டும்**

சலுகை அல்லது நலன்புரி விடயங்கள் என்பது தொழிலாளர் புரட்சிகளையும் அவர் தம் பலம் ஐக்கியத்தினைய{m} சிதைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொறிகளில் ஒன்று மட்டுமே. இவ் விடயம் தொடர்பாக இன்னொரு விவாதமும் எம்முன் எழுகின்றது. அதாவது தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஆகக் குறைந்த பட்ச நலன் என்பது நிகழ்காலப் பிரச்சினைகளில் ஒரு சிலவற்றில் குறித்த சிறிய அளவிலான தேவையை நிறைவு செய்து கொள்ளப் பயன்படும் எந்தச் சலுகையும் தொடர்ந்து பயனளிப்பதாக அமையாது. எனவே பெற்றுக் கொள்ளும் நலன்களை பொது நோக்கு அடிப்படையில் பெறுவதுடன் முழுக் கவனமும் பிரதான நோக்கமான பாட்டாளி வர்க்கப் போராட்ட நோக்கம் கொண்டதாக அமைய வேண்டிய தேவையுள்ளது. தொழிலாளர்கள் தம் பிரதான நோக்கத்துக்கான பயணத்தின் வெற்றிக்காக பல்வேறு உத்தி முறைகளைக் கையாள வேண்டிய தேவை ஒவ்வொரு காலத்திலும் எழும். இதன் போது பிரதான நோக்கத்திற்கு குறித்த காலத்தில் வழங்கப்படும் சலுகை பங்கம் விளைவிக்குமா அல்லது எதிர்காலத்தில் எவ்வகையான தாக்கத்தைச் செலுத்தும் என்பதைப் பொறுத்து பெறுவதும் பெறாமல் விடுவதும் தீர்மானிக்க வேண்டியதாகவுள்ளது. அவ்வாறின்றி தாராளமாகத் தரப்படும் சலுகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்வதானது விஷப்பாம்பை பயணப்பையில் வைத்திருப்பது போன்றதாகும்.

தொழிலாளர் ஐக்கியமானது மிகச் சரியான தலைமையின் கீழ் அ்மையப் பெறும் போது போராட்டங்களில் முன் செல்லும் இந் நிலைமை சுரண்டும் வர்க்கத்தின் இருப்பு தகரும் தறுவாயாக அமையும். இதுவே வரலாறு. எனவே தொழிலாளர்களின் பலத்தை ஈனப்படுத்துவதற்காக ஆளும் வர்க்கம் கையாளும் உபாயங்களில் ஒன்றாக தொழிலாளரின் தலைமை இலக்கு வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்காக பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப் படுகின்றன. இதனால் தனக்குச் சாதகமான தலைமையை தொழிலாளர் மத்தியில் தோற்றுவிப்பதற்கு என்றும் ஆளும் வர்க்கம் பின்னின்றதில்லை. தனக்கு வேண்டிய தலைமையை மிகக் கவனமாக தொழிற்சங்கங்களுக்குள் ஊடுருவ விடுவதுடன் தொழிலாளர் தலைமைகளைக் கைப்பற்றி குறிப்பிட்ட அளவிற்கு (தனக்கு பேராபத்துக்கள் ஏற்படாத வகையில்) தனக்கெதிராக செயற்பட அனுமதிப்பதுடன் தொழிலாளர் தன் முதன்மை நோக்கத்திற்காக முன் நகரும் வேளையில் அதனை திட்டமிட்ட வகையில் தான் ஏற்படுத்திய தலைமையைக் கொண்டு சிதைக்க முற்படுவதுடன் சலுகை முறைகளை தொழிலாளர்களுக்குக் காலத்துக்குக் காலம் முன் வைத்து தன் இலாபத்தின் சராசரி வீதம் வீழ்ச்சியுறாத வகையில் தக்க வைத்துக் கொள்கின்றது.

தன்னைச் சார்ந்த தொழிலாளர் தலைமைகளை உருவாக்குவதற்காக சுரண்டலமைப்புக்குச் சார்பான கல்வியினை மத நிறுவனங்கள் NGOக்கள் சாதிய அமைப்புக்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மக்களுக்கு இச் சமூக அமைப்பிற்குள் வாழப் பழக்குவதாகும். இச் சூழலில் இருந்து உள்வாங்கப்படும் தொழிலாளர் தலைமை மீது கூடிய அவதானத்துடன் அங்கத்தவர்கள் செயற்படுவது அவசியமாகும். இங்கு நபர் மாத்திரமல்ல அவர் கொண்டுள்ள வர்க்கச் சிந்தனை அதற்காக அவர் செயற்படும் முறை பாட்டாளி வர்க்கப் போராட்டம் நோக்கிய பயணத்தில் கொண்டுள்ள தூர நோக்கு என்பவை முக்கியமானவையாகிறது.

அடிப்படையில் ஒவ்வொரு வரும் குறிப்பாகச் சுரண்டப்படும் மக்கள் தமக்கு சலுகைகள் கிடைப்பதையிட்டு மகிழ்ச்சியடையவே செய்வர். அதனால் சுரண்டலுக்கெதிராக அணிதிரள வேண்டிய தேவை இல்லை என்று கருதுகின்றனர். ஓர் போராட்ட அணிக்குள் ஒன்று திரள்வதால் தமக்குக் கிடைக்கும் சலுகைகள் கேள்விக் குறியாகிவிடும் என அஞ்சுகின்றனர். அதன் மூலம் போராட்ட நோக்கத்திற்கான தமது பங்களிப்பில் இருந்து விலகும் சூழலை ஏற்படுத்துகின்றனர். இதனால் சுரண்டுவோரின் ஆட்சியைத் தூக்கி எறிந்து சுரண்டல் அமைப்பை அடியோடு வீழ்த்தி ஒட்டுமொத்த சமூக அமைப்பை மாற்றும் போராட்டம் தாமதமடைகிறது. எனவே ஒவ்வொரு உழைக்கும் மக்களும் இன்றைய சூழலில் தம்மைச் சூழ உள்ள பல்வேறு சலுகை காட்டும் அமைப்புக்களில் தொழிற்சங்கங்களில் கட்சிகளில் இருந்து அவதானத்துடன் விலகி உண்மையான பாட்டாளி வர்க்க விடுதலைக் கொள்கையுடன் தொழிற்படும் அமைப்பை தொழிற்சங்கத்தை கட்சியை நாடுவதும் அனைவருக்கமாகச் செயற்படுவதிலுமே வெற்றி அடங்கியுள்ளது. இதன் மூலமே நம்முன்னால் உள்ள வரலாற்றுக் கடமையினை முன்னெடுக்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

# ஜோர்ஜியாவில் மூக்குடைபட்டது அமெரிக்கா

### யார் யாருக்கு நியாயம் சொல்வது......

**ரஷ்யா ஜோர்ஜியாவின் மீது தாக்குதல்** நடத்தியதைக் கண்டித்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், ரஷ்யா ஜோர்ஜியாவின் உள்விவகாரங்களில் தலையிட்டுவிட்டது எனவும் ஜோர்ஜியாவின் இறைமைக்கு குந்தகம் விளைவித்ததாகவும் தெற்கு ஒசேத்தினியாவை தனிப்பிரதேசமாக அங்கீகரித்தது தவறு என்றும் அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சொல்லியிருக்கின்றன. இதே நாடுகள் தான் ஈராக் மீதான அமெரிக்காவின் தன்னிச்சையான தாக்குதலை ஆதரித்ததோடு அதை "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" எனவும் அழைத்தன. ஜோர்ஜியா தெற்கு ஒசேத்தினியாவை தாக்கி 2,000 பொதுமக்களையும் 20 ரஷ்ய அமைதி காக்கும் படைகளையும் கொலைசெய்து 30,000 மக்களை அகதிகளாக்கும் வரை ஒரு ரஷ்யப் படைவீரன் கூட தெற்கு ஒசேத்தினியாவில் கால் பதிக்கவில்லை. ஆக ஜோர்ஜியாவின் செயற்பாட்டை ஏன் "பயங்கரவாதம்" என்றோ ரஷ்யாவின் நடவடிக்கையை "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்றோ ஏன் அழைக்க முடியாது.

அதுபோக இதே மேற்குலகம் சேர்பியாவிடமிருந்து கொசோவோவை பிரித்து தனிநாடாக அங்கீகரித்து படைகளை அனுப்பி வைத்தபோது சேர்பியாவின் இறைமைக்கு குந்தகம் விளையவில்லையா? யார் யாருக்கு நியாயம் சொல்வது.... முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது இதுதானா?

### பேச்சுவார்த்தையா போக்கும் வரவுமா?

அமெரிக்கா இஸ்ரேல் பாலஸ்தீனமிடையே இன்னொரு பேச்சுவார்த்தைக்கு வழி அமைப்பதாகவும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் ஒல்மேட்டும் பாலஸ்தீன ஜனாதிபதி மக்மூட் அப்பாசும் பேசப் போவதாகவும் அமெரிக்கா தெரிவிக்கிறது. அமெரிக்க செயலர் கொண்டலீசா றைஸ் இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் அடிக்கடி போய் வருவதாகவும் இதனால் இஸ்ரேல் பாலஸ்தீனமிடையே பேச்சுவார்த்தைக்கான சாத்தியம் இருப்பதாகவும் அமெரிக்க ஊடகங்கள் ஆராய்ந்து சொல்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது பதவிக்காலம் முடிவதற்குள் மத்திய கிழக்கில் அமைதியை உருவாக்க விரும்புவதாகவும் இஸ்ரேலியப் பிரதமரும் பாலஸ்தீன ஜனாதிபதியும் அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கியிருப்பதாகவும் சொல்கிறார் அமெரிக்க செயலர் கொண்டலீசா றைஸ். இத்தனைக்கும் பாலஸ்தீனத்தின் ஹசாப்பகுதி ஹமாசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கு பாலஸ்தீன அரசாங்கம் ஹமாசினுடையது. இவ்வாறு இருக்க அமெரிக்கா தான் விரும்பும் அமைதியை மத்திய கிழக்கில் உருவாக்கும் போது.... பூனைக்கு விளையாட்டு எலிக்குச் சீவன் போகிறது.

### அமைதியின் பெயரால்

ஆப்கானிஸ்தானில் அண்மையில் அமெரிக்க விமானக்குண்டு வீச்சுக்குப் 90 ஆப்கானியப் பொதுமக்கள் பலியாகியிருந்தனர். கடந்த மாதம் மட்டும் நேட்டோக் கூட்டுப்படைகளின் தாக்குதல்களால் 180க்கும் மேலான அப்பாவி ஆப்கானியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து கருத்துத்தெரிவித்த நேட்டோப் படைத்தளபதி "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் பயங்கரவாதிகள் மட்டுமல்ல பயங்கரவாதத்திற்கு ஆதரவானவர்களும் கொல்லப்பட வேண்டியவர்களே" என்றார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் கொல்லப்படுபவர்கள் பயங்கரவாதிகளாகவோ அல்லது பயங்கரவாதத்திற்கு ஆதரவானவர்களாகவோ இருக்க முடியும். அப்படி இருக்கும் போதுதானே அது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக அறிவிக்கப்பட இயலும்.

**முன்னாள் சோவியத் குடியரசான** ஜோர்ஜியாவின் சுயாட்சிப் பிரதேசங்களான தென் ஒஸெற்றி யாவும் அப்காஸியாவும் ஜோர்ஜியா சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த குறுகிய காலத்திற்குள்ளேயே ஜோர்ஜிய மத்திய அரசுக்குக் கீழ்ப்படாத விதமாகத் தமது ஆட்சியை நடத்தி வந்துள்ளன. இதற்கான காரணம் ஜோர்ஜியாவில் ஆட்சிக்கு வந்த ஷெவர் நாட்ஸெ எனும் முன்னாள் சோவியத் வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜியாவில் தேசியவாதத்தை முடுக்கி அமெரிக்க சார்பான ஒரு ஆட்சியை முன்னெடுத்ததுதான். ஷெவர் நாட்ஸெ ஆட்சி போன பின்புங் கூட ஜோர்ஜிய தேசியவாதம் பேரினவாதமாகச் செயற்பட்டு வந்தது. இதன் விளைவாகத் தென் நஸெற்றி யாவும் அப்காஸியாவும் தமது குறுகிய தேசியவாத நிலைப்பாட்டில் மேலும் இறுக்கமடைந்தன.

1990களில் இப்பிரதேசங்களில் வாழ்ந்த ஜோர்ஜியருக்கும் இப்பிரதேசங்களில் செறிவாக வாழ்ந்த தேசிய இனத்தவருக்குமிடையிலான மோதல்களின் விளைவாக ரஷ்யப் படைகள் அப்பிரதேசங்களில் அமைதி காக்க நிலை கொண்டன.

ரஷ்யா அண்மைவரை இரண்டு சுயாட்சிகளது பிரிவினை நோக்கங்களை ஆதரித்து எதையுஞ் செய்யவில்லை. ஏனெனில் அவ்வாறு செய்வதன் பாதிப்புக்கள் ரஷ்யாவிற்கு உள்ளே பிரிவினை வாதிகளை ஊக்குவிப்பதாக அமையலாம். கொசொவோ சேர்பியாவினின்று பிரித்தெடுக்கப் பட்டபோது ரஷ்யா அதைக் கண்டித்தது. எனினும் அமெரிக்காவைப் பழிவாங்குகிற நோக்கில் அது அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாக இருந்த ஜோர்ஜியாவில் பிரிவினையை ஊக்குவிக்கவில்லை.

எனினும் ஜோர்ஜியாவை அமெரிக்கத் தலை மையிலான நேட்டோ இராணுவக் கூட்டணிக்குள் இழுத்துச் செல்லத் துடியாய்த் துடிக்கும் ஜோர்ஜியப் பிரதமர் ஷாக்ஸ்விலி ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குகிற நாளில் தெற்கு ஓஸெற்றியாவிற்கு ஜோர்ஜியப் படைகளை நகர்த்தினார். அவரது எதிர்பார்ப்பு ஒலிம்பிக் போட்டிகளின் மீது கவனங்குவித்துள்ள வேளையில் தெற்கு ஒஸெற்றியாவை ஜோர்ஜியக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடலாம் என்பதாயிருந்தது. அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக ரஷ்யப்படைகள் அங்கும் அப்காஸியாவிலும் தமது இருப்பை மேலும் வலுப்படுத்தி தெற்கு ஒஸெற்றியாவிலிருந்து ஜோர்ஜிய படைகளை விரட்டியடித்ததோடு ஜோர்ஜியாவிற்குள்ளும் ஊடுருவி ஸ்ற்றாலின் பிறந்த நகரான கோரியையும் கைப்பற்றின. ரஷ்யா ஜோர்தியத் தலைநகரான ற்றிப்லிஸி மீதும் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டது.

அமெரிக்காவின் மிரட்டல்கள் முன் ரஷ்யா பணியவில்லை. ஜோர்ஜியாவின் போர் நிறுத்தத்தை அலட்சியம் செய்த ரஷ்யா ஜோர்ஜியாவினுள் தனது நிலையை இறுக்கப்படுத் திய பின்பே போர் நிறுத்தம் பற்றியும் தனது படைகளைப் பின்வாங்குவது பற்றியும் பேச முன்வந்தது. பிரான்சுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் போர் நிறுத்தம் இயலுமான போதும் ரஷ்யப் படைகள் தாம் விரும்பிய போதே ஜோர் ஜியாவிலிருந்து பின்வாங்கி அமெரிக்காவின் முகத்தில் கரிபூசின.

இப்போது ரஷ்யப் பாராளுமன்றம் ஜோர்ஜியாவின் இரண்டு சுயாட்சிப் பிரதேசங்களதும் பிரிவினையை ஆதரிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதன் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்பது இன்னமுந் தெளிவில்லை. ஆனால் ஜோர்ஜியாவுக்கு மட்டுமல்லாது ஜோர்ஜியாவுக்கு ஆதரவாகவுள்ள அமெரிக்காவுக்கும் ஜோர்ஜியாவின் ராணுவ ஆலோசகர்களாக உள்ள அமெரிக்க, இஸ்ரேலிய நிபுணர்களுக்கும் முகத்தில் அறைவது போலவே ரஷ்யா நடந்து கொண்டுள்ளது.

**தான் செய்தால் சரியானது அதனைப் பிறர் செய்தால் தவறானது**
**இதுவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க நிலைப்பாடாகும்**

ஜோர்தியாவை இவ்வாறு ரஷ்சியாவுக்குச் சவாலாகத் தூண்டிவிட்டதில் அமெரிக்க ஆலோசர்களது பங்கு முக்கியமானது. அதன் பின் விளைவான இடப்பெயர்வுகளையும் பிற அவலங்களையும் பற்றிக் கூச்சலிட்டு ரஷ்ய ஆக்கிரமிப்பை மேற்கின் ஊடகங்கள் கண்டித்தாலும், விரைவிலேயே ரஷ்சியாவிடம் அமெரிக்கா கடந்த பதினேழு வருடங்கள் வாலாட்டியது போல இனியும் வாலாட்ட இயலாது என்ற உண்மையை அறிந்து கொண்டுள்ளனர். அமெரிக்காவின் அணுகுமுறை இப்போது விமர்சனத்திற்குள்ளாகிறது. அமெரிக்காவால் அதன் எடுபிடியாக இயங்கி வந்த ஜோர்ஜியாவுக்குக் கைகொடுக்க இயலவில்லை. அதை மழுப்ப அமெரிக்க மனிதாபிமான உதவிக்காக விமானங்களை அது ஜோர்ஜியாவிற்குள் அனுப்பியுள்ளது. என்றாலும் ரஷ்ய எல்லை யில் யார் எசமான் என்ற விடயத்தில் ரஷ்யா தெளிவாகவே தனது அதிகாரத்தை ஐயத்துக்கு இடமின்றி நிறுவியுள்ளது.

அமெரிக்கா மூக்குடைபட்டது ஒரு புறமிருக்க அமெரிக்கா கொசோவோவைப் பிரித்த போது ஆனந்தக் கூத்தாடிக் கொசோவோவுக்குப் பாராட்டுச் செய்தி அனுப்பி மகிழ்ந்த தமிழ்த் தலைவர்கள் ஜோர்ஜியாவில் பிரிவினைக்குச் சாதகமான ரஷ்ய நிலைப்பாடு பற்றி என்ற சொல்லப் போகிறார்கள்? ரஷ்ய ஆக்கிரமிப்பு என்று கண்டிப்பார்களா?

# நேபாளப் பிரதமராகப் பதவியேற்ற தோழர் ப்பிரசன்ந்தாவிற்கு புதிய- ஜனநாயக கட்சி வாழ்த்து

**கடந்த 15ம் திகதி நேபாளத்தின் அரசியல்** நிர்ணய சபையில் இடம்பெற்ற பிரதமர் பதவிக்கான தெரிவில், மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் புஸ்பா ஹமால் டஹால்- பிரசன்ந்தா மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். இவ் வெற்றியானது நேபாள மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வீரம் செறிந்த நேபாள மக்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக மன்னராட்சியை வீழ்த்த நடாத்தி வந்த போராட்டத்திற்கு கிடைத்த மற்றொரு உயர்ந்த கட்ட வெற்றியுமாகும். இப் பிரதமர் பதவியைப் பெற்றதன் மூலம் நேபாளத்திற்கான ஜனநாயக அரசாங்கத்தைத் தலைமை தாங்கி முன்செல்லும் பொறுப்பை மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர் பிரசன்ந்தாவும் பெற்றிருக்கிறார்கள். இவ்வேளை நேபாள மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிற்கும் அதன் தலைவர் பிரசன்ந்தாவிற்கும் எமது புதிய- ஜனநாயகக் கட்சியின் மத்தியக் குழு தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழு அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிற்கும் அதன் தலைவர் ப்பிரசன்ந்தவிற்கும் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாழ்த்துச் செய்தியில். நேபாள மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சி 40 வருடகால மக்கள் விரோத மன்னராட்சிக்கு எதிராகக் கடந்த பன்னிரண்டு வருடங்களாக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடாத்தி வந்துள்ளது. ஆயுதப் போராட்டத்தை பிரதானமாகவும் வெகுஜனப் போராட்டங்களை இணைப் போராட்டமாகவும் ஏனைய கட்சிகளுடனான ஐக்கிய முன்னனியையும் கொண்டே நேபாளத்தில் முடியாட்சி வீழ்த்தப்பட்டது. இப்போராட்டங்களில் பதின் மூவாயிரம் பேர் வரையே கொல்லப்பட்டனர். அதே வேளை கொடிய மன்னராட்சி வீழ்த்தப்பட்டு ஜனநாயக நேபாளக் குடியரசு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எந்த வல்லரசையும் நம்பியோ வெளி சக்திகளின் உதவிகளை எதிர்ப்பார்த்தோ நேபாள மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்படி போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. அக்கட்சி முற்று முழுதாக நேபாள மக்களின் அனைத்து பிரிவினர்கள் மத்தியிலும் அடிமட்டம் வரை சென்று தங்கியிருந்தே தமது போராட்டங்களை மக்கள் யுத்தமாகவும் வெகுஜனப் போராட்டங்களாகவும் முன்னெடுத்து வெற்றிபெற்றது. இந்திய அமெரிக்க ஆளும் வர்க்க சக்திகள் மாஓவாதிகளை எதிர்த்து முறியடிக்க பல்வேறு முயற்சிகளைச் செய்தனர். அமெரிக்கா தனது உலகப் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்த்திருந்தது. இன்றைய சீன அரசாங்கம் கூட மன்னராட்சிக்குச் சார்பாகவே இருந்து வந்தது. உள்நாட்டில் நேபாளக் காங்கிரஸ் கட்சியும் ஏனைய மன்னராட்சி ஆதரவாளர்களும் மாஓவாதிகளை இந்தியாவின் பின்புலத்துடன் எதிர்த்து வந்தனர். இவற்றையெல்லாம் மாஓவாதிகள் முறியடித்து வெற்றி பெற்றதற்கான ஒரே காரணம் தொழிலாளர்கள் விவசாயிகள் சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் என்போரை ஐக்கியப்படுத்தி மக்கள் யுத்தமாகவும் வெகுஜனப் போராட்டங்களாகவும் முன்னெடுத்தமையேயாகும்.

நேபாளத்தில் இடம்பெற்ற மேற்படி புரட்சியும் அதன் வெற்றியும் இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக மாக்சிச லெனிசிச மாஓவாத போராட்டப் பாதையில் கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றியில் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்றினைந்து நிற்கிறார்கள். நேபாளத்தில் கிடைத்த இவ் வெற்றியை அழித்தொழிக்க இந்திய அமெரிக்கப், பிற்போக்காளர்கள் சகல வழிகளிலும் முயலவே செய்வார்கள். அதனை நேபாள மாஓவாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் வீரமிக்க நேபாள மக்களும் முறியடித்து தமது ஜனநாயகக் குடியரசைப் பாதுகாத்து சோசலிசத்தை முன்னெடுப்பார்கள் என்பது எமது கட்சி உட்பட உலக மாக்சிச லெனினிச கட்சிகளின் நம்பிக்கையாகும். நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியினதும் மக்களினதும் வெற்றியில் பங்கு கொள்ளும் எமது புதிய- ஜனநாயக கட்சி மத்தியகுழு தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது என்றும் அச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மக்கள் கலை இலக்கியத்தை புதிய பண்பாட்டுத் தளத்தில் முன்னெடுக்க வேண்டும்

## தேசிய கலை இலக்கியப் பேரவையின் மாநாடு வற்புறுத்தல்



**சமூக மாற்றத்தை வென்றெடுக்கும் நீண்ட** பயணத்தில் கலை இலக்கியத்தின் பங்களிப்பை வற்புறுத்தும் வகையிலான தேசிய மாநாடும் 35வது ஆண்டு விழாவும் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் நடாத்தப்பட்டது. கடந்த ஒகஸ்ட் 23ம், 24ம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம் பெற்ற முதல் நாள் தேசிய மாநாடு இ. முருகையன், பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் சி. சிவசேகரம், ந. இரவீந்திரன் ஜெ. சற்குருநாதன் கிங்ஸிலி சந்திரலேகா ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழுவினால் வழி நடாத்தப்பட்டது. செல்வி செ. கௌரியின் பேரவைக் கீதத்துடன் மாநாடு ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து மறைந்த பேரவையின் முன்னோடிகள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி தெரிவிக்கப்பட்டு நினைவு கூரப்பட்டனர்.

வரவேற்புரையை சோ. தேவராஜாவும், ஆரம்ப வாழ்த்துரையை இ. முருகையனும் வழங்க தலைமையுரையை சி. சிவசேகரம் நிகழ்த்தினார். அவர் தனது உரையில், சமத்துவம் பன்மைத்துவம் சமூக மாற்றம் மானுட விடுதலை நோக்கிய மக்கள் கலை





இலக்கியத்தை முன்னெடுக்கும் வரலாற்றுக் கடமையை இம் மாநாடு பொறுப்பேற்கின்றது. பண்பாட்டுத்தளத்தில் முன்னெடுக்கும் எமது கலை இலக்கியக் கொள்கையானது ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களைப் பிரிதிநிதித்துவம் செய்தாக வேண்டும். ஒரு புறத்தில் பழைமை வாதப் பிற்போக்குக் கலை இலக்கியங்களும் மறுபுறத்தில் உலகமயமாதலின் கீழான நச்சுத்தன சீரழிவு கலை இலக்கியங்களும் சமூகப் பரப்பில் இருந்து வருகின்றன. இவை இன்றைய ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பைப் பாதுகாத்து தொடர்ந்தும் நிலை நிறுத்தவே முற்படுகின்றன. இச் சூழலில் சமூக மாற்றத்தை நோக்கி நிற்கும் நாம் அதற்கான கலை இலக்கியத்தை மக்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்க வேண்டும். அதற்குரிய பொறுப்பை இம் மாநாடு திடப்படுத்திக் கொள்கிறது என்றும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாப்பு (அமைப்பு விதிகள்) ந. இரவீந்திரனால் முன்வைக்கப்பட்டது. சிற்சில திருத்தங்களுடன் பேராளர்களினால் மேற்படி யாப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்த மாநாட்டு அறிக்கை சோ. தேவராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. அதுவும் விவாதத்திற்கும் கலந்துரையாடல் களுக்குப் பின் மாநாட்டால் ஏற்கப்பட்டது. அத்துடன் கொழும்பு, மலையகம், யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசங்களின் பிரதேச அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. அப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டவையும் முன்னெடுக்கப்பட வேண்டியவற்றையும் மேற்படி அறிக்கைகள் சுட்டிக்காட்டின. மாநாட்டின் பொது அறிக்கையிலும் பிரதேச அறிக்கைகளிலும் முப்பத்தைந்து வருடங்களில் தேசிய கலை இலக்கியப் பேரவை பயணித்து வந்த மக்கள் கலை இலக்கியப் பாதையில் எதிர் கொண்ட அனுபவங்கள் விவாதங்களில் பேராளர்களால் முன் வைக்கப்பட்டன. 1973ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேரவை 1974ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டில் தாயகம் சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தது. க. தணிகாசலம் அதன் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்தார். புதிய- ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு என்பதனை குறிக்கோளாகக் கொண்டு மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை முன்னெடுத்து வருவதில் தாயகம் தனக்கான ஒரு தடத்தைப் பதித்து வந்துள்ளமையும் எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் தேசியக் கலை இலக்கியப் பேரவை கனதியும் காத்திரமும் கொண்ட நிலைப்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வந்துள்ளமையைப் பேராளர்கள் தமது விவாதங்களில் எடுத்துரைத்தனர். யாழ்ப்பாணத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவை தொடங்கப்பட்டாலும் நாடு தழுவிய ரீதியிலான மக்கள் இலக்கியத்தின் பன்மைத்துவத்தை ஆரம்பம் முதல் வலியுறுத்தியே வந்தது. அதன் காரணமாக கொழும்பு மலையகம் வவுனியா கிழக்குப் பிரதேசங்களில் தமது கலை இலக்கிய வேலைகளை முன்னெடுத்து வந்துள்ளமை சுட்டிக் காட்டப்பட்டது. மேற்படி அறிக்கைகள் மாநாட்டினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. அத்துடன் எதிர்கால வேலைத்திட்டங்களும் கலந்துரையாடி முடிவாக்கப்பட்டது.


நிறைவாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக கவிஞர் இ. முருகையன் உப தலைவர்களாக பேராசிரியர் சி. தில்லைநாதன் பேராசிரியர் சி. சிவசேகரம், ஜெ. சற்குருநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளராக சோ. தேவராஜாவும் பொருளாளராக செ. நந்தமோகனும் தெரிவாகினர். மேலும் இலக்கியச் செயலாராக க. தணிகாசலம், கல்விச் செயலாளராக ந. இரவீந்திரனும் விநியோகச் செயலாளர் த. நகுலனும் நூலகச் செயலாளராக தெ. மீநிலங்கோவும் மலையகச் செயலாளராக கி. சந்திரலேகாவும், கொழும்புச் செயலாளராக மாவை வரதோயனும், யாழ்ப்பாணத்திற்கு த. சிறிப்பிரகாசும், வவுனியாவிற்கு ந. பிரதீபனும் மட்டக்களப்பிற்கு த. கோபாலகிருஷ்ணனும் இவர்களுடன் 7 பேர் செயற் குழுவிற்கும் தெரிவாகினார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் முழு நாள் மாநாடு 23ம் திகதி மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. மாலை 6 மணிக்கு 35வது ஆண்டு சிறப்பு மலர் **புது வசந்தம்** பேரவைத் தலைவர் இ. முருகையனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் ஆரம்ப உரையை தெ. மீநிலங்கோவும் வெளியீட்டு உரையை பேராசிரியர் சோ. சந்திரசேகரமும் ஆற்றினர்.

அந் நிகழ்வைத் தொடர்ந்து மக்கள் களரியின் பொறுப்பாளர் பராக்கிரம நிரியெல்ல தமது நாடகங்கள் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து "தாகம்" "கண்களில் ஈரம்" ஆகிய இரண்டு நாடகங்கள் இடம் பெற்றன. இதனை மக்கள் களரியின் பொகவந்தலாவ பிரதேச நாடகக் குழுவினர் சிறப்புடன் நிகழ்த்தினர். இந் நாடகங்களை பெருந்தொகையான பார்வையாளர்கள் பார்த்து மன நிறைவு கொண்டனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக ஈழத்துக் கலை இலக்கிய ஆய்வரங்கு இடம் பெற்றது. க. கைலாசபதி, கே. டானியல், சீ. வி வேலுப்பிள்ளை, சுபைர் இளங்கீரன், சுபத் திரன் ஆகியோரின் நினைவரங்கில் மேற்படி ஆய்வரங்குகள் இடம் பெற்றன. முழு நாளும் இடம் பெற்ற மேற்படி ஆய்வரங்கில் 'மாறும் உலகில் மக்கள் கலை இலக்கியம்' 'இன்னமும் அறிய வேண்டிய உலகம்' "இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் தமிழ் நாவல்கள்" "சமுதாய நோக்கில் ஈழத்துக் கவிதைகள்" "இலங்கையினால் சிறுகதைகளின் இன்றைய செல்நெறி" "சமூக அசைவியக்கத்தில் கல்வியியல்" "ஈழத்துப் பாடல்கள் ஒரு சமூகவியல் நோக்கு" "எதிர்ப்பண்பாட்டு நோக்கில் ஈழத்துச் சஞ்சிகைகள்" "திறனாய்வும் இளம் படிப்பாளிகளும்" "சமூக மாற்றமும் நாடகமும்" "தமிழ் சிங்கள உறவும் நாடகமும்" ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின் மீதான கருத்துரைக் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. மேற்படி கட்டுரைகளை முறையே சி. சிவசேகரம், தெ. மீநிலங்கோ, ஏ. இக்பால், சி. வன்னியகுலம், திக்வலைக் கமால், ந. இரவீந்திரன், லெனின் மதிவானம், பவானி முகுந்தன், மேமன்கவி, எஸ். சுதாகர், சி. தில்லைநாதன், பராக்கிரம் நிரியெல்ல ஆகியோர் சமர்ப்பித்தனர். இவ் ஆய்வரங்கு களுக்கு முறையே சிவ. இராஜேந்திரன், இ. தம்பையா, சோ. தேவராஜா, ஜெ. சற்குருநாதன், சி. சிவசேகரம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

அன்றைய கலை நிகழ்வுகள் மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து இரவு 9.30 மணி வரை இடம் பெற்றன. "நடமாடும் கலைஞர்கள்" சார்பாக சுனந்த புஸ்ப குமார சிங்களப் பாடல்களை வழங்கினார். "வாழ்க்கை" அரங்க ஆற்றுகை இடம்பெற்றது.. "எதிர்காலத்திற்கான நண்பர்கள்" வழங்கிய பாட்டும் நாடகமும் சிறப்பாக இடம்பெற்றன. நிறைவாக மாவை வரோதயன், நிலாக்கீற்றன், சுதாகர், மீநிலங்கோ, மதுவர்மன் ஆகியோர் கலந்து கொண்ட **"இருஞ் சற்றுப் பொறும் எல்லாம் சரிவரும்"** எனும் தலைப்பிலான கவியரங்கம் நடைபெற்றது. இதற்கு சோ. தேவராஜா கவித் தலைமை தாங்கினார். சிவ. இராஜேந்திரன் தொழிலாளர்கள் விவசாயிகளை முன்னிறுத்திய இசைப் பாடல்கைப் பாடினார். மேற்படி இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும் தேசியக் கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த மௌ. மதுவர்மன் முன் நகர்த்திச் சென்றார். நன்றியறிதலை மிதுன்ராகுல் தெரிவித்தார். ஈழத்தின் சமகால கலை இலக்கியச் சூழலில் கொள்கைத் தெளிவும் நடைமுறைச் செயற்பாடும் கொண்ட அமைப்பு ரீதியான மாநாடாகவும் ஆண்டு விழா நிகழ்வுகளாகவும் மேற்படி நிகழ்வுகள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.










தேசிய கலை இலக்கியப் பேரவையின் மாநாடு ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் உரையாற்றிய சிலரையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

செப்ரெம்பர் 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org





இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை விமர்சனம் செய்து எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்நாட்டு சஞ்சிகை புதிய ஜனநாயகத்தில் வெளிவந்த அட்டைப்படங்கள்.

இன் அணு சக்தி ஒப்பந்தத்திற்கு எதிராக இந்திய மக்கள் நடத்தி வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்




வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.